

கல்கி
மணியம்
KALKI ஜூலை 10, 1955
4 அணா



CALIFORNIAN POPPY
HAIR OIL
இந்த பாட்டிலின் அமைப்பு ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.
இப்பொழுது இந்த கவர்ச்சிகரமான
புது பாட்டிலில்
காலிபோர்னியன் பாப்பி கூந்தல் தைலம்
CPH. 16-50 TM

மலர் 14
இதழ் 50

கல்கி

பொருளடக்கம்

மன்மத வருஷம்
ஆனி 26

1955 ஜூலை 10

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


ஜூலை வெளியீடு
ஸ்ரீ யூனிடி பிக்சர்ஸ்
கல்யாணம் செய்துக்கோ
தமிழ் ஹாஸ்ய சித்திரம்
வசனம்... ஆனந்தன்
பாடல்கள்
கவி.கா.மு.ஷெரீப்....கல்யாணம்
சங்கீத டைரக்ஷன்
ரமணீஹரன்
ஸ்டூடியோ
செண்ட்ரல்
(கோவை)
கதை, டைரக்ஷன்
R. சந்தர்
விவரங்களுக்கு
ஸ்ரீ யூனிடி பிக்சர்ஸ்
சென்ட்ரல் ஸ்டூடியோஸ்
கோயம்புத்தூர்



மலர் 14 }
இதழ் 50 }

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

{ மன்மத ௵
{ ஆனி 26

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் மகாநாடு

மக்களின் உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியப் படுத்துகிற தமிழ் நாட்டு யாத்திரை ஸ்தலமான திருக்குற்றாலத்திலே, சென்ற ஜூலை மூன்றாந் தேதி தமிழ் நாட்டுக் காங்கிரஸ் சபை கூடி மக்கள் நலத்துக்கான சில முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றி யிருக்கிறார்கள்.

சுமார் நூற்றிருபத்தைந்து அங்கத்தினர்கள் கூடிப் பேசி, நாட்டின் எதிர்காலத் திட்டங்களை ஆராய்ந்து தங்கள் இலட்சியங்களைத் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மகாநாட்டுக்குத் தலைமை வகித்த தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தளபதி திரு கக்கன் அவர்கள், காங்கிரஸ் கட்சியானது கிராம மக்களின் தேவைகளை யெல்லாம் அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறவேண்டும் என்றும், காங்கிரஸ்காரர்கள் மக்களின் தேவைகளை நன்கு உணர்ந்து அவற்றிற்கான திட்டங்களை நிறைவேற்றுவதில் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களில் முக்கியமானவற்றில் ஒன்று பூதான இயக்கத்தைப் பற்றியது. பூதான இயக்கத்துக்குத் தமிழ் நாட்டின் நன்கொடைப் பங்கான இருபத்தைந்து லக்ஷம் ஏக்கர் நிலத்தைச் சேகரித்து வழங்குவதில், காங்கிரஸ் அங்கத்தினர்கள் ஊக்கத்தோடு உழைத்து இதற்கான பிரசாரத்தில் ஈடுபட வேண்டும் என்று மகாநாடு தீர்மானித்திருக்கிறது. நேருஜியின் அகில உலகக் கொள்கையையும், சமாதான முயற்சிகளையும் பக்தியோடு ஆதரித்திருக்கிறது. மற்றும், கோஆப் பிரச்னையை ஆராய்ந்து அங்கு நடைபெறும் போலீஸ் அடக்கு முறைகளை வன்மையாகக் கண்டித்தும் ஒரு தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறார்கள்.

மகாநாட்டுத் தீர்மானங்களில் எல்லாம் மிகவும் முக்கியமான ஒரு தீர்மானம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றியது. இதைக் கொண்டுவந்த திரு பக்தவத்சலம் அவர்கள் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் உணவு உற்பத்திக்கு முக்கியம் கொடுத்து நீர்ப்பாசன வசதிகளுக்கு ஏராளமான பணம் செலவு செய்யப்பட்டதைக் குறிப்பிட்டார். "இனி, தொழில்களை அபிவிருத்தி செய்து, அதனால் நாட்டின் பொருளாதார நிலையைச் சீர்ப்படுத்துவதே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கம்" என்பதை திரு பக்தவத்சலம் எடுத்துக் கூறியிருக்கிறார். இம்மாதிரியான திட்டங்களில் எது முக்கியம், எது உடனடியாகத் தேவை என்பதை யெல்லாம் நன்கு ஆராய்ந்து காங்கிரஸ்காரர்கள் இது விஷயத்தில் அரசாங்கத்துக்குச் சரியான யோசனைகள் கூறவேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார். இந்தத் தொழில் திட்டம் நல்ல முறையில் உருவாகுமேயானால், குறைந்த வருமானம் உள்ளவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதோடு, வேலையில்லாத் திண்டாட்டமும் சாத்தியமான அளவுக்கு நீங்கும் என்பதை அவர் எடுத்து விளக்கியிருக்கிறார். அதே சமயம் தொழில் நிலையங்கள் ஸ்தாபிப்பது சம்பந்தமான பல சந்தேகங்களும் மகாநாட்டில் ஆராயப்பட்டிருக்கின்றன. இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய திரு கிருஷ்ணமாச்சாரி அவர்கள் பொதுவாக இம்மாதிரித் திட்டங்களில் எல்லாம் தெற்கு வடக்கு என்று பேதம் கற்பித்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை யென்று கூறி, தென்னாட்டில் தொழில் வளர்ச்சி அதிகம் இல்லாதிருப்பதற்குக் காரணம் இங்கே நிலக்கரி கிடைக்காதிருப்பதும், மூலதனம் வழங்கும் செல்வந்தர்கள் அதிகமாக இல்லாதிருப்

பதுமே என்றும் கூறினர். ஆயினும் நெய்வேலித் திட்டத்தின் மூலம் மின்சாரம் தயாராகுமானால், இந்த நிலை மாறும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

எது எவ்வாறாயினும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெரிய தொழில்கள்யாவும் மற்றப் பிரதேசங்களிலேயே அமைந்து விடாத முறையில், தமிழ் நாட்டில் பெரியதொழில் நிலையங்கள் ஏற்படுவதற்கு வசதி செய்ய வேண்டும் என்றும், இங்கே இரும்புச்சாலை முதலிய பெருந் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதில் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கோரித் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

அகில இந்திய அடிப்படையில் இயங்கும் அரசாங்கமானது, அதன் ஆட்சிக்கு உரிய விசாலமான நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமே பெரிய தொழில்கள் பெருகுவதற்கு வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தித் தொழில்களை விருத்தி செய்ய வேண்டியது அதன் கடமையாகும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது மத்திய அரசாங்கம் இந்தக் கடமையை உணர்ந்து வழி வகைகள் ஆக்கும் என்றும் இவ்விஷயத்தில் எல்லா மக்களின் பூரண ஒத்துழைப்பும், அரசாங்கத்துக்குக் கிடைக்கும் என்றும் நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறோம்.

பிரிட்டிஷாரின் ஆட்சேபணை

பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவிலிருந்து வெளியேறியபோது இந்தியாவுக்குச் சொந்தமான எதையும் எடுத்துச் செல்லவில்லை. அதன் பயனை இந்தியர்களின் நல்லெண்ணத்துக்கும் மதிப்புக்கும் பிரிட்டிஷார் பாத்திரர்களாக முடிந்தது. ஆனால், இப்போது எழுந்துள்ள ஒரு பிரச்னையில் பிரிட்டிஷார் அதே பெருந்தன்மையையும் ராஜதந்திரத்தையும் காட்டுவார்களா என்ற சந்தேகம் எழுந்திருக்கிறது.

அதாவது லண்டனில் இந்தியா மந்திரி காரியாலயப் புத்தகசாலை (India Office Library) ஒன்று இருக்கிறது. அதை மாபெரும் பொக்கிஷம் என்றே சொல்லலாம். தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம், வங்காளி, குஜராத்தி, ஹிந்தி, மகாராஷ்டிரம், பஞ்சாபி முதலிய இந்திய பாஷைகளில் பதினாயிரக் கணக்கான நூல்களும், ஏட்டுச் சுவடிகளும் அந்தப் புத்தக சாலையில் இருக்கின்றன. அவை விலை மதிக்க முடியாத அரும் பெரும் சரித்திரப் பொக்கிஷங்களாகும். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி இருந்த காலத்தில் இந்தப் பொக்கிஷங்கள் பிரிட்டனுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. அவை, இந்தியாவுக்கு, பாரத மக்களுக்குச் சொந்தமானவை. இந்தியாவின் நிர்வாகத்தை இந்திய மக்களிடம் பிரிட்டிஷார் ஒப்புவித்த போதே, பிரிட்டிஷ் சர்க்காரின் நிர்வாகத்தில் உள்ள இந்தியா புத்தக சாலையையும் இந்தியர்களிடம் ஒப்புவித்திருக்க வேண்டும். அவ்விதம் செய்ய அவர்கள் தவறியதுடன், இப்போது அவ்விஷயமாக ஆட்சேபணையையும் கிளப்பியிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் மக்களையும் பிரிட்டிஷ் தேசத்தையும் பற்றிய சரித்திரக் குறிப்புக்கள் உள்ள புத்தகங்களை அவ்வாறு வைத்துக் கொள்ள விரும்பினால், அர்த்தம் உண்டு. ஆனால் இந்திய மக்களையும் இந்திய சரித்திரத்தையும் பற்றிய நூல்களை இந்தியாவுக்கு அனுப்பி விடுவதே நியாயம். இந்தியா பாகிஸ்தான் இரு நாடுகளுக்கும் உரிய நூல்களைச் சுமுகமான வழியில் பிரித்துக் கொள்ளும்படி வழங்கி விடலாம். இந்தியா பாகிஸ்தான் என்ற பிரச்னையை வைத்துக் கொண்டு லண்டனில் சிக்கல் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை.

பரிபூரண சுதந்திரத்தை இந்தியாவுக்குத் திருப்பித் தந்த பிரிட்டிஷ் நிர்வாகம் இந்த நூல் நிலைய விஷயத்தில் ஆட்சேபணை சொல்வது., 'யானையைக் கொடுப்போம். துறட்டியைக் கொடுக்க மாட்டோம்' என்று சொல்வதுபோல் இருக்கிறது. இது விஷயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் நியாயத்தைக் கடைப்பிடிப்பார்கள் என்று எதிர்பார்ப்போமாக.

விவேகத்துடன் நடந்து கொள்வார்களா?

கோவாவில் போர்ச்சுகல் அதிகாரிகளின் கொடிய அடக்குமுறைகளால் பாரத நாடெங்கும் மனக் கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அவ்விஷயமாகப் பல இடங்களிலும் கண்டனக் கூட்டங்கள் நடந்திருக்கின்றன.

கோவா விடுதலை இயக்கத்தில் பார்லிமெண்டு அங்கத்தினர்களும் சட்டசபைப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள வேண்டும் என்ற அபிப்பிராயம் பலமடைந்து வருகிறது. அவ்விஷயமாக, டில்லியில் நடைபெறவிருக்கும் 'கோவா மகாநாட்'டில் ஒரு முடிவு செய்ய வேண்டும் என்று சென்ற வாரம் சென்னையில் கோவா சர்வ கட்சி பார்லிமெண்டு கன்வென்ஷனில் தீர்மானித்திருக்கிறார்கள். ராஜாஜி மண்டபத்தில் நடந்த கன்வென்ஷன் கூட்டத்தில் இந்திய மக்கள் சபை அங்கத்தினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பேச்சு வார்த்தைகள் மூலம் கோவா பிரச்னைக்கு முடிவு காண இந்திய சர்க்கார் கடைசியாக ஒரு முறை முயற்சிக்க வேண்டும்; அம்முயற்சி வெற்றி பெறாவிடில், இந்தியாவில் காலனி ஆட்சியைப் பூண்டோடு ஒழிப்பதற்கான நடவடிக்கைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்று இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொள்வதாக அக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

போர்ச்சுகல் அதிகாரிகளின் அடக்குமுறை தர்பார் பொதுமக்களை மாத்திரமல்ல, பிரமுகர்களையும் பார்லிமெண்டு அங்கத்தினர்களையும் கொதித்து எழும்படி செய்திருக்கிறது.

கோவாப் பிரச்னையைத்தீர்க்க இந்தியா பலாத்கார முறைகளைக் கைக்கொள்ளாது எனச் சமீபத்தில் ஜவாஹர்லால் நேரு கூறியதிலிருந்து, போர்ச்சுகல் அதிகாரிகளின் ஆர்ப்பாட்டம் அதிகமாகி விட்டதென்று தெரிகிறது. பிரிட்டிஷாரோ, பிரஞ்சுக்காரர்களோ பாரத நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு இந்தியா பலாத்கார முறைகளைக் கைக்கொள்ளவில்லை. இதை உணர்ந்து இனியாவது போர்ச்சுகல் அதிகாரிகள் விவேகத்துடன் நடந்து கொள்வார்களா!

இந்திய அமெரிக்க உறவு

அமெரிக்க நாட்டின் சுதந்திரப் பிரகடனம் கையெழுத்தாகி இன்று நூற்று எழுபத்தொன்பது ஆண்டுகள் ஆகின்றன. ஒவ்வொரு வருஷத்திலும் ஜூலை நாலாந் தேதியன்று கொண்டாடும் முறைப்படி, சென்ற திங்கட்கிழமையன்று சென்னை அமெரிக்க ஸ்தானிகர் இல்லத்தில் இந்த நூற்று எழுபத்தொன்பதாவது ஆண்டு தினம் கொண்டாடப்பட்டது. மேனாட்டு வழக்கப்படி இம்மாதிரி வைபவங்களில் அமெரிக்கத் தலைவருக்கு வாழ்த்துக் கூறிப் பேசுகிற விருந்துச் சொற்பொழிவை நமது தலைவர் ராஜாஜி நிகழ்த்தி யிருக்கிறார். அந்தச் சொற்பொழிவில் சுதந்திரத்தின் அடிப்படையையும், அமெரிக்கா-இந்தியா இரண்டு நாடுகளுக்கும் உள்ள உறவையும், உலக சமாதான இலட்சியத்தையும் ராஜாஜி எடுத்துக் கூறியிருக்கிறார்:—

"இது அமெரிக்க சுதந்திரத்தின் நூற்று எழுபத்தொன்பதாவது ஆண்டு விழா. இது அமெரிக்க மக்களுக்குத் தங்கள் சூளுறவைப் புதுப்பித்துக் கொள்ளும் திருநாளாகும். மேலும், அடிமைத் தளையை—எந்த உருவத்தில் இருந்தாலும் அந்தத் தளையை—வெறுத்து, தேச சுதந்திரத்தை மதித்துப் பேணுகிற உலக மக்கள் அனைவருக்கும் மன எழுச்சி தரும் ஒரு தினம் இது.

இந்திய சமூகம், மிகத் தொன்மையான உலக மக்கட் தொகுதிகளில் ஒன்று. மனித நாகரிகத்தையே உருவாக்கிய ஆதிகாரண புருஷர்களில் ஒரு தொகுதி.

சுதந்திர இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே உள்ள நட்பு உண்மையானது, நிலையானது. இந்தியாவின் புராதனப் பண்பாடானது, இந்த பூமியில் உள்ள எல்லா நாடுகளுடனும் நேசமாக இருப்பதே. வெளிப்படையான வாழ்க்கை வேறுபாடுகள் எப்படி யிருந்தபோதிலும், மக்கள் அனைவருக்குள்ளும் எல்லாவற்றையும் மிஞ்சிய அந்தரங்க ஒருமைப்பாடும் ஒரு பொதுப் பிணைப்பும் இருக்கவே செய்கிறது. மற்ற நாடுகளோடு இந்தியா ஏற்படுத்திக் கொள்ளுகிற எந்த நட்பினாலும், ஏற்கனவே அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையே ஏற்பட்டுள்ள நேசத்தின் நல் விளைவு அதிகரிக்குமே யன்றி, அந்த நேசத்தின் பலமோ அளவோ குறைந்து விடாது.

யுத்தம் என்ற மூர்க்கத்தனத்தை உலகம் விட்டொழித்துவிட முடியாமற் போனாலும், அநாகரிக முறைகளையும், உலகத்தின் எதிர்கால வாழ்வுக்கே கேடு விளைவிக்கும் ஆயுதங்களையும் நாம் தவிர்ப்போமாக. கடவுள் அருளால் நம்முடைய பொது நோக்கம் நிறைவேறுமாக!"

அட்டைப்பட விளக்கம்

தில்லைப் பதியிலே

'அரியும் சிவனும் ஒண்ணு —'

என்று ஒரு பாமரப் பாடல் தமிழகத்திலே வழங்கி வருகிறது. இந்த அரிய உண்மைக்கு ஸ்தூல சொரூபமாக விளங்குவது சிற்றம்பலவன் ஆனந்த நடம் பயிலும் சிதம்பரம். அங்கு ஒருபுறம் ஆனந்தக் கூத்தாடுகிறான் நடராஜ மூர்த்தி. மற்றொருபுறம் ஆதிசேஷ சயனத்தில் அறிதுயில் கொண்டு காட்சி யளிக்கிறான் கோவிந்தராஜப் பெருமான். இவ் விரு கோலங்களையும் நமது பக்தர்கள் நெக்கு நெக்குருகிப் பாடியிருக்கிறார்கள். அந்த அழகை யெல்லாம் தமிழ்ப் பேராசிரியர் திரு ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் இவ்விதழில் விளக்கியிருக்கிறார்கள். சிதம்பரம் சபாநாயகர் கோவில் கும்பாபிஷேகத்தை யொட்டிய விசேஷக் கட்டுரையும் படங்களும் வேறு பக்கத்தில் வெளியாகி யிருக்கின்றன.

இறைவனின் இவ்விரு கோலங்களையும், இவற்றில் ஈடுபட்ட பக்தமணிகளையும் நமது ஓவியர் மணியம் இவ்விதழ் அட்டைச் சித்திரமாக வழங்கி யிருக்கிறார்!

ஆடும் சிதம்பரம்!

"மயில்"

தில்லைப் பதியிலே நடனமிடும் நடராஜத் திருவுருவமும், அவரது ஆனந்தத் தாண்டவத்தின் அழகும், அந்த அருள் தாண்டவத்திலே பொதிந்துள்ள கலைச் சிறப்பும் கலை உலகிலுள்ள அனைவரையும் கவர்ந்த விஷயம். பிரபல அணு விஞ்ஞானி ஐன்ஸ்டைனும் அந்த ஆனந்தக் கூத்தின் திருவுருவத்தைப் பார்த்துப் பேருவகை எய்தினர். "உலகத் தோற்றம், இயக்கம் இவை பற்றி நான் கொண்டிருந்த எண்ணங்கள் சபாபதியின் நடனத்தில் அடங்கியுள்ளன" என்று உவகைக் களிப்பிலே கூறினர்.

இத்தகைய ஆனந்தக் கூத்தாடும் அம்பலத்தரசனின் தில்லை ஸ்தலம் தலங்களுள் எல்லாம் தலை சிறந்து விளங்குகிறது. "ஹிருத் புண்டரிகரம்" என்று தில்லை ஸ்தலம் வேதங்களால் போற்றப்படும் பெருஞ் சிறப்புடையது. தென்னாட்டிலேயே கோயில் என வழங்கப்படுவது தில்லை நடராஜர் கோயிலைத்தான். ஞான ஆகாயமாக விளங்கும் இந்த ஸ்தலம் திருச்சிற்றம்பலம் என்றும் பொன்னம்பலம் என்றும் வழங்கி வருகிறது.

* * *

சுமார் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் சோழ நாட்டை அநபாய சோழன் அரசாண்டு வந்தான். அவனது சபையிலே சேக்கிழார் அமைச்சராகப் பணியாற்றி வந்தார். அநபாய சோழன் ஒரு நாள் தனது அமைச்சர் சேக்கிழாரிடம் திருத்தொண்டர்களாகிய சிவனடியார்களின் சரிதங்களைக் காவியமாக்கித் தர வேண்டினன். சேக்கிழாரும் மன்னனின் வேண்டுகோளுக் கிணங்கினர். சிதம்பரம் சென்று நடராஜப் பெருமானை வேண்டித் துதித்தார். தில்லைப் பதியானும் பக்தரின் ஆசையை நிறைவேற்ற, "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுத்தார். சேக்கிழார் பெருமானும் அந்த அடியைக் கொண்டு திருத் தொண்டர்களின் பெருமையைப் பாடினர். சேக்கிழார் அருளிச் செய்த பெரிய புராணம் பொன்னம்பலத்திலேயே அரங்கேறியது. சிதம்பரத்தில் அம்பலவாணனின் ஆனந்தக் கூத்தை அனுபவித்த சேக்கிழார், "ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக் கூத்தாடும் நாதனர்" என்று கூறினர்.


பக்தர்களும், நாயன்மார்களும் போற்றி வணங்கும் நடராஜப் பெருமானின் ஆலயத்திலுள்ள கலைச் செல்வங்களும், தெய்வ விக்கிரகங்களும் நமது கண்முன்னலே நாள் தோறும் சிதிலமாகி வந்தன.

முற்காலத்தில் கோயில்கள் பழுதுபடாமல் மன்னர்கள் பாதுகாத்து வந்திருக்கின்றனர். சிதம்பரம் நடராஜப் பெருமானின் ஆலயத்திலுள்ள ஒரு சாசனத்தில் உள்ளதையும் பாருங்கள்:


"பாண்டிய மன்னன் சுந்தர பாண்டியன் திக் விஜயம் கிளம்பிப் போய், லங்கா ராஜ்யத்தைக் கைப்பற்றி, காடக அரசனை அழித்து, காஞ்சிபதியான மன்னனைக் கொன்று, போரில் சீர்குலைந்த படையுடன் காகதீய மன்னனையும் விரட்டியடித்தான். இம் மன்னன் அனேக துலாபாரங்கள் ஏறிய பொன்னைச் சிற்றம்பலத்தில் ஆடும் சபாபதியின் அம்பலத்தை விஸ்தாரமாக நிர்மாணிக்க அளித்தான்" என்று அந்த சாஸனத்தில் காணப்படுகிறது. சுந்தர பாண்டியனால் தோற்கடிக்கப்பட்ட அரசர்களின் மனைவியர்கள் பாண்டிய மன்னனிடம் வந்து, 'அரசே! எங்கள் புருஷனுக்கு உள்ள களங்கத்தை உன்னுடைய கீர்த்தியினால் போக்கடிக்க வேண்டும்' என்று யாசித்து லக்ஷக்கணக்கான முத்துக்களையும் மணிகளையும் கொண்டு வந்து கொட்டி வணங்கினர்களாம். அவற்றையெல்லாம் ராஜ சூரியனை சுந்தர பாண்டியன் சிற்றம்பலத்தில் ஆடும் சபாபதிக்கு அளித்து விட்டான்.

பல நூற்றுண்டுகள் கழிந்து விட்டன. இப்பொழுது மன்னர் ஆட்சி இல்லை; குடியாட்சி நிலவுகிறது. நாம் எல்லோரும் இந் நாட்டு மன்னர்களாகி விட்டோம். 'இந்நாட்டு மன்னர்'களின் முயற்சியினால் தில்லைச் சிற்றம்பலத்திலுள்ள சபாநாயகர் ஆலயத்துக்கு மகா கும்பாபிஷேகம் நடந்தேறியது. ஜூலை மாதம் 2-ந் தேதியிலிருந்து தொடங்கி 7-ந் தேதிவரை கும்பாபிஷேகத்தை யொட்டிச் சமயச் சொற்பொழிவுகளுக்கும், இன்னிசைக் கச்சேரிகளுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஜில்லா கலெக்டர் திரு ஏ. உத்தண்டராம பிள்ளை அவர்கள் இவ் விழாவைத் துவக்கி வைத்தார்கள். 'தில்லை வாழ் அந்தணர்' பரம்பரையைச் சேர்ந்த திரு வி. வி. சுவர்ண வெங்கடேச தீக்ஷிதர் அவர்கள் இவ்விழாவுக்குத் தலைமை தாங்கினர்கள். சமயப் பிரசாரத் திட்டத்தைத் திரு எஸ். சச்சிதானந்தம் பிள்ளை சிறப்பாக நடத்தி வைத்தார்கள்.

"உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்!"



ஆடும் சிதம்பரம்
1
2
3
4
5
6
8

அகில உலக வன மகோத்சவம்




உலகத்துக்கு ஒரு பொது மரம்

கோத்தலைவாலர் மலையை ஏமாற்றப் பார்க்கிறார் !



அவர்கள் சுமை !



பள்ளிக்கூடங்கள் திறந்தாகி விட்டன !

என்ன சேதி?

பி. ஸி. ராயின் பிறந்த நாள்

வங்கத்தின் முதன் மந்திரி டாக்டர் பி. ஸி. ராய் அவர்களின் எழுபத்து நான் காவது பிறந்த நாளை ஜூலை மாதம் முதல் தேதி வங்க மக்கள் குதூகல மாகக் கொண்டாடினார்கள். டாக்டர் ராய் வங்கத்துக்குப் பல துறைகளில் தமது நீண்ட நெடும் வாழ்க்கையில் அருந் தொண்டுகள் புரிந்திருக்கிறார். வைத்திய ராக எத்தனையோ பேர்களின் அன்புக்குப் பாத்திரமாகி யிருக்கிறார். "டாக்டர் ராய் சிகிச்சை செய்ய ஒப்புக் கொண்டு விட்டாரா? அப்படியானால், நான் இனி மேல் நிம்மதியாக இருக்கலாம்!" என்று மகாத்மா காந்தியடிகள், ஒரு நோயாளிக்கு டாக்டர் ராய் சிகிச்சை செய்ய ஆரம்பித்த போது கூறினார். டாக்டர் ராய் சில காலம் கல்கத்தா சர்வகலாசாலை உப அத்யக்ஷராக இருந்து பணியாற்றி யிருக் கிறார். அதுமட்டுமா? பொருளாதாரம், வர்த்தகம், தொழில் ஆகிய எல்லாத் துறைகளிலும் அரும்பணி புரிந்திருக்கிறார். எல்லாவற்றையும் விட, பிளவுபட்ட வங்கத்தை மனம் முறியாமல், தைரிய மூட்டி நிற்கச் செய்திருக்கிறார். வங்கத்தின் இந்த அரும் புதல்வரின் எழுபத்து நான்கா வது பிறந்த நாளுக்கு, வங்க கவர்னராக இருந்து வங்க மக்களின் உள்ளத்தைக் கவர்ந்த தலைவர் ராஜாஜி அனுப்பிய வாழ்த்துச் செய்தியில்:—

"தங்கள் எண்ணத்தைத் தங்கள் உள்ளத்தை உணர்ந்து, எதிர்ப்பைக் கண்டு அஞ்சாமலும், பொதுஜன ஆதர வைக் கண்டு மயங்கிடாமலும் வேலை செய் யும் திடம் படைத்தவர்கள் நம்மில் சிலரே இருக்கிறார்கள். அத்தகையவர்களிடம் நாட்டு மக்களின் நலன்களையும், அரசாங்க நிர்வாகத்தையும் தைரியமாக ஒப்படைக்க லாம். இத்தகுதி பெற்ற ஒரு சிலரில் சிறப்பானவர் டாக்டர் பிதான்சந்திரராய். அவருடைய நட்பைப் பெற்று மகிழ்ந்த வர்களில் நானும் ஒருவன். இன்று அவ ருக்கு எழுபத்துநான்கு வயதாகிறது. அவரைவிட இரண்டு வயது பெரியவனான நான் என் ஆசிகளையும் வாழ்த்துக் களையும் அனுப்புகிறேன்."




பெரம்பூர் லோகோ வொர்க்ஸ் மானேஜர் ஸ்ரீ வி. எஸ். ராமஸ்வாமி அவர்களின் புதல்வி ஸ்ரீமதி விஜயலக்ஷ்மிக்கும், சிரஞ்சீவி கோபால சாமி (எம். ஏ., ஐ. ஆர். எஸ்.)க்கும் ஜூன் 30உ அன்று மயிலாப்பூரில் மிகவும் சிறப்பா கத் திருமணம் நடைபெற்றது. நண்பர்களும் உறவினர்களும் திரளாக விஜயம் செய்து மணமக்களை ஆசிர்வதித்தனர். மணமக்க ளுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகளும் பரிசுகளும் வந்து குவிந்தன. வாழ்க, மணமக்கள்!

சென்னையில் ஒரு குருகுலம்

சென்னை திருவொற்றியூர் நெடுஞ் சாலையில் 210 எண்ணிக்கையுள்ள இல்லத் தில் சென்ற ஜூன் 26ந் தேதி யன்று சென்னை முதன் மந்திரி திரு காமராஜர் கன்யா குருகுலத்தைத் திறந்து வைத்தார். சென்னை மாதர் காங்கிரஸ் சார்பில் இந்தக் கன்யா குருகுலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பதின்மூன்று வயது முதல் இருபது வயது வரையுள்ள பெண்களுக்குத் தனி இடத் தில் அவர்களுக்கு வேண்டிய கல்வி, கைத் தொழில், சுகாதாரம், குடும்பப் பரா மரிப்பு, குழந்தை வளர்த்தல் முதலிய விஷயங்களைப்—பெண்மைக்கும் குறிப்பா கத் தாய்மைக்கும் அவசியமான விஷயங் களைப் — போதிக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இக் குருகுலத்தைப் பற்றி முழு விவ ரங்கள் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதிக் கேட்டுக் கொள்ள லாம்: ஸ்ரீமதி சரஸ்வதி பாண்டுரங்கம், கன்யா குருகுல அலுவலகம், 82, பிராட்வே, சென்னை.

இத்தகைய குருகுலங்கள் சென்னையில் பேட்டைக்குப் பேட்டை ஏற்பட்டால் உண்மையிலேயே பெண் இனத்துக்குப் பெருந் தொண்டு செய்ததாகும்.



தஞ்சை ஜில்லாவிலுள்ள ஏனங்குடி கிராமத்தில் சேகல் பண்டு ஆஸ்பத்திரியை ஒட்டி ஒரு பேரம் பிரசவ விடுதி யொன்றை, அக் கிராமத்தைச் சேர்ந்த பிரபல மிராசுதார் ஸ்ரீ ஆர். ராதாகிருஷ்ண நாயுடு தம் தந்தையாரின் ஞாபகார்த்தமாக எழுப்ப ரூ. 10,000 நன்கொடை வழங்கினார். அந்தக் கட்டடத்துக்குத் தஞ்சை ஜில்லா கலெக்டர் ஸ்ரீ வி. ஏ. ராமகிருஷ்ணன் அவர்கள் 20-6-55 அன்று அஸ்திவாரக் கல் பதித்தார். இந்தக் கால்கோள் விழாவுக்கு ஜில்லா வைத்திய அதிகாரி டாக்டர் என். பாலசுப்பிரமணியன் எம். பி. பி. எஸ்., அவர்கள் தலைமை வகித்தார். விழா சிறப்பாக நடைபெற்றது.

எகிப்தில் எதிரொலி

வினோபா அடிகள் ஆரம்பித்த பூதான இயக்கத்துக்கு இந்தியாவில் அமோக ஆதரவு கிடைத்து வருகிறது. இந்த சந்தர்ப்பத்தில் எகிப்திலிருந்து வந்துள்ள ஒரு செய்தியைப் பாருங்கள். மாஜி மன்னர் பரூக்கின் நிலங்களும் இன்னும் சில நிலம் படைத்த பிரமுகர்களின் நிலங்களும் அந்த நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்த உழவர்களுக்கே வழங்கப்பட்டு விட்டனவாம். இதை எகிப்துப் பிரதமர் கர்னல் நஸார் அறிவிக்கிறார். சட்டம் பலாத்காரம் முதலிய வற்புறுத்தல் இன்றி சமாதான சுயநிர்ணய முறையில் நடைபெற்று வரும் பாரத நாட்டுப் பூதான இயக்கம் இன்னும் பல இடங்களில் பரவும் என்று எதிர்பார்க்கிறோம்.

பட்டப் பகலில்!

சென்னை தினசரிப் பத்திரிகை ஒன்றில் வெளியான இந்தச் செய்தியைப் படித்துப் பாருங்கள் :

"ஸ்ரீ ஞானவடிவேலு ரயில்வேயில் ஒரு குமாஸ்தா. முதல் தேதியன்று ஆபீசிலிருந்து தம்முடைய சம்பளத்தை வாங்கினார். அதைச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு சைக்கிளில் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தார்.

அப்போது இரவு ஒன்பது மணி இருக்கும். சைனபஜாரிலிருந்து பிராட்வேயில் திரும்பிச் சுமார் நூறு கெஜ தூரம் சென்றிருப்பார். அச் சமயம் நாலுபேர் நாலு சைக்கிளில் அவரைக் கடந்து சென்றனர். திடீரென்று அவர்கள் தங்கள் சைக்கிளிலிருந்து இறங்கி அவரை வழி மறித்தனர். குமாஸ்தா சைக்கிளிலிருந்து கீழே இறங்கும்படி நேர்ந்தது.

நால்வரும் இவரைச் சூழ்ந்து கொண்டனர். ஒருவர் ஆளைப் பிடித்துக்கொண்டார். மற்றொருவர் ஒரு பேனாக் கத்தியைக் காட்டிப் பயமுறுத்தி அவர் பையைச் சோதனை போட்டார். குமாஸ்தா கூச்சல் போடவே அங்கு ஐம்பது, அறுபது பேர்களுக்கு மேல் கூடி விட்டனர். ஆனால், குமாஸ்தாவைச் சோதனை போட்டவர் நிதானமாக அவரிடமிருந்த 111 ரூபாயையும் எடுத்துக் கொண்டார். அவசரப்படாமல் அவர்கள் சைக்கிளில் ஏறிக்கொண்டு சென்று விட்டார்கள். அங்கு கூடியிருந்த ஜனங்கள் அந்தக் கொள்ளையை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றார்கள்."


இந்தச் செய்தியைப் படிப்போர் மனக் கொதிப்பும் ஆத்திரமும் அடையாமல் இருக்க முடியுமா? சமீபத்தில் ரயில் வண்டியில் கொள்ளையடிக்க வந்த திருடனை இரண்டு பெண்கள் தீரமாக ஏமாற்றிப் போலீசாரிடம் ஒப்புவித்தார்களாம். ஆனால் ஒரு ஏழைக் குமாஸ்தாவை பேனாக் கத்தித் திருடர்கள் கடு ரஸ்தாவில் நிதானமாகக் கொள்ளையடித்ததை அறுபது 'வீரர்கள்' வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றார்கள் என்பது வெட்கித் தலை குனிய வேண்டிய விஷயம் அல்லவா? அவர்களில் ஒரு சிலருக்குக் கூடத் திருட்டைத் தடுக்கவும் திருடர்களைப் பிடிக்கவும் தைரியம் இல்லாமற் போனது நம்முடைய சமூகத்தின் இன்றைய நிலைமையையே பிரதிபலித்துக் காட்டுகிறது. இது நிர்வாகத்துக்கு மட்டுமன்றி, மக்களின் ஆற்றல் நிலைக்கே இழுக்காகும்.

கப்பல் கம்பெனியின் கடமை உணர்ச்சி

சமீபத்தில் "எம்பிரஸ் ஆப் ஆஸ்திரேலியா" என்ற கப்பல் பிரிட்டனிலிருந்து கனடாவுக்குச் சென்று கொண்டிருந்தது. அக்கப்பல் கடலில் ஆறு மணி நேரம் சென்ற பின், அதாவது சுமார் அறுபது அல்லது எழுபது மைல்களுக்கு மேல் சென்ற பின், கப்பலிலிருந்த ஒரு பிரயாணிக்குக் குடல் நோய் அதிகமாகிவிட்டது. உடனே அவருக்கு ரண சிகிச்சை செய்தாலன்றி, அவர் பிழைப்பது அரிது என்று கப்பல்வைத்தியர் அபிப்பிராயப்பட்டார். ஆனால், அச்சமயம் கடல் கொந்தளிப்பு காரணமாகக் கப்பல் ஆடிக்கொண்டிருந்ததால், ரணசிகிச்சை செய்வது முடியாத காரியம். வைத்தியர் அவ்விஷயத்தைக் கப்பல் தலைவருக்கு அறிவித்தார். அதைக் கேட்ட காப்டன் நோயாளி எக்கேடு கெட்டாவது போகட்டும் என்று பேசாமல் இருக்கவில்லை. உடனே அவர் பிரிட்டனில் உள்ள மேற்படி கப்பல் கம்பெனிக்கு அவ்விவரத்தை ரேடியோ மூலம் அறிவித்தார். கப்பல் கம்பெனித் தலைவர் உடனே என்ன செய்தார் தெரியுமா? கப்பலைத் திருப்பி பிரிட்டனுக்கே கொண்டு வந்து விடும்படி உத்தரவிட்டார். கப்பல் திரும்பித் துறைமுகத்துக்கு வந்ததும் அந்த நோயாளியை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று ரண சிகிச்சை செய்து, அவரது உயிரைக் காப்பாற்றினார்கள். பிறகு ஒரு நாள் தாமதித்து அந்தக் கப்பல் கனடாவில் போய்ச் சேரவேண்டிய இடத்தை அடைந்தது.

அதாவது ஒரே ஒருவருடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியார், பல மைல்கள் தூரம் சென்ற கப்பலைத் திருப்பிக் கொண்டு வருவதால் ஏற்படும் செலவையோ, மேற்படி கப்பலில் இருந்த நூற்றுக் கணக்கான பிரயாணிகளின் அசௌகரியத்தையோ இலட்சியம் செய்யவில்லை. தனி ஒருவருடைய உயிரையே பெரிதாகக் கருதினார்கள். அக்கம்பெனியாரின் இந்தக் கடமை உணர்ச்சியை எவ்வளவு பாராட்டினாலும் தகும் அல்லவா?

இச்சம்பவத்தை உலகநாடுகளில் உள்ள சர்க்கார்கள் கற்றுக் கொள்ள வேண்டிய சிறந்த பாடம் என்று சொல்லலாம். லட்சக்கணக்கான மக்களை நொடிப்பொழுதில் அழிக்கக்கூடிய நாசக் கருவிகளுக்காக வல்லரசுத் தலைவர்கள் கோடி கோடியாகச் செலவு செய்வதைப் பார்க்கிறோம். வல்லரசுத் தலைவர்களின் இருதயத்திலும் ஜீவகாருண்யமும் கடமை உணர்ச்சியும் தோன்றுமாயின் மானிட வர்க்கத்துக்கே நன்மை ஏற்படும். யுத்தம் ஒழிவதற்கும் உலக சமாதானம் ஏற்படுவதற்கும் வழி உண்டாகும்.



திருச்சிராப்பள்ளி தென் மதராஸ் எலக்டிரிக் சப்ளை கார்ப்பொரேஷனைச் சேர்ந்த ஸ்ரீ பி. என். ராமன் அவர்களின் புதல்வி சௌ. விசாலாக்ஷிக்கும், பம்பாய் கம்பெனியைச் சேர்ந்த ஸ்ரீ பி. ஏ. மிருத்யுஞ்சயன் அவர்களுக்கும் சென்ற 23-5-55ந் தேதி யன்று பையலூர் கிராமத்தில் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. வாழ்க, மணமக்கள்!

அநாகரிகப் போட்டி

உலகில் பல பகுதிகளில் அழகுப் போட்டி என்ற பெயரில் ஒரு அநாகரிகப் போட்டி நடந்து வருகிறது.

இப்போட்டி சென்னையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த போது இப்பத்திரிகையில் எழுதப்பட்டிருந்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

சமீபத்தில் கிரீஸிலிருந்து ஒரு செய்தி வந்திருக்கிறது. அந்நாட்டில் ஏதென்ஸ் நகரில் சுமார் இரண்டாயிரம் பேர் இப்போட்டியை வன்மையாகக் கண்டித்துத் தெருவில் பிரார்த்தனை கீதங்கள் பாடிக் கொண்டு போனார்களாம்.

இந்த அழகுப் போட்டிக்கு இப்பொழுது எதிர்ப்பு மேல் நாட்டிலேயே எழுந்திருக்கிறது. இது உலகத்துக்கு நல்ல காலம் பிறக்கிறது என்பதற்கு அறிகுறியாகும்.

உடலழகுக்கெல்லாம் மேலான அழகு ஒன்று உண்டு. அதுவே உள்ளத்தின் அழகு. அதற்குப் போட்டி வைத்தார்களானால் நாம் குதூகலமாகக் கலந்து கொள்ளலாம்.

76. கண்டேன் சீதையை

சக்கரவர்த்தித் திருமகன்

ராஜாஜி

சுக்ரீவன் ஊகித்துப் பேசிய பேச்சு ராமனுடைய காதில் அமிருதம் போல் சுவைத்தது. வானரர்கள் வருவதை அவர்கள் ஆர்வத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் போது மேலே ஆகாயத்தில் பெரும் கலகலப்பு கேட்டது. வானரக் கூட்டம் கோஷம் செய்துகொண்டுவந்து இறங்கினார்கள்.

* * *

ஹனுமானை முன்னிட்டுக்கொண்டு அங்கதனும் வானரர்களும் வேகமாகக் கிளம்பி ராம லக்ஷ்மணர்களுடன் அரசன் சுக்ரீவன் இருந்த இடம் சென்றார்கள்.

ஹனுமான் ராமசந்திரனை வணங்கி, "கண்டேன் புனித தேவியை! க்ஷேமமாக இருக்கிறாள்! அவளைத் திக்கு நோக்கி வணங்குகிறேன்" என்று தெற்கே திரும்பி வணங்கினான்.

இப்படி சீதையின் உயிருக்கும் சீலத்துக்கும் ஏதொரு திங்குமின்றி அவள் க்ஷேமமாக இருப்பதை ஹனுமான் சக்கரவர்த்தித் திருமகனுக்கு முதலில் உணர்த்தினான்.

சுக்ரீவனும் லக்ஷ்மணனும் ராமனைக் கட்டியணைத்து ஆனந்த பரவசமானார்கள்.

"வானரங்காள்! சீதை எங்கே இருக்கிறாள், எப்படி இருக்கிறாள், எப்படிக் கண்டீர்கள்? எல்லாம் விவரமாகச் சொல்லுங்கள். எனக்குப் பொறுக்க முடியவில்லை" என்றான் ராமன்.

"கண்டதையும் நடந்ததையும் எல்லாம் ராமசந்திரனுக்கு நீரே சொல்ல வேண்டும்" என்று வானரங்கள் கேட்டுக் கொள்ள, ஹனுமான் சீதையை தியானித்து, திசை நோக்கித் தலை வணங்கி நமஸ்கரித்து விட்டு நடந்த விஷயங்களைச் சொல்ல ஆரம்பித்தான்.

* * *

செய்ய வேண்டியதை யெல்லாம் தைரியமாகவும் உற்சாகமாகவும் ஒருவனாகவே செய்து முடித்து விட்டு ராமசந்திரன் முன்னிலையிலும் தன்னுடைய அரசன் முன்னிலையிலும் நிற்கும் போது ஹனுமான் மேற்கொண்ட அடக்கத்தைக் கவனிக்க வேண்டும். தான் செய்து விட்ட பெரும் காரியத்தைப் பற்றிக் கர்வப்படாமல், யுவராஜனான அங்கதன், அறிவிலும் வயதிலும் பெரியோனாகிய ஜாம்பவான், இன்னும் மற்ற வீரர்களுக்கும் மரியாதை காட்டி அவர்கள் ஏவலிடுவதற்கு முன் தான் பேசாமலிருந்தது வாயு புத்திரனுடைய பண்பாட்டின் மகிமை.

தவிர, இயற்கையிலேயே எவனாயினும் அத்தனை கஷ்டமான காரியங்களை நிறைவேற்றிய ஒரு பகான் அதைப் பற்றித் தானே அவசரப்பட்டுப் பேச மாட்டான். இதை முனிவர் நினைவில் வைத்து இந்தப்படி சித்திரித்திருக்கிறார்.

இன்னொரு விஷயமும் இவ்விடத்தில் கவனித்தல் தகும். ஜானகியை லங்கையில் நேரில் கண்டு பணிந்தது முதற்கொண்டு பிராட்டியைத் தியானிப்பதிலும் பக்தி செலுத்துவதிலும் ஹனுமான் மிகவும் ஈடுபட்டு விட்டான். ராமபக்தியைக் காட்டிலுங்கூட பிராட்டியினிடம் அவனுக்கு உண்டாகிய பக்தி அதிகமாகி விட்டது. பரம்பொருளைத் தாயாகப் பாவித்து மகிழ்ந்த எல்லாப் பெரிய பக்தர்களுடைய அனுபவமும் இதுவே.

* * *

"நூறு யோஜனை அகலமுள்ள கடலைத்தாண்டித் தென்கரையிலுள்ள துஷ்டன் ராவணனுடைய லங்கா நக

ரத்தை யடைந்தேன். அங்கே அந்தப் புர வனத்தில் சிறை வைக்கப்பட் டிருந்த சீதையைக் கண்டேன். ராம ராம என்று ஒரே சிந்தையாக உயிரை வைத்துக் கொண்டிருந்த அந்த ஜானகியைக் கண் டேன். அவலக்ஷண வடிவங் களைக் கொண்ட கொடிய



ராக்ஷஸப் பெண்களின் காவலில் மிகவும் துயரப்பட்டுக் கொண்டிருந்தாள். தலை மயிர் பின்னப் படாமலும் தரையில் படுத்தும் துக்கமும் கவலையும் நிறைந்த முகத்தினளாக உடம்பெல்லாம் நிறம் மாறிப் பனிக்காலத்துத் தாமரைக் குளம் போல் ஒளி யிழந்திருந்தவளைக் கண்டேன். அரக்கனிட மிருந்து தப்புவதற்காக உயிர் நீக்க எண்ணினாள். தங்களுடைய கீர்த்தியை மெதுவாக எடுத்துச் சொல்லி அதற்கு முன் என்னை அறியாத அவளுக்குக் குரங்கான என்னிடம் நம்பிக்கை உண்டாகச் செய்தேன். பிறகு பேசினேன். உமக்கும் அரசன் சுக்ரீவனுக்கும் ஏற்பட்ட நட்பைப் பற்றி அறிவித்தேன். நீர் துயரப்பட்டுக் கொண்டிருப்பதையும் சொன்னேன். உம்முடைய குறையாத அன்பைப் பற்றிச் சொல்லி அவளை மகிழ்வித்தேன். புனிததேவி உமக்குக் கொடுக்கும்படியாக இந்த ஆபரணத்தைத் தந்தாள். ஒரு காக்கை தாங்கள் தூங்கும்போது தன்னைத் தொந்தரவு செய்ததைப் பற்றித் தாங்கள் வருத்தமுற்றதை எனக்குச் சொல்லி, தங்களுக்கு அதை நினைவூட்டச் சொன்னாள். அவளுடைய திலகம் அழிந்த ஒருசமயம் தாங்கள் மலைக்கல்லை அரைத்துத் திலகமிட்டதை நினைவூட்டச் சொன்னாள். 'ஒரு மாதம் உயிர் வைத்துக் கொண்டிருப்பேன். அதற்கு மேல் முடியாது' என்று தங்களிடம் என்னைச் சொல்லச் சொன்னாள். வானரர்களுடைய அரசனுக்கும் இது தெரியும்படியாகச் சொல்வாய் என்று எனக்கு ஆணையிட்டாள். இனி உடனே நாம் லங்கா நகரம் படை யெடுத்துச் சென்று தேவியை மீட்டுக் கொண்டு வருவதைப் பற்றிச் சிந்திப்போமாக'' என்று சொல்லி சீதை கொடுத்த



சிகாமணியை சக்கரவர்த்தித் திருமகளிடம் கொடுத்தான்.

* * *

அதை வாங்கி உற்று நோக்கி ராமசந்திரன் விஸ்மயமாகிப் போனான். பிறகு ஆனந்தமோ துயரமோ உணராத நிலை அடைந்தான்.


சிகாமணியை மார்பில் வைத்து ஒத்திக்கொண்டு "லக்ஷ்மணா" என்று அழுதான். "வீர வாயுவின் புத்திரனே! சீதையைக் கண்ட வீரனே! உன்னைப் போல் நானும் இப்போது அவளைக் கண்டேன்" என்று ஹனுமானைக் கட்டி அணைத்துக் கொண்டு "எல்லா நிகழ்ச்சிகளையும் விஸ்தாரமாக மறுபடியும் சொல், என் அன்புக்குரிய வீரனே! சீதை என்ன சொன்னாள், அதைத் திரும்பத் திரும்பச் சொல், ஹனுமானே! அந்த மொழிகள் தாகத்தைத் தணிக்கும் தண்ணீர் போல் சுவைக்கிறது" என்றான்.

* * *

அப்படியே மாருதி எல்லா நிகழ்ச்சிகளையும் அனைவரும் கேட்க விஸ்தாரமாகச் சொல்லி, சீதை ராமனிடம் சொல்லச் சொன்ன வார்த்தைகளை அப்படியே அவளுடைய இனிய மொழிகளாகவே சொல்லி ராமன் உள்ளத்தை நீராகப் பெருகச் செய்தான்.

"'எத்தனையோ ராக்ஷசர்களைக் கொன்ற என் ராமன் ஏன் இப்படி நான் இங்கே தவித்துக் கொண்டிருக்க இன்னும் வரவில்லை? அரக்கனை சம்ஹாரம் செய்ய இன்னும் ஏன் வராமலிருக்கிறார்? ஏன் ராவணனை வதம் செய்ய லக்ஷ்மணனை அனுப்பாமலிருக்கிறார்? ஏன் வீரனவர் என்னை உபேக்ஷித்து வருகிறார்? நான் என்ன பிழை செய்தேன்? ஒன்றும் இல்லையே!' இப்படிச் சீதை சொன்னாள். நான் அவளுக்குச் சமாதான வார்த்தைகள் சொன்னேன். 'உம்மை நினைந்து நினைந்து ராமசந்திரன் துக்கக் கடலில் மூழ்கி நிற்கிறான். கணமும் அவனுக்கு நிம்மதியில்லை. ராமனும் லக்ஷ்மணனும் உம்மை மறந்து விட்டதாக எண்ண வேண்டாம். அவர்கள் படும் துக்கத்தை விளக்கக் கூடிய மொழிகள் எனக்கில்லை. நான் போய் நீர் இவ்விடம் இருப்பதைச் சொல்ல வேண்டியதுதான் தாமதம். உடனே அவர்கள் வருவார்கள். அதிக காலம் காத்திருக்க வேண்டியதில்லை. வந்து விடுவார்கள். லங்கை சாம்பலாக எரிக்கப் போகிறார்கள். ராவணனை அவன் கூட்டத்தோடு வதம் செய்து அயோத்தியா நகரத்துக்கு உம்முடன் திரும்பிப் போவார்கள். எனக்கு அடையாளம் ஒன்றைத் தருவீராக. நான் உடனே போகிறேன்' என்று நான் சொன்னேன். அப்படிச் சொன்னபோது இந்தத் தலைமயிர் ஆபரணம் துணியில் முடிந்திருந்ததை அவிழ்த்து என்னிடம் தேவி தந்தாள். தந்ததும் நான் அதை என் தலையில் வைத்து பூஜித்து பத்திரம் செய்து கொண்டு திரும்பிச் செல்லப் புறப்பட்டேன். அப்போது அவள் 'ஹனுமானே! ராமலக்ஷ்மண சிம்மங்களுக்கும் அரசன் சுக்ரீவனுக்கும் அவர் மந்திரிகளுக்கும் என் க்ஷேம சமாசாரத்தைச் சொல்லுவாய். என்னை ராமன் அடைவதற்குத் தகுந்த வழியை அவருக்குச் சொல்லுவாய். உன்னை நம்பினேன்! நீ க்ஷேமமாய்ப் போய்ச் சேருவாயாக. மங்களம்' என்று சொல்லி ஆசீர்வதித்து அனுப்பினாள். பிரபுவே! துக்கப்பட வேண்டாம். காரியத்தில் மனம் செலுத்துவீராக. பிறகு, 'எப்படி இந்தக் கடலை ராமலக்ஷ்மணர்கள் தாண்டி வருவார்கள்? வானர சேனை எப்படி லங்கை வந்து சேரும்?' என்று சீதை சந்தேகப்பட்டுத் துயரப்பட்டாள். 'சந்தேகப்பட வேண்டாம். தூதனாக வந்த நான் சுக்ரீவனுடைய வானரர்களில் ஒரு சிறியவன். சிறந்த வீரனையா அரசர்கள் தூதனாக அனுப்புவார்கள்? அங்கிருக்கும் வீரர்களில் பலர் என்னை விட பலசாலிகள். வானரர்களுக்குள் பூமண்டலம் முழுதும் தரையில் கால் வைக்காமல் தாவிச் சுற்றும் சக்தி கொண்டவர்கள் இருக்கிறார்கள். ராமலக்ஷ்மணர்களை நானே தூக்கிக் கடலைத் தாண்டி வர முடியும்; இவ்விடம் வில்லும் கையுமாக அவர்கள் இறங்குவார்கள். நீர் நிச்சயமாக இருக்கலாம்' என்று நான் தேவியைத் தேற்றினேன். அவளும் மனச் சாந்தியடைந்தாள்" என்றான்.


உங்களுக்கும்..
உங்கள் குடும்பத்தாருக்கும்!
வயிற்று வலி, அஜீரணத்தால் ஏற்படும் குடல் கோளாறுகள், வயிற்றுக்கடுப்பு, வலிப்பு மற்றும் இதர வயிற்றுக் கோளாறுகளுக்கு ஓமம்-கற்பூர் சிறந்த நிவாரணி. அதன் அற்புத குண விசேஷ மருந்துகள் காரணமாக துரித நிவாரணம் கிடைக்கிறது. அதன் கிருமி நாச, கட்டுப்படுத்தும் தன்மைகள் காரணமாக ஓமம்-கற்பூர் வாய், தொண்டையை கொப்பளிக்கவும் உகந்தது. ஸ்திரீகளின் கர்ப்பாசயக் கோளாறுகளுக்கும் உபயோகிக்கலாம். குடும்பத்தில் ஒவ்வொருவரும் நிர்ப்பயமாக உட்கொள்ளலாம். இது தீவிர ஆராய்ச்சி, பரிசோதனைகளுக்குப் பிறகு பொதுஜனங்களுக்கு அளிக்கப்படுகிறது.
ஹென்ரியின்
ஓமம்-கற்பூர்
தயாரிப்பவர்:
லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பார்மஸூடிகல்ஸ் லிமிடெட், மதராஸ்-1



பி. ஸி. ஜி. ஊசி

என் நண்பர் ஒருவர் சென்ற வாரம் தஞ்சாவூர் போயிருந்தார். போன இடத்தில் அவருக்கு 11-6-55 சனிக்கிழமை பி. ஸி. ஜி. ஊசி போட்டார்கள். அவருடைய சரீரம் நோய் நொடியற்றது; ஊசி போட வேண்டிய அவசியமேயில்லை. ஊசி போட்ட மறு தினம் (12-6-55) நல்ல சுரம் கண்டது. அத்துடன் வயிற்று வலி, கழுத்தில் கொட்டைப் பாக்கு அளவுள்ள சிறிய வீக்கம்; சரீரத்தின் பல இடங்களில் ஏதோ எட்டுக்கால் பூச்சிக் கடி போன்ற புண்கள் ஏற்பட்டன. இக் கடிதம் எழுதுகிற வரையில், என் நண்பருக்குச் சுரத்தைத் தவிர மற்ற இதர தொந்தரவுகள் இருக்கின்றன.

ஊசி போடுவதற்கு முன், தேகத்தைப் பரிசோதிக்காமல் போட்டு விட்டு 'எக்ஸ்பார்ட்டி' தீர்ப்புகளும் கூறி விடுகிறார்கள் வைத்திய நிபுணர்கள்.

பட்டுக்கோட்டை
17—6—55 வி. முத்துகிருஷ்ணன்

●

தாய்மார்கள் கடமை

இன்று வந்த 'கல்கி' யில் ராஜாஜி அவர்கள் பி. ஸி. ஜி. யைப் பற்றி எழுதியிருப்பதைப் படித்தேன். என்னைப் போல் பல சகோதரிகளும் படித்திருப்பார்கள். 'தினமணி' யிலும் ராஜாஜி எழுதியதை முன்பு படித்தேன். 'கல்கி' படிக்கும் சகோதரிகளுக்கும் ஒரு கடமை இருக்கிறது. பி. ஸி. ஜி. ஊசி போடுவது வேண்டாம் என்று ராஜாஜி சொல்வதைப் பெண் ஜென்மமாகிய நமக்குச் சொல்வதாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஊசி போடுவது நல்லது என்று மந்திரிகளும், பெரிய டாக்டர்களும் சொல்லலாம். ராஜாஜி எதற்காக இதை ஆட்சேபிக்க வேண்டும் என்பதைப் பெண்களாகிய நாம் கவனிக்க வேண்டும். தள்ளாத வயதில் இத்தனை சிரமப்பட்டு அவர் எழுதுகிறாரே. அதனால் அவருக்கு என்ன லாபம்! நம்முடைய குழந்தைகளுக்காகத்தானே சொல்லுகிறார்.

நம்முடைய குழந்தைகளுக்குச் சிறு வியாதி வந்தாலும்கூடத் தாயுள்ளமாகிய நமக்குப் பதறுகிறது. நம்மைப் போல ஒரு சகோதரியின் குழந்தைதானே கோயமுத்தூர் வஸந்தா. 'தினமணி'யில் அந்தக் குழந்தையின் படத்தைப் பார்த்தவர்கள் வருத்தப்படாமல் இருக்க முடியாது. ஓடியாடி விளையாடிப் பள்ளிக்கூடம் போய்க் கொண்டிருந்த குழந்தைக்குக் கண் தெரியாமல் போய் விட்டது என்றால் வஸந்தாவின் தாயாருக்கு எப்படி இருக்கும்! ஆண்கள் வெளியில் சென்று விட்டுச் சிறிது மனச் சமாதானம் செய்து கொள்ளலாம். ஆனால் நம்மைப் போன்ற பெண்கள் குழந்தைகளின் கஷ்டத்தைச் சதா பார்த்துக் கொண்டே இருக்கவேண்டி இருக்கிறது. கண் தெரியாது போன வஸந்தாவின் தாயாருக்குத் தன் முன்னால் கண்களைப் பறி கொடுத்த குழந்தையைப் பார்க்கும் போது தாய் உள்ளம் படும் பாட்டை நம்மைப் போன்ற தாய்மார்கள்தான் தெரிந்து கொள்ள முடியும். ஊசி போட்டதினால் கண் கெட்டுப் போக வில்லை என்று பலர் சொல்லலாம். ஊசி போட்டதினால்தான் கண் கெட்டுப் போய் விட்டதோ என்ற பயம் நம்மை விட்டு அகலாது. ஊசி போடும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஏதாவது நோய் வரும் என்ற பயம் தாய்மார்கள் மனத்தில் படலாம். தாயாருக்குக் குழந்தைகள் பாரம் அல்ல. குழந்தைகளுக்கு நோய் வந்து தவிப்பதை அவர்களால் எப்படிப் பொறுக்க முடியும்? ஊசி போட்டால் நோய் வருமா என்ற பயத்துடன் நம்முடைய குழந்தைகளுக்கு எதற்காக ஊசி போடும்படி சொல்ல வேண்டும்! தாய்மார்களாகிய நாம் மனம் வைத்தால் இந்தச் சந்தேக ஊசியை நம்முடைய குழந்தைகளுக்குப் போடுவதைத் தடுப்பது சிரமமா!

நம்மைக் கேட்காமல் பள்ளிக்கூடத்தில் ஊசி போடக் கூடாது என்று வீட்டில் இருக்கும் புருஷர்கள் மூலம் பள்ளிக்கூடத்துக்கு எழுதி அனுப்பி விடும்படி சொல்ல வேண்டியது நம்முடைய கடமை. குழந்தையின் அருமை நமக்குத்தான் தெரியும். நம்முடைய குழந்தைகளின் நலனுக்காக நாம் எத்தனையோ கஷ்டப் படுகிறோம். அதைவிட ஊசி குத்த வேண்டாம் என்று சொல்வது கஷ்டமா!

ராஜன் பாபு, நேருஜியின் வீட்டுக் குழந்தைகளுக்கு ஊசி போட்டிருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளி வந்திருக்கிறது. பெரிய மனிதர்களின் பெயரை இதிலெல்லாம் எதற்காகச் சொல்ல வேண்டும்! அவரவர்களுக்கு அவரவர்கள் வீட்டுக் குழந்தைகள் உயர்வு என்று நாம் நினைக்க வேண்டும்.

எத்தனையோ காரியங்களில் நாம் நம்முடைய வீட்டுப் புருஷர்களிடம் சண்டை போட்டாவது நம்முடைய குழந்தைகளுக்கு நல்லது செய்கிறோம். அது போல் ஊசி போடுவதையும் தடுக்க வேண்டும். ஊசி போடுபவர்கள் எல்லோரும் அது கெடுதல் இல்லை என்றுதான் சொல்வார்கள். அது போல இந்த ஊசி போடுகிறவர்களும் சொல்லலாம். ஜனக மகரிஷி உபதேசம் செய்வது போல் ராஜாஜி சொல்வதைக் கேட்பது நம்முடைய குழந்தைகளுக்காக நாம் செய்யும் நன்மை.

புதுக்கோட்டை
1—7—55 டி. சாரதாம்பாள்



சென்ற ஜூன் மாதம் 30-ம் தேதி சென்னை லட்சுமிபுரம் யுவர் சங்கத்தின் ஆதரவில் ராஜாஜி ''பி. ஸி. ஜி.க்காரர்களுடன் என் சண்டை'' என்ற தலைப்பில் சுமார் ஒன்றே முக்கால் மணி நேரம் உணர்ச்சியும் உறுதியும் கொண்ட ஒரு பேச்சு நிகழ்த்தினார். பல பிரபல டாக்டர்களின் ஆராய்ச்சி முடிவுகளை யெல்லாம் விஸ்தாரமாக வாசித்துக் காண்பித்தார். அமெரிக்க டாக்டர் எழுதிய மிகப் பெரிய ஒரு புஸ்தகம் கொண்டு வந்திருந்தார். ''இதில் அமெரிக்காவில் சர்க்கார் பொதுஜன சுகாதாரப் பாதுகாப்புக்காக என்ன என்ன செய்திருக்கிறார்கள் என்பது எழுதியிருக்கிறது. அம்மை குத்தல், பிளேக் ஊசி, காலரா ஊசி, இப்படிப் பல ஊசி மருந்துகளைக் குத்துவதைப் பற்றிப் போட்டிருக்கிறது. ஆனால் பி. ஸி. ஜி. என்ற வார்த்தை ஒரு இடத்தில்கூட இல்லை. சென்னையிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் பி. ஸி. ஜி. என்றால் என்ன என்று கேட்டார். ஆனால் இன்று தமிழ் நாட்டில் பி. ஸி. ஜி. என்று கேள்விப்படாதவரே 'இல்லை!'' என்று கூறினார் ராஜாஜி. அப்பொழுது எழுந்த சிரிப்பை நமது புகைப்படக்காரர் அப்படியே நமது காமிராவுக்குள் பிடித்துக் கொண்டு விட்டார். ராஜாஜி பேசிய அந்த ஒன்றேமுக்கால் மணி நேரப் பேச்சை ஆயிரம் பேர் கவனமாகக் கேட்டனர். அங்கு ஊசி விழுந்தால் கேட்டிருக்கும். அப்படிப்பட்ட அமைதி நிலவியது!

"தமிழ் மொழி வளர்ச்சிக்கு வெற்றி!"

தமிழ் மொழியின் வளர்ச்சிக்குக் கல்வி மந்திரி ஸி. சுப்பிரமணியம் அவர்களின் அரிய முயற்சி போற்றுதற்கு உரியது.

மாணவர்களுக்குப் பிரதேச மொழியிலே கல்வி கற்பித்தால்தான் அவர்களுடைய அறிவு நல்ல வளர்ச்சி அடையும் என்று தெரிந்து பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தமிழைப் போதனு மொழியாக்கச் சிறந்த சேவை செய்திருக்கிறார். இதனால் தமிழ் மொழி மேலும் வளர்ச்சி அடையும். தாய் மொழிப் பற்று அதிகரிக்கும். பிற நாட்டு நல்ல நூல்கள் தமிழ் மொழியிலே மொழிபெயர்க்கப்பட்டுத் தமிழ் அறிவு வளர்ச்சி பெறும். இதனால் தமிழ் ஒரு புது மணம் பெறும். "தாய்மொழிப் பற்றே தாய் நாட்டுப் பற்று" என்று கூறிச் சென்ற திரு வி. க. வின் சொல்லைக் கடைப்பிடித்த ஓர் அறிஞர் உண்டு என்றால் அந்தப் பெருமை திரு சுப்பிரமணியம் அவர்களைச் சாரும். தமிழ் மொழி வளர்ச்சிக்கு உயர்வு அளித்த அவர்களின் தமிழ்ப் பணி இன்று போல் இன்னும் பல்லாண்டு வாழ இறைவனை வணங்குவோம்.

தேனூர்
29—6—55

உ. இராமநாதன்

சிறுகதைப் போட்டி

நேங்கள் 26க் தேதி 'கல்கி'யைக் கண்டேன். களிப்பு மிகக் கொண்டேன். காரணம் 'கல்கி' அவர்களின் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியின் முடிவுத் தேதியை மாற்றி வைத்திருப்பதைப் படித்ததே யாகும்.

முடிவுத் தேதியை மாற்றி வைத்ததின் மூலம் இன்னும் பல இளம் சிறுகதை எழுத்தாளர்கள் போட்டியிலே கலந்து கொள்ள முடியும். அதனால் தமிழ் மக்கள் இன்னும் சில மாதங்களில் பல சிறந்த சிறுகதைகளைக் 'கல்கி'யிலே படித்துப் பரவசம் அடையவும் முடியும். இளம் எழுத்தாளர்களின் "பேனு முனைக்கு" ஓர் அரிய சந்தர்ப்பத்தை அளித்து அவர்களை "எழுத்துலகிலே" ஒளி விட்டுப் பிரகாசிக்கும்படி செய்வதற்காகப் போட்டியின் முடிவுத் தேதியை மாற்றி வைத்தது சாலச் சிறந்த செயலேயாகும். மேற் கூறிய செயலை நான் மட்டுமின்றி எல்லோரும் முழு மனத்துடன் வரவேற்பார்கள் என்பதில் என்னளவும் ஐயமில்லை.

பம்பாய்
27—6—55

பம்பாய்த் தமிழன்


திருச்சி ஜில்லாவில் தமிழ்க் கொலை

திருச்சி ஜில்லாவில் உள்ள எல்லா அலுவலகங்களிலும் தாய்மொழியான தமிழிலேயே நிர்வாகம் நடத்த வேண்டுமென்று சென்னை அரசாங்கம் திருச்சியைத் தேர்ந்தெடுத்தது. ஆனால் இங்கு உள்ள எல்லா அலுவலகங்களும் (இரண்டொன்று தவிர) ஆங்கில மொழியில் தான் நிர்வாகம் நடத்தி வருகின்றன. காரணம் கேட்டால் தமிழில் எழுதுவது கஷ்டமாக இருப்பதாகச் சுலபமாகச் சொல்லி விடுகிறார்கள். குறிப்பாகப் பஞ்சாயத்து சம்பந்தப்பட்டவரை, நிர்வாக அதிகாரி உள்ள கிராமப் பஞ்சாயத்துக்களில்கூட ஆங்கில மொழியில் தான் நிர்வாகம் நடந்து வருகிறது. இதற்குச் சில இடங்களில் அரைகுறை ஆங்கிலம் படித்த அங்கத்தினர்களின் ஆதரவும் உண்டு. இது தவிர ஜில்லா பஞ்சாயத்துக் காரியாலயத்திலும், ரீஜனல் இன்ஸ்பெக்டர் காரியாலயத்திலும் தமிழ் என்ற எழுத்தைக்கூடக் காண முடியாது. அங்கு உள்ளவர்களுக்குத் தமிழே தெரியாது என்றுகூட நினைக்க வேண்டி வரும்.

பல பஞ்சாயத்துத் தலைவர்கள் அங்கத்தினர்களுக்கு ஆங்கில எழுத்துக்கூடத் தெரியாது. ஆனால் இவர்களுக்கு வரும் அறிவிப்புகளும் உத்தரவுகளும் ஆங்கிலத்தில்தான். குறிப்பாகத் தொட்டியம் பஞ்சாயத்தில் முழு நிர்வாகமும் ஆங்கிலத்தில்தான் நடைபெறுகிறது. இதைத் தடுக்க வேண்டும் என்று ஒரு தீர்மானம்கூடப் பஞ்சாயத்துக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் அது ஏட்டளவுத் தீர்மானம்தான்!

இந்நிலையில் திருச்சி ஜில்லாவில் மீண்டும் தமிழ் மொழிக்கு ஆதரவு தர நீடிக்கிறார்களாம்! அலுவலகங்களிலும் அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டுத் தமிழிலேயே நிர்வாகம் நடத்த வேண்டும் என்று கண்டிப்பான உத்தரவு போடவேண்டும். அதை மதியாத அதிகாரிகளை உடனடியாக வேறு இடங்களுக்கு மாற்றவும் ஏற்பாடு செய்யலாமல்லவா!

தொட்டியம் — எஸ். சதாசிவம்
21—6—55 — (பஞ்சாயத்துத் தலைவர்)



கலைமகள் ஆசிரியர் திரு கி. வா. ஜகந்நாதன் அவர்களின் சகோதரர் சிரஞ்சீவி கி. வா. பாலசுப்பிரமணியனுக்கும், திருச்செந்துறை ரிடையர்ட் இஞ்சினியர் திரு கே. வெங்கடாசலம் அய்யர் அவர்களின் குமாரி சௌ ராஜேசுவரிக்கும் திருச்சியை அடுத்த திருச்செந்துறையில் ஜூன் மாதம் 29-ந் தேதி வெகு சிறப்பாக விவாகம் நடந்தேறியது. திருமணத்துக்குப் பிரபல எழுத்தாளர்களும், நண்பர்களும் வந்திருந்து மணமக்களை ஆசீர்வதித்தனர். தம்பதிகளுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

வாழ்க, ராஜேசுவரி–பாலசுப்பிரமணியன்!

●

பரீட்சை அதிகாரிகள் கவனிப்பார்களா?

சென்ற மார்ச் மாதம் எஸ். எஸ். எல். சி. தேர்வில் தேர்வு அதிகாரிகளாலோ, அச்சுக்கோப்பவராலோ ஒரு சிறு பிழை நிகழ்ந்துவிட்டது. அவர்கள் கவனிக்காது விட்ட அச்சிறு பிழை என் நண்பன் ஒருவனுடைய ஒரு வருஷ வாழ்க்கையையே வீணாக்கி விட்டது. காரணம் என்ன! அவன் மார்க்கு வாங்கியதில் ஒரு தவறும் இல்லை. குறைவான மார்க்கும் வாங்கவில்லை. அப்படியிருக்க அவன் பரீட்சையில் தவறியது ஏன்!

தேர்வுக்குரிய சரியான மார்க்குகள் அவன் வாங்கியிருந்தும் பரீட்சையில் தவறி விட்டான்.

தமிழ் பாகம் I — 53, தமிழ் பாகம் II —48, ஆங்கிலம் — 36, கணக்கு — 46, சயன்ஸ்—32 சமூகம் — 39.

இந்தத் தவறுதலை உடனே தேர்வு அதிகாரிகள் கவனித்து அவனுடைய வெற்றிக்கு வழிவகுப்பார்கள் என நினைக்கின்றேன்.

சாத்தூர்
23—6—55 — க. மகாலிங்கம்

●

மோட்டார் விளக்குகள்

சென்னையில் மோட்டார்களின் முன் விளக்குகள் மிகவும் பிரகாசமாயிருப்பதால் எதிரில் வருவோர்களின் கண்களை மிகவும் கூசச் செய்கின்றன என்பதற்காக, மோட்டார் விளக்குகளின் மேல் பாதியைக் கறுப்பு வர்ணத்தால் மூட வேண்டுமென்று சில மாதங்களுக்கு முன்பு சர்க்கார் ஓர் அறிக்கை விட்டிருந்தனர். இவ்வறிக்கையை யாரும் சரிவரக் கடைப்பிடிப்பதாகவோ, சர்க்காரும் கண்டிப்பாக அமுலில் நடத்த விரும்புவதாகவோ, தெரியவில்லை. பெரும்பாலான மோட்டார் விளக்குகள் முழுவதும் திறந்தே காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக டாக்ஸிகளின் விளக்குகள் மிகவும் பிரகாசமாய் இருப்பதால், எதிரில் வரும் பாதசாரிகள், சைக்கிளில் செல்வோர் முதலியவர்களது கண்கள் அதிகமாய்க் கூசுகின்றன. அத்துடனில்லாமல், மோட்டார்கள் நம்மைத் தாண்டிச் சென்ற பின்பும் ஓரிரண்டு நிமிஷங்கள்வரை எதிரில் வருவோரது கண்கள் பூத்துப் போய் விடுகின்றன. சென்னைப் போலீஸ் கமிஷனர் இதைத் தயவுசெய்து உடனடியாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டுகிறேன்.

சென்னை
20—6—55 — என். வி. கிருஷ்ணன்

கல்கி திரு ரா. கிருஷ்ணமூர்த்தி
நினைவுச் சிறுகதைப் போட்டி
2000 ரூபாய் பரிசு

தமிழில் அருமையான பல கதைகள் எழுதி அழியாப் புகழ் பெற்ற கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் நினைவாக இந்தச் சிறுகதைப் போட்டி நடத்தப்படுகிறது.

தேர்ந்தெடுக்கும் கதைகளுக்குப் பரிசுத் தொகை ரூ. 2000 கீழ்க் கண்டவாறு வழங்கப்படும் :

முதல் பரிசு ரூ. 500/- :: இரண்டாம் பரிசு ரூ. 250/-
மூன்றும் பரிசு ரூ. 125- வீதம் பத்துக் கதைகளுக்கு.

இந்தப் போட்டியின் முடிவுத் தேதி 31—7—1955

நிபந்தனைகள் :

1. போட்டிக்கு அனுப்பப்படும் கதைகள் எழுதியவரின் சொந்தக் கற்பனையாக, தமிழ் நாட்டின் வாழ்க்கைக்கும் பண்பாட்டுக்கும் இசைந்த முறையில் இருக்க வேண்டும்.
2. 'கல்கி' இதழில் பத்துப் பக்கங்களுக்கு மேற்படாத அளவில் அமைய வேண்டும்.
3. நல்ல காகிதத்தில் இடைவீடுகள் விட்டு ஒரு பக்கத்திலேயே எழுத வேண்டும்.
4. முதலாவது பக்கத்தின் தலைப்பில் 'கல்கி திரு ரா. கிருஷ்ணமூர்த்தி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிட்டு, "ஆசிரியர், கல்கி, சென்னை - 10" என்ற விலாசத்துக்கு 1955 ஜூலை 31-ந் தேதிக்குள் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும்.
5. முடிவுத் தேதிக்குப் பின் வந்து சேரும் கதைகள் இந்தப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டா.
6. ஒரே எழுத்தாளர் இந்தப் போட்டிக்கு என்று மூன்று கதைகள் வரை அனுப்பலாம்.
7. கதை அனுப்பும்போது, அத்துடன் எழுதியவர் தமது கைப்பட இக் கதை சொந்தக் கற்பனை என்றும், தமிழிலோ அல்லது வேறு மொழியிலோ இந்தக் கதை அல்லது இதுபோன்ற கதை தம்மாலோ அல்லது வேறொருவராலோ எழுதப்படவில்லை என்றும் ஒரு உறுதி மொழி அனுப்ப வேண்டும்.
8. பரிசுக்குத் தேர்ந்தெடுத்த கதைகளைக் 'கல்கி' இதழில் வெளியிட்ட பிறகு, இக் கதைகளை வேறு மொழிப் பத்திரிகைகளிலோ அல்லது புத்தகமாகவோ வெளியிடுவதற்கு உரிய எல்லா உரிமைகளும் கதை எழுதிய ஆசிரியரையே சாரும்.
9. தேர்ந்தெடுக்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற விரும்புவோர், கதைகளுடன் போதிய தபால் பில்லைகள் அனுப்ப வேண்டும். கதைகள் திரும்ப அனுப்பப்படும் என்று உறுதி கூறுவதற்கில்லை.
10. பரிசுக்குரிய கதைகள் தவிர, பிரசுரத்துக்கு என்று தேர்ந்தெடுக்கப்படுபவை, 'கல்கி' இதழ்களில் வெளியாகும். அவற்றிற்கு வழக்கம் போல் சன்மானம் அளிக்கப்படும்.
11. பரிசுக் கதைகளைத் தேர்ந்தெடுக்க ஒரு பரிசீலனைக் குழு நியமிக்கப்படும்.
12. இந்தப் போட்டி சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் 'கல்கி' ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

கல்கி காரியாலயம்
சென்னை-10

சதாசிவம்
மானேஜிங் டைரக்டர்

அவன் மனிதன்!

சா. அ. ராமன்

ஒன்பதுவருடம் மாடாக உழைத்து ஓடாக உருமாறிப்போன அவனுக்குத் தான் பெற்ற பிள்ளைக்குக் கேவலம், ஒருவேளைச் சோறு போடக் கூடவா உரிமை இல்லை! கற்பதார்த்தமாக நாலு வேளையும் ஆக்கிக் கொட்டி வரும் அவனையா அந்த எஜமானர் அப்படி இழிவாகப் பேசி விட்டார்!

நாலு வார்த்தைகள்தான் சொன்னார்; ஆனால் அது அவனை எப்படி நாணச் செய்து விட்டது!

பரிசாரகன் பசுபதிக்கு உள்ளமெல்லாம் துடித்தது. அன்று ஏற்பட்ட அந்த அவல சம்பவம் அவனை அவமானத்தால் கூனிக் குன்றச் செய்து விட்டது. விரும்பத் தகாத காரியத்தை அவன் செய்திருக்கலாம். அதற்காக இப்படியா பேசுவது! அவனுடைய தன்மானம், உணர்ச்சி, பாசம், பந்தம், விருப்பு, வெறுப்பு அனைத்தையும் நாலு வார்த்தையில் அல்லவா உலுக்கித் தள்ளி விட்டார்! கைகொட்டி ஆர்ப்பரித்து ஊருக்கு அம்பலப் படுத்த வேண்டிய அவ்வளவு பிரமாதமான விஷயமல்லவே அது! இருந்தாலும் அவனை அது எவ்வளவு பாடாகப்படுத்தி விட்டது!

செஷன்ஸ் ஜட்ஜ் சுந்தரேசய்யர் வீட்டில் பசுபதி பரிசாரகனாக வேலைக்குச் சேர்ந்து இப்போது ஒன்பது வருடங்களாகி விட்டன.

அன்று ஜட்ஜ் சுந்தரேசய்யர் ரௌத்ராகாரமாக இருந்தார். முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க, எதிரில் வருபவர் மீதெல்லாம் காரணமின்றிச் சீறிக் கொண்டிருந்தார்.

பசுபதி ஆரம்பத்தில் ஒன்றும் தெரியாமல் விழித்தான். பிறகுதான் விஷயம் தெரிந்தது. கோபத்துக்குக் காரணம் இதுதான்:

சென்னையில் ஜவுளி வியாபாரம் செய்து கொண்டிருந்த சுந்தரேசய்யரின் புதல்வன் நாராயணன், தனக்கு ஏதோ கஷ்டம் வந்து விட்டதாகவும், உடனே ஐயாயிரம் ரூபாய் அனுப்புமாறு கோரி அப்பாவுக்குத் தந்தி அடித்திருக்கிறானாம்.

பெற்ற தந்தைக்கு ஒரு காசுக்கு உபயோகமாக இல்லாவிட்டாலும் மாதா மாதம் ஆயிரம் அனுப்பு, இரண்டாயிரம் அனுப்பு என்று ஒரு பிள்ளை தந்தி அடித்தால், எந்தத் தகப்பனுக்குத்தான் கோபம் வராமல் இருக்கும்!

கோபம் பொல்லாதது என்பதைச் சுந்தரேசய்யரைப் பார்த்துத்தான் பசுபதி தெரிந்து கொண்டான். ஜட்ஜுக்கு அளவு மீறிய கோபம் வந்து விட்டால் ஒரு பிராணி அவர் கண்ணில் படக் கூடாது. எதிரில் வருபவர் மீதெல்லாம் பாம்பாகச் சீறி விழுவார்.

அன்றைக் கென்றுதான் ஜட்ஜுக்குக் கோபம் வரவேண்டுமா! சொல்ல முடியாத அச்சத்தோடுதான் அந்தக் காரியத்தைச் செய்யப் புகுந்தான் பசுபதி. அவனுக்குக் கொஞ்சம் கூடப் பிரியமில்லைதான். இருந்தாலும் மீனுவின் வற்புறுத்தலுக்கு இணங்கி......

ஒன்றுமில்லை; அன்று மீனுவுக்கு உடம்பு சரியில்லை. தலைவலி, ஜுரம் என்று படுத்து விட்டாள். ஐந்தாவது வகுப்புப் படித்துக் கொண்டிருந்த பசுபதியின் பையன் தியாகுவுக்கும் அன்றுதான் முழுப் பரீட்சை ஆரம்பம். ஒன்பது மணிக்கே சாப்பிட்டு விட்டுப் பள்ளிக்குப் போக வேண்டும் என்று தியாகு அவசரப் பட்டான். மீனு ஜுரமாகப் படுத்துவிட்டதால், வீட்டில் அவனுக்குச் சமைத்துப் போட ஆளில்லை. பசுபதி மத்தியானம் வந்துதான் மீனுவுக்குக் கஞ்சி வைத்துக் கொடுக்க வேண்டும். பிள்ளைக்கு என்ன செய்வதென்று பசுபதி யோசித்தான். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தவனாய்ப் பள்ளிக்குப் போகும்போது ஜட்ஜ் வீட்டுக்கு வந்து சாப்பிட்டு விட்டுப் போகுமாறு தியாகுவிடம் சொல்லிவிட்டு அவன் வேலைக்குப் போய் விட்டான்.

பசுபதி சமையல் செய்து முடிக்கும் போது மணி ஒன்பது அடித்தது. சுந்தரேசய்யர் சாப்பிட இன்னும் ஒரு மணி நேரமிருந்தது. அவர் சாப்பிட வருவதற்குள் தியாகுவுக்குச் சாதம் போட்டுப் பள்ளிக்கு அனுப்பிவிட வேண்டுமென்று பசுபதி நினைத்தான்.

ரொம்பவும் தயக்கத்தோடுதான் பின்கட்டு வழியாகச் சமையலறையில் நுழைந்தான் தியாகு. அப்பாவின் எஜமானர் வீடு, ஜட்ஜ் பங்களா, என்பதெல்லாம், உலகமறியாத அந்தப் பத்து வயதுப் பாலகனின் பிஞ்சு உள்ளத்திலும் ஒரு பீதியைத் தோற்றுவித்திருந்தது.



பசுபதி இலையைப் போட்டு அவசரம் அவசரமாகப் பரிமாறினான். தியாகு சாப்பிட ஆரம்பித்தான்.

பசுபதிக்குத் தூக்கி வாரிப் போட்டது. கையும், காலும் நடுங்கின.

"என்ன, ஐயா! சமையல் ஆகிவிட்டதா!" என்று கடுமையான குரலில் கேட்டுக் கொண்டே, சுந்தரேசய்யர் சமையலறையில் நுழைந்தார். என்றைக்கும் பத்து மணிக்கு உள்ளே வருபவர், இன்றைக்கென்று ஏன்தான் சீக்கிரமாக வரவேண்டுமோ! தியாகு அவசரம் அவசரமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது அவர் கண்ணில் பட்டது. ஏற்கெனவே கோபாக்கிரகத்தராயிருந்த அவர் கோபக் கனல் வீசும் கண்களுடன் பசுபதியைப் பார்த்தார்.

"அவனுக்கு......இன்று பரீட்சை. அவன் அம்மாவுக்கு......உடம்பு சரியில்லை. வீட்டில் சமைத்துப் போட ஒருவரும் இல்லாத......" நடுக்கத்தோடு பேசிய பசுபதி வார்த்தையை முழுவதும் முடிக்கவில்லை.

அதற்குள், "இதென்ன சத்திரம் என்று நினைத்தீரா, கண்டவனை யெல்லாம் உட்கார வைத்துச் சோறுபோட! வீட்டிலே சமைக்க ஆள் இல்லையென்றால், பட்டினியோடு அனுப்புமே! இன்றைக்குப் பையன், நாளைக்குப் பெண், அப்புறம் குடும்பத்தையே அழைத்துக் கொண்டு வந்து விடுவீர் போலிருக்கிறதே!" என்று படபட வென்று வார்த்தைகளைக் கொட்டினார் ஜட்ஜ்.


"பரீட்சை என்பதால்தான் இன்று ஒருநாள் வரச் சொன்னேன்."

"என்ன ஐயா மகா பரீட்சை! உன் பிள்ளை படித்துப் பெரிய வக்கீலாகப் போகிறானோ! யோக்கியதைக்குத் தகுந்தாற் போல நடந்து கொள்ள முதலில் தெரிந்து கொள்ளும்"— அழுத்தந் திருத்தமாக அலட்சிய பாவத்துடன் பேசினார் ஜட்ஜ்.

சாட்டையடி பட்ட கைதியைப் போலப் பசுபதியின் உடலும், உள்ளமும் ஒரு முறை துடி துடித்தன.

"உன் பிள்ளை படித்துப் பெரிய வக்கீலாகப் போகிறானோ!" வார்த்தைகள் மறுபடியும் அவன் இதயத்தில் எதிரொலித்தன.

பசுபதியால் இந்த அவமானத்தைத் தாங்க முடியவில்லை. அவனுடைய தன் மானம்,



பம்பாயிலுள்ள கால்கேட் - பாமாலிவ் ஸ்தாபனத்தின் பிரதம அக்கௌண்ட்டண்டான ஸ்ரீ எம். பாலசுப்பிரமண்யன் அவர்களின் புதல்வி சௌ சர்வசக்திக்கும் திருவையாறு மிராசுதார் ஸ்ரீ வி. ராமச்சந்திரய்யர் அவர்களின் புதல்வர் ஸ்ரீ ஆர். சுப்பிரமண்யம் பி.எஸ்ஸி.க்கும் சென்ற ஜூன் மாதம் 2-ம் தேதி சென்னை தியாகராய நகரில் கோலாகலமாகக் கல்யாண வைபவம் நிறைவேறியது. வாழ்க, மணமக்கள்!

கௌரவம், சுயமரியாதை அனைத்தையும் நொடிப் பொழுதில் அடியோடு எறிந்து விட்டாரே! ஜட்ஜின் இளக்காரமான இந்தப் பேச்சு அவன் இதயத்தை ஊசியாகக் குத்தியது. இன்னது செய்வது, பேசுவது என்று ஒன்றும் புரியாமல் கற்சிலையாக நின்றவன் ஒரே கணத்தில் தீர்க்கமான முடிவுக்கு வந்து விட்டான்.

நடப்பது ஒன்றும் தெரியாமல், பேந்தப் பேந்த விழித்தவனாய் இலை முன்பு உட்கார்ந்து கொண்டிருந்த தியாகுவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு சுந்தரேசய்யரிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் 'விடு விடு'வென்று அந்த வீட்டை விட்டு வெளியேறினான்.

* * *

நாம் செய்த காரியத்துக்காகச் சுந்தரேசய்யர் பின்னால் எவ்வளவோ வருந்தினார். பசுபதியை நினைக்கும்போதெல்லாம் அவன் பேரில் அளவு கடந்த அனுதாபம் ஏற்பட்டது. எவ்வளவு அலட்சியமாக அவனை மதித்துப் பேசி விட்டோம் என்பதை எண்ணி எண்ணிச் சில சமயம் கண்ணீர் விட்டார். தம் வீட்டு வேலையாளாக இருந்தாலும், அவனுக்கும் சுய மரியாதை, கௌரவம், உணர்ச்சி, தன்மானம் முதலியவை உண்டு என்பதைப் பல சட்ட நுணுக்கங்களைப் படித்தறிந்த தம்மால் தெரிந்து கொள்ள முடியவில்லையே என்பதை நினைக்குந்தோறும் சுந்தரேசய்யருக்கு மனத்தை என்னவோ செய்தது.

எவ்வளவு வருடங்கள் அவர் வீட்டில் அவன் மாடாக உழைத்தான்! தான் பெற்ற பிள்ளைக்கு ஒருவேளைச் சோறு



சுற்றுப் பிரயாணம்

பம்பாய் அல்லயிடு போட்டோக்ராபிக்ஸ் லிமிடெட் கம்பெனியின் காரியதரிசியான ஸ்ரீ. எஸ். ஆர். ஏ. அமுதன் அவர்கள் சென்ற மாதம் வியாபார நிமித்தம் ஐரோப்பிய நாடுகளிலும் இங்கிலாந்திலும் சுற்றுப் பிரயாணம் செய்யச் சென்றார். அவர் முயற்சிகள் வெற்றி பெறுவதாக.

போட்டதற்காக அவனை அவர் எவ்வளவு நிஷ்டூரமாகக் கண்டித்துப் பேசிவிட்டார்!

அந்தச் சம்பவத்தை அவரால் எளிதில் மறக்க முடியவில்லை.

காலச் சக்கரம் எவ்வளவோ வருடங்களைக் கடந்து ஓடிவிட்டது. செஷன்ஸ் ஜட்ஜ் சுந்தரேசய்யர் வேலையிலிருந்து ரிடையராகி விட்டார். பட்டணத்துக்கு வந்து தன்னுடனேயே இருந்து விடும்படி பின்னை நாராயணன் அவருக்குப் பல கடிதங்கள் எழுதினான். ஆனால் சுந்தரேசய்யருக்குப் பட்டணம் போகச் சிறிதும் விருப்பமில்லை.

அந்த வருடம் ஜவுளி மார்க்கெட்டில் ஏற்பட்ட பெரும் மந்த நிலை நாராயணனையும் கடுமையாகப் பாதித்தது. விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியால் அளவிட முடியாத நஷ்டம் ஏற்பட்டது. கையில் இருந்த பணத்தை யெல்லாம் 'புரட்டி' நிலைமையைச் சமாளித்துவிடத்தான் நாராயணன் முயன்றான். கையில் இருந்த பணமோ, நஷ்டத்தில் கால் பகுதியை அடைக்கத்தான் போதுமானதாக இருந்தது. அப்பாவுக்குக் கடிதம் எழுதினான்.

சுந்தரேசய்யர்தான் என்ன செய்வார்! இப்போது உத்தியோகமும் கிடையாது. பென்ஷன் மூலம் கிடைத்த வருவாய் குடும்பத்தின் அன்றாட நிர்வாகத்துக்குத்தான் போதுமானதாக இருந்தது.

தள்ளாத வயதில் அங்கும் இங்குமாகப் பங்களாவின் பேரில் ஐயாயிரம் ரூபாய் கடன் வாங்கினார். தம்மிடமிருந்த காரையும் ஐயாயிரம் ரூபாய்க்கு விற்றார். எல்லாப் பணத்தையும் நாராயணனுக்கு அனுப்பி வைத்தார்.

இந்த நஷ்டத்துக்குப் பிறகு நாராயணனின் நிலைமை ரொம்பவும்மோசமாகி விட்டது. ஜவுளி வியாபாரத்துக்கு அத்துடன் முழுக்குப் போட்டுவிட்டு, சென்னையிலேயே வர்த்தக ஸ்தாபனம் ஒன்றில் விற்பனை ஏஜன்டாகச் சேர்ந்து விட்டான்.



செழித்திருந்த குடும்பம் சீர்குலைந்து போன சமயத்தில்தான் நாராயணனை இன்னும் ஒரு முக்கியப் பிரச்னை எதிர்நோக்கி யிருந்தது. பருவத்தின் எழிற் சிறப்புடன் அவனது மூதல் பெண் சீதா திருமண வயதை எட்டியிருந்தாள்.

சென்னையிலேயே அவன் எங்கெங்கெல்லாமோ வரன்கள் தேடினான். ஆனால் லௌகிக விஷயம் குறுக்கிட்டுக் கல்யாணத்துக்குத் தடை கோலியது.

பேத்திக்குக் கல்யாணம்ஆகாமல்நிற்பது சுந்தரேசய்யருக்குப் பெரும் ஏமாற்றத்தை யளித்தது. சீதாவுக்கு எவ்வளவோ சிறப்பாக மணம் செய்ய வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டிருந்தார். பெரிய அந்தஸ்தில் வரதட்சிணையைப் பார்க்காமல், பேத்திக்கு முடிச்சுப்போட முடியாதபடி தமது குடும்பத்தின் பொருளாதார நிலை சீர்குலைந்து போய் விட்டதை நினைக்கும்போது சுந்தரேசய்யர் ஆறாத்துயரடைந்தார். ஆனால் அவர் தேக நிலை நாலு இடத்துக்குப் போய் வரன் தேடும் நிலைமையில் இல்லை.

இம்மாதிரி மனம் வெதும்பிக் கொண்டிருக்கும் பொழுதுதான் சென்னையிலிருந்து ஒரு சந்தோஷகரமான கடிதம் அவருக்கு வந்தது. நாராயணன் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்ததாவது:

அப்பாவுக்கு நாணு அநேக நமஸ்காரம்.

சென்ற வாரம் தங்கள் நண்பர் அட்வகேட் தேசிகாச்சாரியாரை இங்கு சந்தித்தேன். சீதாவின் கல்யாண விஷயத்தை அவரிடம் சொல்லி, ஜாதகம் ஏதாவது பார்த்துத் தரும்படி கேட்டேன். அவர், தம்மிடம் ஒரு இளம் வக்கீல் தொழில் பயிற்சி பெற்று வருவதாகவும், அவர் ஜாதகத்தை வாங்கித் தருவதாகவும் கூறினார். அதன்படி இரண்டு நாட்களுக்கு முன்பு ஜாதகத்தையும் கொடுத்தார். ஜோஸ்யர்களிடம் காண்பித்ததில், சீதாவின் ஜாதகத்துக்கு அந்த ஜாதகம் ரொம்பவும் பொருந்தி யிருப்பதாகச் சொன்னார்கள்.

பின்னை சீதாவைப் பார்த்துக் கல்யாணத்துக்குச் சம்மதித்து விட்டான். பின்னைக்கு அப்பா, அம்மா ஒருவரும் கிடையாது. சென்ற வருடம்தான் பி. எல். பாஸ் செய்திருக்கிறான். பையன் ரொம்பவும் நன்றாக இருக்கிறான்.

சீதாவின் அதிர்ஷ்டமோ அல்லது நம் அதிர்ஷ்டமோ, பையன் ஒரு தம்பிடி கூட வரதட்சிணை வேண்டாம் என்று சொல்லி விட்டான். ரொம்பவும் குறைந்த செலவில், எளிமையாகக் கல்யாணத்தை முடித்துவிடும்படி கோரியிருக்கிறான்.

கல்யாணத்தை அடுத்த வாரத்தில் இங்கேயே நடத்திவிட முடிவு செய்திருக்கிறேன். ஆதலால் இன்னும் ஒன்றிரண்டு நாட்களில் அம்மாவுடன் தாங்கள் புறப்பட்டு இங்கு வந்து சேரவும்.

இப்படிக்கு,
நாராயணன்''

சுந்தரேசய்யரின் கண்களில் ஆனந்த பாஷ்பம் பொங்கியது. தம்முடைய குடும்பத்தின் துயருக்கு விடிவு ஏற்படுத்தும் அந்த ஆதரிச புருஷனை மனமார வாழ்த்தினார். காலம் வருமா என்று கண்ணீர் விட்டுக் காத்திருந்த தமது பேத்திக்குப் புருஷனாக வாய்த்தவனின் மனிதப் பண்பை எண்ணிப் புளகாங்கிதம் அடைந்தார்.

தேக நிலே இடம் கொடுக்காததால் அவர் மூதன் முதலாகத் தம் குடும்பத்தில் நடக்கும் பேத்தி கல்யாணத்துக்குப் போய், கண் குளிரப் பார்த்து மகிழ்ந்து நடத்தி வைக்க முடியவில்லே.

எனவே, கல்யாணமாகி இரண்டு மூன்று நாட்களுக்கெல்லாம் பெண்ணேயும், பிள்ளேயையும் கூட்டிக் கொண்டு அப்பாவுக்கும், அம்மாவுக்கும் மாப்பிள்ளேயைக் காட்டி ஆசிர்வாதம் பெறுவதற்காக நாராயணன் கோயமுத்தூருக்குப் பயணமானுர்.

* * *

ஜன்னலின் ஓரமாகப் போடப்பட்டிருந்த கட்டிலில் படுத்திருந்த சுந்தரேசய்யர், உலகத்தின் நினைவை யெல்லாம் மறந்து இன்னதென்று நிர்ணயிக்க முடியாத ஏதேதோ சோக நிகழ்ச்சிகளில் மனம் ஊன்றிப் போயிருந்தார். இருபத்தைந்து முப்பது வருடங்களாக அந்த பங்களாவில் அவர் நடமாடி வாழ்ந்த நாட்களில் நடந்து போன ஒவ்வொரு சம்பவமும், மங்கிய நினைவிலே இங்கொன்றும், அங்கொன்றுமாக அவர் அகக் கண்களிலே புலப்பட்டுக் கொண்டிருந்தது.

வாசலில் ஜட்கா வண்டி வந்து நின்ற ஓசை கேட்டு, மிகுந்த ஆயாசத்துடன் ஜன்னலினூடே தமது பார்வையை ஓட்டினுர். வண்டியிலிருந்து முதலில் அவரது பிள்ளே நாராயணன் இறங்கினுன். அடுத்தபடியாக எப்போதோ பார்த்து, பருவத்தின் மலர்ச்சியில் உருமாறிப் போன அவரது பேத்தி சீதா இறங்கினுள்.

இப்போது அவரது கண்கள் நீட்சண்யமாக உற்றுப் பார்த்தன. ஆம், அவரது அருமைப் பேத்தி சீதாவின் கணவனல்லவா அந்த இளேஞன்! பல் இல்லாத அவரது பொக்கை வாயும் சந்தோஷத்தால் ஒரு முறை விரிந்தது.

தரையிலே சாஷ்டாங்கமாக விழுந்து தம்மை நமஸ்கரித்த சீதாவின் தலேயிலும், அவளது கணவனின் தலேயிலும், படுக்கையில் உட்கார்ந்தவாறே அக்ஷதை போட்டு, ஆசிர்வதித்தார் சுந்தரேசய்யர்.

சுந்தரேசய்யரின் தேய்ந்து போன நினேவுக் கண்ணுடியில் மின்னலென ஒரு முகம் தோன்றிப் பட்டென மறைந்தது.

அதே சமயம் பக்ஷிணம் தோளிலே பாயும் முன் போல, நினேவு முற்ருத தனது வயதிலே நடந்த சம்பவமும், அப்போது பார்த்த அந்த முகமும் இப்போது தியாகராஜவின் மனக் கண்ணிலே நர்த்தனமாடின.


வாழ்க்கையின் இறுதி யாத்திரைக்கு ஆயத்தம் செய்யும் அந்தக் கிழவருக்கும், இன்பம் பொங்கும் மண வாழ்க்கையிலே அடியெடுத்து வைக்கும் அந்த இளேஞனுக்கும் ஒரு கண நேரம் வியப்பும், திகைப்பும் அலே அலேயாக நெஞ்சிலே பாய்ந்தன.

"பரிசாரக பசுபதியின் பையனு அப்பா!"—தாங்க முடியாத வேதனே தோய்ந்த வார்த்தைகளேக் கொட்டினுர்.

"ஆம், மாமா! நாகைய நல்லூர் பரிசாரகர் பசுபதி அய்யரின் புதல்வன் தியாகுதான் நான்" என்று அடக்கமும் வருத்தமும் கலந்த குரலில் தியாகராஜன் பேசினுன்.

அவனே இன்னும் எவ்வளவோ கேட்க வேண்டும் என்ற ஆர்வம் அவர் முகத்தில் முட்டி மோதிக் கொண்டு வந்தது. ரொம்பவும் வேதனேயுடன் கிழவர் பேசுவதைப் பார்த்த தியாகு, அவர் கேட்பதற்கு முன்பே எல்லா விஷயங்களேயும் சொல்லி விட்டான்.

மனம் ஒடிந்து ஜட்ஜின் வீட்டிலிருந்து வந்த பசுபதி அன்று இரவே, உடல் நலம் குன்றி யிருந்த மீனுவுடன் தியாகுவை அழைத்துக் கொண்டு சென்னேக்கு ரயிலேறி விட்டான். சென்னேக்கு வந்தவன் ஒரு ஹோட்டலில் வேலேக்குச் சேர்ந்தான். மனத்திலே விகல ரூபமாக உருவகப்படுத்தியிருந்த ஒரு



சங்கல்பத்துடன் தன் வயிற்றைச் சுருக்கி அருமையாக வளர்க்க விரும்பிய தன் ஒரே பிள்ளையைப் படிக்க வைத்தான்.

தியாகு எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்தான். பசுபதியின் ஆசைக் கனவின் ஒரு கட்டம் பூர்த்தியாகி யிருந்தது.

ஒரு நாள் ஓட்டலில் வேலை செய்து கொண்டிருந்த பசுபதி திடீரென்று மயக்கம் போட்டுக் கீழே விழுந்தான். அங்கேயே முதல் சிகிச்சை அளித்து வீட்டுக்குக் கொண்டு வந்தனர்.

பசுபதிக்கு மூன்று முறை நினைவு வந்து வந்து போயிற்று. நான்காவது முறையும் நினைவு வந்தது. கண்களை உருட்டி நான்கு புறமும் பார்த்தான். மீனாவும், தியாகுவும் பிரமை பிடித்தது போல் நின்று கொண்டிருந்தனர். "மீனா! தியாகுவை...கவனிச்சுக்கோ. நானு இடத்திலே.... மாடாகப்... பாடுபட்...டாவது, இல்லே, தாலியை விற்றாவது தியாகுவை வக்கீலுக்குப் படிக்க வை"—ஆசை பொங்கப் பசுபதி பேசினான்.

தியாகுவையும் அருகிலே கூப்பிட்டு, "தியாகு! எப்படியாவது... நன்றாகப் படித்து வக்கீலாக வந்துவிடு!" என்றான்.

பிறகு பூரண மனத்திருப்தி யடைந்தவனாய், அடுத்த கணம் மீள முடியாத நினைவிலே அவன் நித்திரை செய்யப் புகுந்து விட்டான்.

மீனாவும், தியாகுவும் கண்களிலே உதிரமாய் நீர் சொட்டக் கதறிக் கதறி அழுதனர்.

அப்புறம் மீனா, அட்வகேட் தேசிகாச்சாரியாரின் வீட்டில் மாதம் இருபது ரூபாய் சம்பளத்தில் சமையல் வேலை செய்து வந்தாள். ஒவ்வொரு தம்பிடியையும் பொன்னாகக் காத்து, தியாகுவைக் காலேஜில் இண்டருக்குச் சேர்த்தாள். தியாகு, உபகாரச் சம்பளம் பெற்று முதல்தர மாணவனாய் மள மள வென்று முன்னேறி பி. ஏ. பாஸ் செய்தான். பிறகு சட்டக் கல்லூரியில் சேர்ந்து பி. எல். பரீட்சையில் மாகாணத்திலேயே முதல் மாணவனாகத் தேறினான். மீனா பூரித்துப் போனாள். பிள்ளை வக்கீலானவுடன், தான் வேலை செய்த அட்வகேட் தேசிகாச்சாரியாரிடமே தொழில் பயிற்சிக்குச் சேர்த்து விட்டாள்.

கணவன் தனக்கு இட்டிருந்த கடமையை முடித்தவளாய், பட்ட கஷ்டங்களின் வேதனையிலேயே ஒருநாள் மீனா கண்ணை மூடிவிட்டாள்.

தன்னை மனிதனாக்கிய மாதாவின் பிரிவுத் துயரைத் தாளமாட்டாதவனாய்த் தியாகு கதறினான். அவன் இப்போது தனியனாகி விட்டான்.

ஒவ்வொரு மூச்சிலும் 'தன் பிள்ளை வக்கீலாக வேண்டும்' என்ற ஆசை வெறி பிடித்து, அந்த லட்சிய நினைவிலேயே தன் கடைசி மூச்சையும் விட்ட பசுபதி, இன்று தன்னுடைய பிள்ளை வக்கீலாகி, கோர்ட்டுக்குப் போய் வருவதைப் பார்த்து மகிழ முடியாத எந்த இடத்துக்கோ அல்லவா போய் விட்டான்!

அடிபட்ட குழந்தையைப் போல சுந்தரேசய்யர் விக்கி விக்கி அழுதார். நயனங்களிலிருந்து பொலபொல வென்று வழிந்த நீரின் உவர்ப்புக் கறை, உலர்ந்து சுருங்கிப் போயிருந்த அவரது கன்னங்களில் சுவடேறியது.

பார்வை மங்கிக் குழி விழுந்திருக்கும் தமது கண்களால் தியாகுவை உற்றுப் பார்த்தார் ரிடையர்ட் ஜட்ஜ்.

"உன் பிள்ளை படித்துப் பெரிய வக்கீலாகப் போகிறானே!" பசுபதியைப் பார்த்து அன்று தாம் கேட்ட இந்தக் கேள்வி அவர் காதில் மறுபடியும் ரீங்காரமிட்டது.

இளம் வக்கீல்—இல்லை, தமது பேத்தியின் கணவனை, மறுபடியும் ஆசையோடு பார்த்தார்.

பசுபதி தன்னைச் சாட்டை கொண்டு அடிப்பது போல, அவர் இதயம் புண்ணாக நொந்தது. தாங்கொணாத துக்கம் அவர் நெஞ்சைக் கசக்கிப் பிழிந்தது.

"அவன் மனிதன்!" என்று அவர் வாய் தீனமாக முணுமுணுத்தது.



உத்தமர் மறைவு

அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளியின் காரியதரிசியாகவும், தலைவராகவும் இருந்து அரிய கல்வித் தொண்டாற்றியவர் திரு கே. ஏ. சிவஞானம் பிள்ளை அவர்கள். முப்பத்தேழு ஆண்டுகள் சிறந்த வழக்கறிஞராகத் திகழ்ந்தார். பின்னர் வக்கீல் தொழிலிலிருந்து ஓய்வு எடுத்துக் கொண்டு பொதுநலப் பணியும் சமயப் பணியும் ஆற்றினார். எல்லாரிடமும் இனிமையாகப் பேசும் பண்பும், உபசரிப்பும், குழந்தையைப் போன்ற உள்ளமும் அவரோடு பழகியவர்களின் மனத்தைக் கவர்ந்தன. ரசிகமணி டி.கே.சி. போன்ற பெரியார்கள் பலரின் அன்பைக் கவர்ந்தவர் அவர். இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த பிள்ளையவர்கள் ஜூன் 27-ம் தேதி தமது எழுபத்தி ஆறாவது வயதில் இறைவனடி சேர்ந்தார்கள். அவரது மருமகர் ஹிந்து மத அறநிலையக் கழகத் தலைவர் திரு டி. கே. சங்கரவடிவேலுப் பிள்ளை அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். ●

ஒரு நாள் மாலை நேரம். நீல வானம் நிர்மலமா யிருந்தது. கிழக்கே வானளாவிய மலைகள் கம்பீரமாகக் காட்சி தந்தன. குளிர் தென்றல் சிலுசிலுவென்று வீசிக் கொண்டிருந்தது. அந்தக் காற்றில் அசைந்த இலைகளின் சலசலப்பைத் தவிர வேறு சத்தமே கிடையாது. அந்த ஊர் கிராமவாசிகள் அத்தனை பேரும் அங்கே மரத்தடியில் கூடியிருந்தனர். பிரார்த்தனை முடிந்து விட்டது. அந்த மகானின் இதழ்களிலிருந்து என்ன புனித மொழிகள் வெளிவரப் போகின்றனவோ என்று ஆவலுடன் ஆடாமல் அசையாமல் அவரையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தனர். அவர்கள் ஆவல் வீண்போகவில்லை. ஸ்ரீ வினோபா நிதானமாக, ஆனால் மிக உறுதியான குரலில், "**நமது கிராமத்தில் நிலமில்லாதவர்கள்?...**" என்று கேள்விக் குறி தொனிக்கக் கேட்டார்.

அங்கு கூடியிருந்த கிராமவாசிகள் அத்தனை பேரும் கைகளை உயரத் தூக்கி,



பூதானத்தில் புதிய புரட்சி

சுரேஷ் ராம்

அதே உறுதியான குரலில் "ஒருவரும் இல்லை! ஒருவரும் இல்லை!" என்று பதிலிறுத்தனர்.

இதைக் கேட்ட வினோபா அடிகளின் முகத்திலே இளம் புன்னகை அரும்பியது.

"**நமது கிராமத்தில் நிலம் உடையவர்கள்?**" என்று அதே குரலில் கேட்டார்.

"ஒருவரும் இல்லை! ஒருவரும் இல்லை!" என்று அதே உறுதியான குரலில் பதில் அளித்தனர்.

இதைக் கேட்டுத் திருப்தி யடைந்த வினோபா பேசினார். அவர் பேச்சின் சாரம் இதுதான்.

"நிலத்தில் பாடுபடுபவர்கள் அனைவருக்கும் நிலம் வாங்கித் தர வேண்டும். இதுதான் நமது முதல் வேலை. பின்னர் நில உடைமை கொண்டாடுபவர்கள் யாருமில்லை என்ற நிலைமையை ஏற்படுத்துவது. இதுதான் நமது முடிவான லட்சியம்.

"நிலம் கடவுளின் சொத்து. நாம் பூமாதேவியின் புதல்வர்கள். நம்மாலியன்ற அளவு பாடுபட்டு வேலை செய்வதுதான் நமது கடமை" என்று கூறினார்.

** ** **

இந்த அற்புத நிகழ்ச்சி ஒரிஸ்ஸாவில் கஞ்சம் ஜில்லாவிலுள்ள பாலிபாடா என்ற கிராமத்தில் நிகழ்ந்தது.

இந்த ஜில்லாவில் வினோபாவுக்குப் பன்னிரண்டு கிராமங்கள் கிடைத்தன. அந்தக் கிராமவாசிகளுக்கே, அந்த நிலங்களையெல்லாம் வினோபா பகிர்ந்து அளித்து விட்டார். இப்பணியைப் புரிந்து விட்டு அந்த ஜில்லாவை விட்டுப் புறப்படுவதற்கு முதல் நாள்—மே 28ம் தேதி வினோபா பின் வருமாறு கூறினார்:

"இன்றையச் சூழ்நிலையில் கிராமவாசிகள் தங்கள் கிராமங்களை அப்படி அப்படியே நில தானம் செய்துவிட வேண்டும் என்று விரும்புகிறார்கள். இத்தகைய நிலை தேசம் முழுவதும் சீக்கிரத்திலேயே ஏற்படும். தேசத்திலுள்ள எல்லாக் கிராமங்களும் பூமி தான இயக்கத்துக்குக் கிடைத்து விடும். சென்ற நான்கு ஆண்டுகளில் பூமிதானம் எனும் கங்கை நாடு பூராவும் பரவிப் பாய்ந்திருக்கிறது. நாலரை லட்சம் பேர் தங்கள் நிலங்களை பூமி தானத்துக்கு வழங்கியிருக்கிறார்கள். இந்த பூதான இயக்கத்தின் காரணமாக இப்போது புதுப் புரட்சி தேசத்தில் ஏற்பட்டிருக்கிறது. அதன் பயனாக 'நிலத்துக்குச் சொந்தக்காரன்' என்ற வார்த்தையே இல்லாமல் போகப் போகிறது. 'நிலம் கிராமத்துக் குரியது; ஆண்டவன் அதற்குச் சொந்தக்காரன்' என்பது மக்கள் மனத்தில் நன்றாக வேரூன்றத் தொடங்கியிருக்கிறது" என்றார் அடிகள்.

இந்தப் புரட்சியின் தீர்க்க தரிசனம் வினோபா அடிகளுக்கு முன்னதாகவே ஏற்பட்டிருக்க வேண்டும். அதனால்தான் இந்த ஒரிஸ்ஸா ராஜ்யத்தில் அடியெடுத்து வைத்த அன்று, "இனி நாம் செய்ய வேண்டியது என்னவெனில் பூமிப்புரட்சி. இது வரை நிலமில்லாத உழவர்கள் நிலம் பெறப் பாடுபட்டு வந்தோம். அது மட்டும் போதாது. நிலம் கடவுளின் பொருள், சமுதாயத்தின் சொத்து. இந்த லட்சியத்தோடு எங்காகிலும் மக்கள் வாழ்வார்களாயின் நான் பூதானத்தின் பூரண சொருபத்தை, தேஜஸைக் கண்டு விட்டதாக எண்ணுவேன். நான் அந்தக் காட்சியை இந்த ராஜ்யத்தில் காண விரும்புகிறேன்" என்றார்.

இந்த வழியில் தைரியமாக முதன் முதலில் சென்று வழி காட்டியவர்கள் உத்தரப் பிரதேசத்திலுள்ள 'மாங்க்ரோத்'



என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள்தாம். 1952ம் வருஷம் மே 23ம் தேதி அவர்கள் தங்கள் கிராமத்தையே வினோபாவுக்கு வழங்கி விட்டார்கள். 1953 ஜனவரிமாதம் 26ந் தேதி கட்டாக் ஜில்லாவிலுள்ள மான்பூர் கிராமம் முழுதும் நிலதானமாக வழங்கப்பட்டது.

• • •

வினோபா ஆரம்பத்திலிருந்தே என்ன கூறி வந்தார் என்பதை நினைவுகூர வேண்டும். அவர் "நிலம் கொடுங்கள்" என்று கேட்டார். வாஸ்தவம். ஆனால் பிச்சைக்காரரைப்போல் அல்ல. மாபெரும் உண்மையை விளக்கும் மாமுனிவராக நின்று கேட்டார். அதனால் பெரு நிலக்கிழார்களிடமிருந்து நிலத்தைப் பிரித்துக் கொடுத்து விட வேண்டும் என்று கேட்கவில்லை. அப்படிப் பிரித்துக் கொடுப்பதனால் தேசத்தில் இன்னும் ஏழைமை அதிகரிக்கலாம். ஏழைக் கிராமவாசிகள் பணத்திலே குறியாக இருக்கும் நகரவாசிகளின் பேராசை வலையில் விழுந்து விட நேரும் என்பதெல்லாம் அவருக்குத் தெரியாமலில்லை. வினோபாவின் லட்சியம் வேறு. அவர் அதை வெகு விளக்கமாகக் கூறியிருக்கிறார்.

"நிலப் பிரச்னை என்பது உலகில் எங்குமுள்ள பிரச்னை. இன்றில்லாவிட்டால் நாளை இது எப்படியோ தீர்ந்துவிடத்தான் போகிறது. ஆகவே, இன்று எனக்கு எவ்வளவு நிலம் கிடைக்கும் என்பதைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை. மக்கள் உள்ளத்தின் ஆழத்திலே நேர்மையான எண்ணமும், நோக்கமும் குடிகொள்ள வேண்டும் என்பதே என் கவலை."

அந்த நேர்மையான எண்ணம்யாது? இக்கட்டுரை ஆரம்பத்தில் கூறப்பட்டதுதான். பாலிபாடா கிராமவாசிகள் அந்த மறக்க முடியாத நன்னாளில் மீண்டும் மீண்டும் கூறிய மொழிகள்தாம். நிலத்துக்குச் சொந்தக்காரர்கள் என்பவர்கள் ஒருவருமில்லை! ஒருவருமில்லை!

• • •

நிலத்தை உடைமையாக்கிக் கொள்ளலாம், விற்கலாம், வாங்கலாம்-என்பதெல்லாம் ஒருகணம் யோசித்தால் அர்த்தமற்றவையாகத் தோன்றுகிறது. ஏனெனில் பணத்தைக் கொண்டு நிலத்தை மதிக்க முடியாது. காலத்தை அங்குலமாகவும் அடியாகவும் அளக்க முடியுமா? நிலத்தை வியாபாரப் பொருளாக மாற்றியது சாபத்திடு. இந்த வழக்கத்தை நம் நாட்டில் ஏற்படுத்தியவர்கள் ஆங்கிலேயர்கள் என்று நமது பண்டித நேருவே தமது உலக சரித்திரத்தில் கூறுகிறார்.

எப்படியாயினும் என்ன? இன்று நிலத்தைப் பணத்தால் மதிப்பது என்பது நமது பொருளாதார வாழ்க்கையில் ஒரு அம்சமாகி விட்டது. சர்க்கார், பொருளாதாரப் பள்ளிகள், சங்கங்கள் யாவும் இதை அப்படியே ஒப்புக் கொண்டு விட்டன. இந்த அடிப்படைத் தவற்றை வினோபா மாற்ற முயல்கிறார். இதை மக்கள் தாமே மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் விரும்புகிறார்.

'சரி, நிலம் வியாபாரப் பொருளாக இல்லையென்றால், மற்ற உற்பத்திச் சாதனங்களாகிய ஆலைகள், மில்கள் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?' என்ற கேள்வி எழுகிறது. வினோபா இதற்கும் மிகத் தெளிவான பதில் வைத்திருக்கிறார். அதைச் சென்ற மே மாதம் 30ந் தேதி பிரார்த்தனைக் கூட்டத்தில் கூறினார்:

"நிலம் எப்படி யாருக்கும் தனி உரிமையாக இருக்க முடியாதோ அப்படியே தொழிற்சாலைகள், மில்கள், ஆலைகள் யாருக்கும் உடைமையாயிருக்கக் கூடாது. இன்று நமது தொழிற்சாலைகளில் இருவகை மனிதர்கள் உழல்கிறார்கள்—தொழிலாளிகள், முதலாளிகள் என்று. நான் இந்த இரு கூட்டத்தினரையும், தொழிலாளிகளாகவும் முதலாளிகளாகவும் வேலை செய்ய வேண்டும் என்று கூறுகிறேன். ஒருவன் புத்திக் கூர்மை பெற்றவனாக இருந்தால், அவன் தன் புத்தியைப் பயன்படுத்தட்டும். ஒருவன் தேகதிடம் பெற்றவனாக இருந்தால் அவன் தன் தேகபலத்தை வழங்கட்டும். இருவருமே அத் தொழிற்சாலையை உடைமையாகப் பெற்றவர்கள்தாம். ஆனால் ஒரு பொருளுக்கு உரிமை இருவர் கொண்டாடினால் சண்டைதான் விளையும். ஆகவே, ஒருவர்தான் உரிமை பெற்றவராக இருக்க முடியும். அதாவது அந்தச் சமுதாயத்திலுள்ளவர்கள் அத்தனை பேருமோ அல்லது கடவுளோதான் அந்தத் தொழிற்சாலைக்கு உரியவராக இருக்க முடியும். மற்ற அனைவரும் வேலைக்காரர்கள். ஆண்டவன் முதலாளியான பிறகு, நமக்கு என்ன கிடைக்கிறதோ அதை நாம்அனைவரும் சமமாகப் பகிர்ந்து கொள்ளுவோம். சமுதாயத்தின் நலத்துக்காகப் பாடுபடுவோம். எதிர்காலத்தில் இந்தத் தத்துவம்தான் செலாவணியிலிருக்கப் போகிறது. தனி உடைமை என்பது உலகில் நடக்க முடியாத காரியம். இந்த அடிப்படை உண்மையைநீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்."

* * *

வினோபாவின் 'கிராமதானம்' எங்கும் பரவத் தொடங்கி விட்டது. ஒரிஸ்ஸாவிலுள்ள மிகச் சிறந்த நிர்மாண ஊழியரான ஸ்ரீ கோபபந்து சௌத்ரியின் முயற்சியினாலும் அவரது மனைவியின் உழைப்பினாலும் இதுவரை 230 கிராமங்கள் கிராம தானமாகக் கிடைத்துள்ளன. நாளுக்கு நாள் இந்தத் தொகை அதிகரித்துக் கொண்டுதான் வருகிறது. வினோபா அடிகள், கிராமதானம் என்னும் மந்திரத்தினால் கிராம மக்களின் உள்ளங்களில் புதுக் கனலை எழுப்பி விட்டார்.

"நான் ஒவ்வொரு கிராமமும் செல்வம் கொழிக்கும் கிராமமாக விளங்க வேண்டும் என்று விரும்புகிறேன். நிறைய உற்பத்தி செய்ய வேண்டும் என்றும் விரும்புகிறேன். அதற்கு முன் கிராம தானம் என்னும் கனலை ஒவ்வொருவர் உள்ளத்திலும் மூட்டிவிட வேண்டும் என்றும் விரும்புகிறேன்.

"மலைப் பிரதேசமான பகுதிகளிலே வயல்களில் முதலில் தீயிட்டுக் கொளுத்தி விட்டுத்தான் உழுது சாகுபடி செய்வார்கள். ஆனால் நானோ சென்ற முப்பதாண்டுகளாக வர்தாவில், தீயிட்டுக் கொளுத்தாமல் சாகுபடி செய்ய முயன்றிருக்கிறேன். இதன் பயனாக ஒன்றுமே விளையவில்லை. 'முப்பது ஆண்டுகள் பாடுபட்டோமே, ஏன் ஒரு பலனும் விளையவில்லை?' என்று எத்தனையோ முறை என்னை நானே கேட்டுக் கொண்டிருக்கிறேன். காரணம் சமீபத்தில்தான் புரிந்தது. தீயிடாமல் ஒன்றுமே உற்பத்தி செய்ய முடியாது என்பதைக் கண்டேன். உடனே நெருப்பைத் தேடிக் கொண்டு புறப்பட்டேன். பூதானம் (என்னும் தீ) எனக்குக் கிடைத்தது!"

1957-க்குள் தேச முழுதும் இந்தப் பூதானம் என்னும் தீயை மூட்டிவிட வேண்டும் என்று விரும்புகிறார் வினோபா. நிலப்புரட்சி ஏற்படுத்தி விட்டால் பிறகு நம் விருப்பப்படி சுபிட்ச இந்தியாவை நிர்மாணித்துக் கொள்ளலாம். இந்த அஸ்திவாரம் இன்றிச் செய்யப்படும் எந்த முயற்சியும், மணலில் கட்டடம் கட்டுவதற்கு ஒப்பாகும். நாம் எல்லோரும் சேர்ந்து இந்த நிலப்புரட்சியை வெற்றியாக்குவோமாக!

யாத்ரீகர்களுக்கு வசதி

ரஜனி

கொழும்பு, ஜூலை 2

யாழ்ப்பாண தீபகற்பத்திலிருந்து பிரதி வருடமும் சுமார் ஐயாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சிதம்பரத்துக்கும் மதுரைக்கும் யாத்திரை போகிறார்கள். இவர்களைத் தவிர சுமார் 1500 இலங்கை மாணவர்கள் இந்தியாவில் பல்வேறு சர்வகலாசாலைகளிலும் கல்வி பயிலுவதினால் வருடத்தில் இரண்டு மூன்று தடவைகள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பிரயாணம் செய்து வருகின்றனர். இவர்கள் ஒவ்வொரு தடவை இந்தியாவுக்குப் புறப்படுகையிலும் கொழும்புக்கு வந்து ஐந்தாறு தினங்கள் தங்கி இந்திய ஹைகமிஷனிடம் விஸா பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. இதனால் அதிகச் செலவு ஏற்படுவதுடன் வீண் பிரயாசையும் காலதாமதமும் உண்டாகிறது. இதைத் தவிர்க்கப் பொறுப்பு வாய்ந்த பார்லிமெண்ட் அங்கத்தினர்களின் வேண்டுகோளுக்கிணங்க, யாழ்ப்பாணத்தில் விஸா வழங்கும் காரியாலயம் ஒன்றைத் திறப்பதாகச் சென்ற வருடம் இந்திய ஹைகமிஷனர் ஸ்ரீ ஸி. ஸி. தேசாய் கூறினார். ஆனால் அவர் இந்திய ஹைகமிஷனின் கிளை ஒன்றை வட இலங்கையில் திறந்து ஏதோ திரிசமன் செய்யத் திட்டமிட்டிருப்பதாக இலங்கை அரசாங்கம் அப்போது சந்தேகித்தது. மருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பார்கள். அதைப் போல இந்திய ஹைகமிஷனைச் சந்தேகக் கண்களுடன் பார்த்த கோத்தலேவாலா சர்க்கார் யாழ்ப்பாணத்தில் விஸா காரியாலயம் திறக்கப்படுவதை அனுமதிக்க மறுத்து விட்டது.



சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ காமகலா காமேசுவரர் ஆலயத்தில் உடையாளூர் பாலவால்மீகி ஸ்ரீ ராமமூர்த்தி சர்மா அவர்களின் ராமாயணப் பிரவசனம் சுமார் ஒரு மாதகாலம் நடைபெற்றுச் சென்ற 3—7—55 ராமராஜ்ய பட்டாபிஷேகத்துடன் முடிவுற்றது. சர்மா அவர்கள் வால்மீகி பகவானின் சுலோகங்களையும் கவிச்சக்கரவர்த்தி கம்பரின் தீந்தமிழ்ப் பாடல்களையும் விரவிப்பாடி நிகழ்த்திய பிரவசனம் காதுக்கும் கருத்துக்கும் ரம்யமாயிருந்தது.

இவ் வாரம் இந்தியாவில் கல்வி பயிலும் இலங்கை மாணவர்கள் யூனியனின் தலைவரான ஸ்ரீ எஸ். பாஸ்கரன் தாற்காலிகப் போக்குவரத்து மந்திரி ஸ்ரீ வி. குமாரஸ்வாமியுடன் சென்று பிரதம மந்திரியைச் சந்தித்து மாணவர்களின் கஷ்டங்களையும் யாத்ரீகர்களின் துன்பத்தையும் எடுத்துரைத்தார். அதன் மீது இந்திய ஹைகமிஷனின் விஸா காரியாலயம் ஒன்று யாழ்ப்பாணத்தில் திறக்கப்படுவதை இலங்கை அரசாங்கம் இனி ஆட்சேபிக்க மாட்டாதென்று பிரதம மந்திரி ஸர் ஜான் கோத்தலேவாலா உறுதி கூறியிருக்கிறார்.

அடுத்த வருட ஜூலை மாதத்துக்குப் பிறகு இலங்கை மாணவர்கள் இந்திய சர்வகலாசாலைகளில் சேரக்கூடாதென்றும் அவர்களுடைய செலவுக்குப் பணம் அனுப்புவதை அனுமதிக்க முடியாதென்றும் நிதிமந்திரி ஸ்ரீ ஜயவர்த்தன சென்ற வாரம் அறிவித்திருந்தார். இதைப் பற்றியும் மந்திரி ஸ்ரீ குமாரஸ்வாமி கடுமையாக ஆட்சேபித்துக் கொண்டதினால் இலங்கை மாணவர்கள் உலகின் எந்த பாகத்துக்குச் சென்று படிப்பதையும் அரசாங்கம் தடுக்காதென்று பிரதமர் உறுதி கூறினார்.

* * *

இந்திய ஹைகமிஷனர் ஸ்ரீ சக்கரவர்த்தி அகில இலங்கை பெரிய கங்காணிமார் சங்க வருடாந்திரக் கூட்டத்தில் பேசிய பொழுது வெளியிட்ட சில விஷயங்கள் இந்தியச் சமூகத்துக்கு விசேஷ பரபரப்பைக் கொடுத்திருக்கிறது. சென்ற வருஷ அக்டோபர் மாதத்துக்குப் பிறகு இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ளுபவர்களை அவர்களுடைய ஐம்பத்தைந்தாவது வயது வரையில் இலங்கையில் தொடர்ந்திருக்க அனுமதிப்பதாக டில்லி ஒப்பந்தத்தில் இலங்கை சர்க்கார் ஒப்புக் கொண்டிருந்தார்கள். 'இந்த வாக்குறுதியை அவர்கள் காப்பாற்றாமல் ஐம்பத்தைந்து வயதுக்கு முன்னதாகவே

இந்தியப் பிரஜைகளானவர்களை வெளியேற்ற முற்பட்டால் என்ன செய்வது ! அந்த நிலைமையில் இந்திய அரசாங்கம் என்ன மாதிரியான உதவிகளைச் செய்ய முடியும் !' என்று ஒரு கேள்வி கேட்டபொழுது, "ஒப்பந்தப்படி இலங்கை அரசாங்கம் நடக்காவிட்டால் இந்திய சர்க்கார் ஆட்சேபனை தெரிவித்துக் கொள்ளலாம். அதற்குமேல் வேறு ஒன்றும் செய்ய முடியாது. இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொண்டவர்களை வெளியேற்ற இலங்கை அரசாங்கத்துக்கு எப்பொழுதுமே உரிமை யுண்டு" என்று ஹைகமிஷனர் ஸ்ரீ சக்கரவர்த்தி உள்ளதை ஒளிக்காமல் சொன்னார். இந்தியப் பிரஜைகளானாலும் இலங்கையில் ஓட்டுரிமையின்றி ஐம்பத்தைந்து வயது வரையில் சம்பாதிக்கலா மென்று எண்ணி யிருந்தவர்களின் ஆசையை ஸ்ரீ சக்கரவர்த்தி நிராசையாக்கி விட்டார். ஒப்பந்தப்படி இலங்கை நடக்கப் போவதில்லை யென்பது பகிரங்க ரகசியமா யிருந்தாலும் ஒப்பந்தப்படி நடக்க வேண்டுமென இலங்கையை இந்திய அரசாங்கம் கட்டாயப் படுத்தினால் கெடுபிடிகளாவது சற்றே குறையும். இதற்கும் இடமில்லையென்ற தோரணையில் இந்திய ஹைகமிஷனர் பதிலளித்தது பலருக்கும் பெரிய ஏமாற்றம்.

* * *

இலங்கை இந்தியப் பிரதம மந்திரிகளுக்கிடையில் சென்ற வருட ஜனவரி மாதம் ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு 9851 பேர்கள் இந்தியப் பிரஜாவுரிமையை நாடி மனுக் கொடுத்தார்கள். ஒப்பந்தத்தில் ஒப்புக் கொண்டபடி அவர்களில் 8261 பேர்களை இந்தியாவின் பிரஜைகளாக ஹைகமிஷன் பதிவு செய்து கொண்டிருக்கிறது. பாக்கி 1590 பேர்களின் மனுக்கள் விசாரணையில் இருக்கின்றன. ஒருவருடைய மனுவைக்கூட இந்திய ஹைகமிஷன் இதுவரை நிராகரிக்கவில்லை.

இலங்கையின் போக்கைக் கவனித்தால், இதே கால அளவில் இலங்கை அரசாங்கம் சுமார் இரண்டாயிரம் பிரஜாவுரிமை மனுக்களை மட்டுமே அங்கீகரித்துள்ளது. 31,300 மனுக்களை நிராகரித்து ஒரு லட்சத்துக்கு மேற்பட்டவர்களை ராஜ்யமற்றவர்களாக்கி யிருக்கிறது. இந்த லட்சணத்தில் தான் டில்லி ஒப்பந்தத்தை ஒழுங்காக அமுல் நடத்த இந்திய ஹைகமிஷனர் முட்டுக்கட்டை போடுவதாக நேருஜியிடம் இலங்கை அரசாங்கம் நேரடியாக இவ்வாரம் புகார் தாக்கல் செய்யப் போகிறது!

* * *

சென்ற வாரம் இலங்கை பார்லிமெண்டில் தேசிய பாஷைப் பிரச்னையைப் பற்றி விவாதம் நடைபெற்ற பொழுது சிங்களம், தமிழ் ஆகிய இரண்டும் இலங்கையின் தேசிய பாஷைகளாயிருக்க வேண்டுமென்பது தான் அரசாங்கத்தின் உறுதியான கொள்கை யென்றும், பிரதமர் பதவியில் தாம் இருக்கும் வரையில் இக்கொள்கை ஒரு போதும் மாற மாட்டாதென்றும் பிரதம மந்திரி ஸர் ஜான் கொத்தலாவலா மறுபடியும் வாக்களித்தார்.

விளையாட்டு அரங்கம்

கால் பந்தாட்டம்

பந்து

சென்ற வியாழக்கிழமை கால் பந்தாட்ட மைதானத்தில் ஒருபெரிய ஜனத்திரள் கூடியிருந்தது. கோட்டை ஸ்டேஷனைச் சேர்ந்த பாலத்தின் படிக்கட்டுகளிலெல்லாம் ஜனங்கள் நின்று கொண்டு எதிரிலுள்ள மைதானத்தில் நடக்கும் கால்பந்து போட்டியை மிகவும் ரசித்துக் கொண்டிருந்தனர். மின்சார ரயில் வண்டி ஓட்டுபவர்கள்கூட விளையாட்டைப் பார்த்துக் கொண்டே மெதுவாக வண்டியைச் செலுத்தினார்கள்.

சென்னையில் எல்லா விளையாட்டுக்களையும் விட கால்பந்துக்குத்தான் தனி மவுசு. சென்னையில் மட்டுமல்ல, எல்லா ராஜ்யங்களிலும் அப்படியே. அதுவும் சென்னையில் 'விம்கோ' கட்சியார் விளையாடுகின்றனர் என்றால், அதற்கு மகத்தான வரவேற்பு, ஆதரவு. அன்று 'விம்கோ'வும், மைசூர் ராஜ்ய போலீஸ்காரர்களும் பிரஸிடென்ஸி கிளப் கோப்பைக்காகப் போட்டியிட்டனர். சமயத்துக்கேற்ற கூட்டம், ஆதரவு. சில ரசிகர்கள் இந்தத் தடவை 'விம்கோ'தான் வெற்றி பெற வேண்டும் என்று மனத்துக்குள் ஆசைப்பட்டார்கள். எதற்கு என்று கேட்டால், சமீபத்தில் கோயமுத்தூரில் நடந்த கால்பந்தாட்டப் போட்டியில் மைசூர் போலீஸ்காரர்கள் 'விம்கோ'வைத் தோற்கடித்ததுதான்.

வியாழனன்று விளையாட்டு சோபிக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். மைசூர்க்காரர்கள் நன்றாக ஒருமிக்க விளையாடினர். முதல் அரை மணி நேரத்துக்குள் ஒரு கட்சியாரும் ஒரு 'கோல்'கூடப் போடவில்லை. ஆனால் இரண்டாவது அரைமணியில் சீக்கிரமாகவே போலீஸ்காரர்கள் ஒரு 'கோல்' போட்டு விட்டனர். கடைசி ஐந்து நிமிஷத்தில் ஒரே ஆரவாரம். ஒரு நொடியில் விம்கோ 'கோல்' போட்டுச் சரிசமானமான நிலையை எய்தி விட்டனர். அந்த ஒரு நொடியில் கூட்டத்திலிருந்து ஒருவர் ஒரு ரோஜா மாலையைத் தங்கராஜுக்குச் சூட்டினார். மற்றும் பலர் அவரைக் கட்டித் தழுவினர். சிலர் அவரைத் தோள் மீது தூக்கிக் கொண்டு கூத்தாடினார்கள்.

ஆம்! தங்கராஜ் என்றால் சென்னையில் கால்பந்தாட்டம் தெரிந்த அனைவருக்கும் அவரைத் தெரியும். அவர் இல்லா விட்டால் எந்தக் கால்பந்துப் போட்டியும் சோபிக்காது. அவரால்தான் 'விம்கோ' வெற்றியடைய முடியும் என்பது எல்லோருடைய திடமான நம்பிக்கை. அந்த நம்பிக்கையை அவர் பாழ்படுத்தவில்லை. வியாழக்கிழமை ஆட்டம் வெற்றி தோல்வியின்றி, 'ட்ரா' ஆக முடிந்தது என்றால் அந்தப் பெருமை தங்கராஜுக்குத்தான் உரியது.

மறு நாள் மீண்டும் போட்டி நடந்தது. முதல் நாள் போன்ற பெருங் கூட்டம். அந்தக் கூட்டத்தின் லட்சிய புருஷர் தங்கராஜைத் தவிர வேறு யார் இருக்க முடியும்! போட்டி துவக்கமடைந்து ஒரு நிமிஷம்கூட ஆகவில்லை. தங்கராஜ் ஒரு நொடியில் 'கோல்' போட்டு விட்டார். ஜனங்களின் மகிழ்ச்சிக்குக் கேட்க வேண்டுமா! சில நிமிஷங்கள் கழித்து விம்கோ மறுபடியும் ஒரு கோல் போட்டது. யார்தான் போட்டிருக்க முடியும்! தங்கராஜ்தான். இரண்டாவது அரைமணியில் முதல் இருபது நிமிஷங்கள் விளையாட்டு 'சப்' என்றுதான் இருந்தது. ஆனால் கடைசி பத்து நிமிஷங்களில் போலீஸ்காரர்கள் ரொம்பவும் ரோஷத்துடன் விளையாடினார்கள். கோவிந்தராஜ் ஒரு 'கோல்' போட்டார். அவருக்கு இரண்டாவது 'கோல்' கிட்டவில்லை. எந்த நிமிஷத்திலும் மற்றொரு 'கோல்' விழுந்து விடும் என்று எல்லோரும் பயந்தார்கள். ஆனால் 'விம்கோ' கட்சியில் பாலகோபால், ஆஞ்சநேயலு இருவரும் படாதபாடு பட்டு, போலீஸ்காரர்களின் முயற்சிகளை ஒடித்து வீழ்த்தினர்.

'விம்கோ' கட்சியினர் கோப்பையை அடித்துக் கொண்டு போய் விட்டனர்.

மைசூர் போலீஸ்காரர்கள் பந்தயத்தை இழந்தார்கள். ஆனால் அவர்களைத் தோற்கடிப்பது எளிதான காரியமாக இருக்கவில்லை. அந்தக் கட்சியில் முக்கியமாக நந்தன், பூசாமி, கோவிந்தராஜ், ஷண்முகம் ஆகியோர் மிகவும் திறமையுடனும் அழகாகவும் விளையாடினார்கள்.



'விம்கோ' தங்கராஜ்

'வெயிற்காலத்து வயிற்றுக் கோளாறுகளை' தளதளக்கும் பானம் நிறுத்துகிறது



வெயில் காலத்தில் உங்கள் வயிறு மிகக் கலவமாகக் கெட்டுவிடுகின்றது. உங்கள் வாயில் ஒரு வித துர்க்கந்தம் ஏற்படுகிறது. தவிர நீங்கள் தளர்ச்சியாயும், சோம்பலுடனும் இருக்கின்றீர்கள். ஈனோ உங்கள் வயிற்றை சீராக்கி உங்கள் தேகநிலையை நேர்செய்து அதை ஆரோக்கியமாயும், சுறுசுறுப்பாயுமாக்குகின்றது.

ஈனோ எளிமையானது எனினும் வயிற்றில் புளிப்பை நீக்குவதில் அற்புத சக்தி வாய்ந்தது. எவ்வித கெடுதியும் செய்யாமல் அது புளிப்பு மிகுதியாலுள்ள அஜீர்ணம், நெஞ்செரிச்சல், வாயுப்பொருமல் முதலிய உபாதைகளை துரிதமாயும், நிச்சயமாகவும் நிவர்த்திக்கிறது. எட்டே செகண்டுகளில் நீங்கள் சுகம் பெறுகிறீர்கள்—வயிற்றுக்கு மட்டுமல்ல, வாய்க்குக்கூட!

பித்தம் மீறி புளிப்பதாலோ அல்லது உண்பது உங்கள் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாமலிருந்தாலோ ஈனோவின் விசேஷசக்தி, ஜீரண உறுப்புகளை மீண்டும் ஒழுங்குபடுத்த உதவுகிறது. உங்களுக்கு லேசாய் பேதியாக விரும்பினால் காலி வயிற்றில் கொஞ்சம் பெரிய 'டோஸ்' உட்கொள்ளவும். எப்பொழுதும் ஈனோஸ் 'ப்ரூட் ஸால்ட்'டை கையிருப்பில் வைத்துக் கொள்ளவும்.

அது உங்களுக்கு குணம் செய்வதுடன் குளுமையையும் புத்துணர்ச்சியையும் தருகிறது

ஈனோஸ் 'ப்ரூட் ஸால்ட்'



பெரிய புட்டி ரூ. 3/12
சிறிய புட்டி ரூ. 2/6
உள்ளூர் வரிகள் பிரத்தியேகம்

'ஈனோ' மற்றும் 'ப்ரூட் ஸால்ட்' என்ற வார்த்தைகள் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்குகளாகும்

ENO. 1508 (Tam.)

கீழ் நாடுகளுக்கு

பறந்து செல்லுங்கள்

சிங்கப்பூர், பாங்காக்

ஹாங்காங்

டோக்கியோ



துரிதமான, சௌகரியமான இணைப்பு சர்வீஸ் கீழ்கண்ட இடங்களுக்கு உண்டு.

ஜாகர்தா — மணில்லா
செய்கோன் — ஸிட்னி

ஏயர் இந்தியா இன்டர்நேஷனல் மூலம் கான்ஸ்டலேஷன் கவர்ந்திழுக்கும் கீழ் நாடுகளுக்கு பறந்து செல்லுங்கள். பிரயாணத்தின்போது வெஜிடேரியன் மற்றும் நான்-வெஜிடேரியன் சாப்பாடு இலவசம்.


நீங்கள் பிரயாணம் செய்கையில் தனிக்கட்டணம் எதுவுமின்றி வழியிலுள்ள எந்த ஸ்டேஷனிலும் இறங்கிச் சென்று வரலாம். உங்கள் இஷ்டம்போல் வேண்டிய காட்சிகளை பார்த்து நாட்களை கழித்தபின் நீங்கள் போய் சேரவேண்டிய இடத்திற்கு பறந்து செல்லலாம்.

பிரதி வெள்ளிக்கிழமை: பம்பாய்-மதராஸ்-சிங்கப்பூர்

பிரதி ஞாயிற்றுக்கிழமை: பம்பாய்-கல்கத்தா-பாங்காக்-ஹாங்காங்-டோக்கியோ

ஏயர்-இந்தியா இன்டர்நேஷனல்

AII .1802 மதராஸ்



அத்தியாயம் 29

புதிய அனுபவங்கள்

புதன்கிழமை காலை ஒரே பரபரப்பாக இருந்தது. கவலையாகவும் இருந்தது. 'செட்டியாரிடம் சொல்லி விட்டேனே. இந்தப் படத்துக்கு நான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமே' என்று ஒரு பக்கம் ஜுரம் தோன்றிக் கொண்டிருந்தது. இன்னொரு பக்கம் 'நான் செய்வது சரியா? அப்பாவும் அம்மாவும் இதை விரும்பி யிருப்பார்களா? எல்லாவற்றுக்கும் மேலாக ரங்கதுரை இதை விரும்புவாரா?' என்று தோன்றிக் கொண்டிருந்தது.

ஆமாம்! இருக்கிறேனா செத்தேனா என்று கூடக் கவலைப்படாத ஒரு மனிதன் என்ன நினைப்பாரென்று நான் மாத்திரம் ஏன் கவலைப்பட வேண்டும்? சே! என்ன நினைக்கிறேன்? நான் தீர்மானித்து விட்ட ஒரு காரியத்துக்கு மனம் எவ்வாறு சமாதானம் தேடுகிறது. பொல்லாத மனம். இப்படி யெல்லாம் ஏதேதோ நினைத்துக் கொண்டு கஷ்டப்பட்டேன். மனத்தில் சிறிதும் அமைதி ஏற்படவில்லை.

அய்யாக்குட்டி ஒரு காரில் வந்து என்னை அழைத்துக்கொண்டுபோனார். நான் கேட்டுக் கொண்டதன் பேரில் முனிசாமி கவுண்டரும் என்னுடன் வந்தார். காரில் போகும் போது அய்யாக்குட்டி என்னிடம் அங்கே என்னென்ன செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டு வந்தார். அதை யெல்லாம் கேட்டபோதே எனக்குப் பயமாக இருந்தது.

இப்படி யோசித்துக் கொண்டே இருக்கையில் கோயமுத்தூர் வந்து விட்டது. வண்டி ஒரு வீட்டு வாசலில் போய் நின்றது. அதன் வாசலில் "வெற்றி வேல் ப்ரொடக்ஷன்ஸ்" என்று போர்டு ஒன்று தொங்கியது.

அய்யாக்குட்டி என்னைக் கீழே உட்கார வைத்து விட்டு மாடிக்குச் சென்றார். பத்து நிமிஷத்துக் கெல்லாம் வந்து என்னை அழைத்துக் கொண்டு போனார். மாடியில் ஒரு விசாலமான அறையில் ஐந்தாறு பேர்கள் உட்கார்ந்திருந்தனர். எல்லாருக்கும் நடுவில்

வைரக் கடுக்கன் காதில் மின்ன ஆஜானுபாகுவாய் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவருக்குப் பக்கத்தில் நான் அன்று மலையடிவாரத்தில் பார்த்த டைரக்டர் உட்கார்ந்திருந்தார். அவருடைய முகம் பர்சைச் சுண்டைக்காய் தின்ற மாதிரி இருந்தது.

எனக்கோ ஒரே கூச்சமாக இருந்தது. அழுகையே வந்து விடுமோ என்று பயமாக இருந்தது. அவர்கள் என்ன பேசுகிறார்களென்றே எனக்குச் சிறிது நேரம் புரியவில்லை.

“பார்ப்பதற்கு இவள் கொஞ்சம் சுமதியைப் போல இருக்கிறாள். இந்த மாதிரி வேறு யாரும் கிடைக்க மாட்டார்களென்று தோன்றுகிறது. எதற்கும் போட்டோ எடுத்துப் பார்த்து விடுவோமே. அதில் என்ன தவறு?” என்று டைரக்டரைப் பார்த்துப் பட முதலாளி கூறினார்.

டைரக்டர் அதற்கு, “அனுபவமில்லாத புதிய பெண்ணாயிற்றே? பிரதம பாகத்துக்குத் தகுந்தாற்போல் இவளால் நடிக்க முடியுமா என்பதுதான் எனக்குக் கவலை” என்றார்.

“நீங்கள் முயற்சி பண்ணிப் பாருங்கள். உங்களுக்குத் திருப்தி அளிக்கும் வகையில் அவள் நடிக்கவில்லையானால் அவளை எடுத்துக் கொள்ள வேண்டாம்” என்றார் அய்யாக்குட்டி.

“சரி! இவளை ஸ்டுடியோவுக்கு அழைத்துக் கொண்டு போய் மேக்கப் பண்ணி போட்டோ எடுங்கள். அப்படியே ‘ஆடிஷன் டெஸ்டு’ம் பண்ணிப் பார்த்து விடுங்கள்” என்று கூறினார் பட முதலாளி.

டைரக்டர், அய்யாக்குட்டி இன்னும் இரண்டொருவர் புறப்பட்டார்கள். படபடக்கும் உள்ளத்துடனும், இனங்



தெரியாத ஒரு பயத்துடனும், நான் அவர்களுடன் புறப்பட்டு ஸ்டுடியோவை நோக்கிச் சென்றேன்.

அன்றிரவு நான் மறுபடியும் வீரத்தான் பட்டிக்கு வந்தபோது உடலும் உள்ளமும் சோர்ந்து போய்ப் படுக்கையில் விழுந்தேன். உஷ்ணத்தைக் கக்கும் விளக்குகளின் அடியில் நின்றதும், ஏதேதோ சாயத்தையெல்லாம் பூசிக்கொண்டதும், பல பேருக்கிடையில் புதிதாகப் பழக நேர்ந்தபடியால் கூச்சமும் எல்லாம் சேர்ந்து ரொம்பக் களைத்துப் போய் விட்டேன். அய்யாக்குட்டியிடம் எனக்குப் பிடிக்கவில்லையென்று கூறினேன். அவர் ஆயிரம் விதமாகச் சமாதானம் கூறினார். பழகிவிட்டால் சரியாகிவிடும் என்று சொன்னார். மொத்தத்தில் கொய்னா சாப்பிட்டால் வெகு நேரம் கசந்து வழியுமே, அதுமாதிரி உள்ளம் கசந்து வழிந்தது.

இரண்டு மூன்று நாட்கள் வரையில் ஒன்றும் தகவலே தெரியவில்லை. எப்படியோ அருணா தேவியைப் போல் நடித்துப் புகழடைய வேண்டும் என்ற எண்ணம் என் மனத்தில் ஊர்ஜிதமாகி விட்டது. அய்யாக்குட்டி அந்தப் படத்தின் கதையை வேறு எனக்குச் சொல்லியிருந்தார்: ஒரு அரசிளங்குமரியின் நிறைவேறாத காதலைப் பற்றிய கதை. ஆஸ்தான கவிஞரைக் காதலிக்கிறாள் இளவரசி. அவரோ இவளது காதலை உணரவில்லை. இளவரசி கவிஞருக்கு அனுப்பும் ஓலையைச் சேனாதிபதி பார்த்து அரசனிடம் காட்டுகிறான். அரசன் கவிஞரைத் துரத்தி விடுகிறான். இளவரசி அவரைத் தேடிக்கொண்டு மாறு வேஷத்தில் புறப்பட்டு விடுகிறாள். காட்டிலும் மேட்டிலும் தேடியலைகிறாள். காட்டில் வசிக்கும் ஒரு முனிவருடன் தங்குகிறாள். அதன் பிறகு முனிவரின் உதவியால் கவிஞரைச் சந்தித்துத் தன் காதலை வெளியிடுகிறாள். கவிஞரும் தாம் அவளைக் காதலித்ததாகவும் அதை வெளியிட்டுப் பயனில்லை என்பதனால் சொல்லவில்லை என்பதையும் கூறுகிறார். அதன் பிறகும் பல இடையூறுகள் வருகின்றன. பிறகு இருவரும் இறந்து போகிறார்கள்.

இந்தக் கதையை அய்யாக்குட்டி கூறியவுடன் என்னுடைய மனோநிலைக்கு எவ்வளவு பொருத்தமான கதை என்று நினைத்தேன். அய்யாக்குட்டியும், "உனக்கு ஏற்ற பாத்திரம், இந்து! நீ மட்டும் நடித்தாயானால் புகழ் வந்து குவிந்து விடும்" என்றார்.

கடைசியில் நான்காம் நாள் காலை அய்யாக்குட்டி வந்தார். அவருடைய முகமலர்ச்சியைப் பார்த்தவுடனேயே பலன் சாதகமானது என்று எனக்குத் தெரிந்து போய் விட்டது. அன்று எடுத்த போட்டோக்களையும் எடுத்துக் கொண்டு வந்திருந்தார். அவைகளைப் பார்த்தவுடன் நான் இவ்வளவு அழகாக இருக்கிறேனா என்று எனக்கே அதிசயமாக இருந்தது.





வள்ளியோ படங்களைப் பார்த்து விட்டுக் கூத்தாடினாள். அவளுடைய பாட்டியும் தாத்தாவும்கூடக் குழந்தைகள் மாதிரி புகைப் படங்களைக் கண்டு களித்தார்கள். அதிலிருப்பது இந்து மதியென்றே அவர்களால் நம்ப முடியவில்லை என்றார்கள்.

இந்த ஆரவாரம் ஓய்ந்த பிறகு, அய்யாக் குட்டியிடம், "வெற்றி வேல் ப்ரொடக்ஷன்ஸில் மறு நாள் என்ன நடந்தது?" என்று கேட்டேன்.

"முதலாளிக்கு உன்னைப் பார்த்த உடனேயே ஒரு நல்ல அபிப்பிராயம் விழுந்து விட்டது. ஆனால் டைரக்டரைச் சம்மதிக்க வைப்பதுதான் ரொம்ப கஷ்டமாக இருந்தது. 'யாரோ முன் பின் நடித்துப் பழக்கமில்லாதவளைக் கொண்டு வந்து கதாநாயகி வேஷம் போடுகிறேன் என்று சொல்லுகிறீர்களே? நீங்களா கஷ்டப்படப் போகிறீர்கள்? நானல்லவா திண்டாட வேண்டும்? நாளைக்குப் படம் ஓடவில்லை என்றால் டைரக்டர் தலையில் பழியைப் போடுவீர்கள்' என்று சொல்லிக் கொண்டிருந்தார். உன்னுடைய பாட்டின் ஒலிப் பதிவைக் கேட்டவுடன் சங்கீத டைரக்டர் 'குரல் நன்றாக இருக்கிறது' என்று கூறினார். அப்போதும் அவர், 'பாடினால் போதுமா? நடிப்பு வேண்டாமா?' என்று கூறினார். கடைசியில் போட்டோக்கள் வந்ததும் அவருக்கே நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டு விட்டது. வேஷப் பொருத்தம் இருக்கிறதென்று ஒப்புக் கொண்டார். ப்ரொட்யூஸர் கதிர்வேலுவும் உன்னையே எடுத்துக் கொள்வதென்று தீர்மானித்து விடவே கடைசியில் அவரும் சம்மதித்து விட்டார். எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறதென்று சொல்லவே முடியாது" என்றார். எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை அளவிட முடியாது.

"மேலே என்னென்ன செய்ய வேண்டும்? அதையெல்லாம் சொல்லுங்கள். முதலில் முந்நூறு ரூபாய் வாங்கிக் கொடுத்து விடுங்கள். இந்தச் செட்டியாரிடம் வாங்கின கடனை முதலில் முனிசாமி கவுண்டர் அடைத்து விடட்டும். பிறகுதான் எனக்கு நிம்மதியாக இருக்கும்" என்று கூறினேன்.

"முந்நூறு என்ன அம்மா? ஆயிரம் ரூபாய் அட்வான்ஸ் கொடுக்கச் சொல்கிறேன். ஆனால் ஒரே ஒரு விஷயத்தில் மாத்திரம் நான் சொல்வதை நீ கேட்டால் தேவலை. உன்னிடம் சொல்லாமல் செய்ய எனக்கு இஷ்டமில்லாத படியால் சொல்கிறேன்."

"விஷயத்தைச் சொல்லுங்கள். அதன் பிறகு யோசித்துச் சொல்கிறேன்" என்றேன்.

"பட முதலாளி கதிர்வேல் ஒரு நிபந்தனை போடுகிறார். அதற்கு நீ ஒத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்தப் படம் வெற்றிகரமாக ஓடினால் நீ அவர்களுடைய அடுத்த படத்திலும் நடிக்க வேண்டும். அதன் பிறகு நீ என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று கூறுகிறார்."

"இப்படிச் சொன்னால் என்ன அர்த்தம்? எனக்கு விருப்பமில்லாவிட்டாலும் அவர்கள் கட்டாயப் படுத்துவார்களா? ரொம்ப அழகாக இருக்கிறதே நிபந்தனை?"

"இந்து! நீ இப்படிச் சொல்வாய் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் நீ இன்னொன்றையும் சிந்திக்க வேண்டும். கதிர்வேல் அப்படிச் சொல்கிறார் என்றால் அதற்குக் காரணம் இருக்குமல்லவா? நீ பிரமாதப் புகழடையப் போகிறாய் என்று அவர் நிச்சயமாக நம்புகிறார். அதனால்தான் உன்னை அடுத்த படத்துக்கும் ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்புகிறார். இரண்டு படங்களில் நடிப்பதொன்றும் பிரமாதமல்ல. அதிகபட்சம் இரண்டு வருஷங்களுக்கு மேல் ஆகாது. கையிலும் கொஞ்சம் பணம் சேரும். பிறகு நீ இப்படிக் கஷ்டப்படாமல் நிம்மதியாக வாழலாம். ரங்கதுரையைப் பற்றித் தகவல் தெரிந்து கொள்ள வேண்டுமென்றாலும், கையில் கொஞ்சம் பணம் வேண்டுமல்லவா?" என்று கூறினார். அவர் சொல்வதும் உண்மை தானென்று எனக்குப் பட்டது. கடைசியில் ஒப்புக் கொண்டேன். நானும் ஏதேனும் செய்துதானே ஆக வேண்டும்?

ஒப்பந்தத்தில் கையெழுத்தும் போட்டேன். உடனேயே வேலை ஆரம்பிக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். நானும் கோயமுத்தூர் நகரத்திலேயே போய் வசிப்பது

அவசியமாயிற்று. ஒரு மாதத்தில் அய்யாக்குட்டி ஒரு சிறிய வீடு வாடகைக்கு அமர்த்தினார்.

நான் தனியாகப் போய் இருப்பது இயலாத காரியம். ஆகவே முனிசாமி கவுண்டரை என்னுடன் வந்து இருக்கும்படி வேண்டினேன். அவரும் உடனே சம்மதித்தார்.

ஒரு நல்ல நாள் பார்த்துக்கொண்டு நாங்கள் கோயமுத்தூர் நகரம் போய்ச் சேர்ந்தோம்.

அய்யாக்குட்டி ஒரு பேருபகாரம் செய்தார். மூந்நூறு ரூபாய் வாங்கிச் செட்டியாரின் கடனைத் தீர்த்து விட்டார். அதைத் தவிர செலவுக்கும் அவ்வப்போது பணம் வாங்கிக் கொடுத்து வந்தார். இது மிகவும் உபகாரமாக இருந்தது. இத்தகைய உதவிகள் செய்து வந்தபடியால் ராஜாராம், கவுண்டரின் அத்யந்த நண்பரானார். என்னிடம் மிகுந்த மரியாதையுடனும் அன்புடனும் நடந்து கொண்டார். ஆகவே நாங்கள் எல்லோரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களைப் போல் பழக ஆரம்பித்து விட்டோம்.

• • •

இரண்டு நாட்களாக எனக்கு என் தந்தை காசிலிங்கத்தின் நினைப்பு அதிகமாக வருகிறது. அய்யாக்குட்டியிடம் கொடுத்த கடிதத்திற்குப் பிறகு அவரைப் பற்றித் தகவலே இல்லை. அவர் உண்மையாகவே உயிரோடு இருந்தால் நான் இப்படிச் சிறையில் துன்பப்படுவது அவருக்குத் தெரியாமல் இருக்குமா? என்னைப் பார்க்க வேண்டுமென்று அவருக்குத் தோன்றாதா? அவர் எங்கேயோ இருக்கிறார், என்னைக் கவனித்துக்கொண்டே இருக்கிறார் என்ற தைரியத்தோடு நான் வாழ்ந்து வந்தேன். எனக்கு ஒரு கஷ்டம் வந்தால் அவர் அதை நிவர்த்திப்பாரென்று எண்ணி வந்தேன். நான் சிறைக்கு வந்து கிட்டத் தட்ட ஒரு வருஷமாகப் போகிறது. வழக்கு என்னமோ நடந்து கொண்டிருக்கிறது. இதெல்லாம் அவருக்குத் தெரியாமலா இருக்கும்? தெரிந்தால் ஏன் உதவி செய்ய வரவில்லை? அவரைக் கடைசி வரையில் பார்க்க முடியாமலேயே போய் விடுமோ?

ஒரு வேளை அவர் இறந்துபோயிருப்பாரோ? இருக்கும். உயிரோடு இருந்தால் தன் புத்திரி மரண தண்டனை விதிக்கப்பட்டுச் சிறையில் கிடப்பதை அறிந்தும் வந்து பார்க்காமல் இருக்க மாட்டார். இவ்வாறெல்லாம் எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது.

அத்தியாயம் 30

உள்ளம் சோர்ந்தது

கோயமுத்தூர் சென்ற பிறகு ஒருவாறு சௌக்கியமாகவே காலம் சென்றது. வறுமையின் பிடி தளர்ந்து சற்று நிலைமை செழிப்படைந்தது. நான் ஆடம்பரத்தை என்றுமே விரும்பியதில்லை. முனிசாமி கவுண்டர் குடும்பத்தினருக்கு ஆடம்பரம் என்னவென்றே தெரியாது. ஆகவே அய்யாக்குட்டியின் படாடோபத் தோற்றங்கள் கூட எளிமையாக மாறியது.

முதன் முதலில் பட ஒத்திகைகளுக்குப் போய் வருவதே எனக்கு மிகவும் சிரமமாக இருந்தது. நாளடைவில் பழகிப் போயிற்று. அதுவுமல்லாமல், நான் பழக நேரிட்ட அனைவரும் என்னிடம் அனுதாபத்துடன் நடந்து கொண்டார்கள். நான் தவறுகள் செய்த போதெல்லாம் பொறுமையாக இருந்தார்கள். என்னுடைய பரிதாபகரமான வரலாற்றை ராஜாராம், அவர்களிடம் கூட்டியும் குறைத்தும் சொல்லியிருப்பதுதான் காரணம் என்று பின்னர் அறிந்துகொண்டேன்.

மேலும், டைரக்டர்கூட எனக்குப் பொறுமையாகச் சொல்லிக் கொடுத்து வந்தார். நானும் கவலையோடு என்னுடைய பாகங்களை ஒழுங்காகப் படித்துக் கொண்டு தயாராக இருப்பேன். டைரக்டர் சொன்னதை மனத்தில் வாங்கிக் கொண்டு அதேமாதிரி செய்து பார்ப்பேன். அதனால் அவருக்கும் என்னிடம் மதிப்பு உண்டாயிற்று.

ஒருநாள் ராஜாராமிடம் பேசிக் கொண்டிருக்கும்போது, "டைரக்டர் ரொம்ப நல்லவர். பொறுமையாகச் சொல்லிக் கொடுக்கிறார்" என்றேன்.

"என்ன, இந்து! அப்படிச் சொல்கிறாய்? அவர் சொல்லிக் கொடுப்பதற்கு முன்னமேயே கூட நீ நன்றாகத்தான் செய்கிறாய். அவர் பொறுமையாக இருக்க நீ இடமே வைக்கவில்லையே?" என்றார்.

ஒத்திகைகள் தவறாமல் நடந்து கொண்டிருந்தன. கடைசியில் ஷூட்டிங் நடப்பதற்கு நாள் குறித்து விட்டார்கள். எனக்கோ ஒரே பயமாக இருந்தது. நான் ஒத்திகைக்காக 'வெற்றி வேல் ப்ரொடக்ஷன்ஸ்' இருந்த கட்டடத்துக்கு ஷூட்டிங் நடப்பதற்கு முதல் நாள் ராஜாராமுடன் போயிருந்தேன். ஒத்திகைகளும், மற்ற எல்லாமுமே அந்தக்



கட்டடத்தில் தான் நடந்து வந்தது. ஸ்டுடியோவுக்கு ஷூட்டிங் நடக்கும் போது மட்டும்தான் போவதுவழக்கம்.

அன்று நான் சென்றதும் டைரக்டர் என்னைப் பார்த்து, "நாம் ஸ்டுடியோவுக்குப் போய் 'ஸெட்' எப்படி இருக்கிறது என்று பார்த்து விட்டு வரலாமா? உங்களுக்கும் அது உபயோகமாக இருக்கும். அந்த இடத்தில் நீங்கள் ஒருதரம் ஒத்திகை பார்த்து விட்டால் நல்லது" என்றார்.

"அய்யா... இல்லை. மிஸ்டர் ராஜாராமும் நம்முடன் வருகிறாரல்லவா?" என்று கேட்டேன். அய்யாக்குட்டி தம்மை ராஜாராம் என்றே கூப்பிட வேண்டுமென்றும், அந்தப் பெயரைக் கேட்டால் எல்லோரும் சிரிக்கிறார்கள் என்றும் கூறியிருந்தார்.

ஸ்டுடியோவுக்குச் சென்றதும் காட்சி ஜோடனைகளைக் கண்டு மலைத்துப் போனேன். அரண்மனைக் காட்சி கண் கொள்ளாததாக இருந்தது. சிற்ப விசித்திர வேலைப்பாடுகள் அமைந்த தூண்களும், பள பளவென்று மின்னும் ஆசனங்களும், மெல்லிய திரைச் சீலைகளால் அமைத்த அரச குமாரியின் கட்டிலும் பார்ப்பதற்கு அதிசயமாக இருந்தன. ஒரு தூணின் மீது சாய்ந்தேன்.

"அதன் மேலெல்லாம் படாதே, இந்து. சாயம் மேலே ஒட்டிக் கொள்ளப் போகிறது. ஒரு வேளை கீழேயே விழுந்தாலும் விழுந்து விடும்" என்று எச்சரித்தார் ராஜாராம்.

அதன் பிறகுதான் அவை யெல்லாம் வெறும் அட்டையாலும், காகிதத்தாலும் செய்யப் பட்டவை என்று ஞாபகம் வந்தது. வெறும் அட்டையை வைத்துக் கொண்டு என்னென்ன மந்திர ஜாலங்கள் எல்லாம் செய்து விடுகிறார்கள்? உள்ளே வெறும் களி மண்ணும் குப்பையும் தான். என் வாழ்க்கைகூடக் கிட்டத் தட்ட இப்படித்தான் இருக்கிறது. ரங்கதுரை இல்லாத வாழ்க்கை குப்பைக்குச் சமானம்தான். வெளியில் எப்படித் தோற்றமளித்தால் என்ன?

இப்படி நினைத்துக் கொண்டே மேலே நிமிர்ந்து பார்த்தேன். நான் பார்த்ததைக் கவனித்த டைரக்டர், "அவையெல்லாம் விளக்குகள், விமலா! மேலே யிருந்து நிறைய வெளிச்சம் போட்டால்தான் படம் எடுக்க முடியும். நாளைக்குப் படப் பிடிப்பின் போது இந்த விளக்குகள் எல்லாம் எரியும். முதலில் உனக்கு ரொம்பக் கண்ணைக் கூசும். கஷ்டமாக இருக்கும். மணிக் கணக்காக அந்த உஷ்ணத்தில் நிற்க வேண்டும். பிறகு தானாகவே பழகிப் போய் விடும்" என்று கூறினார்.

"அன்று போட்டோ எடுத்தபோது ரொம்பக் கஷ்டமாக இருந்தது. அதிலும் அந்தச் சாயத்தை யெல்லாம் பூசிக்

கொள்ள எனக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை" என்றேன்.

"நாளடைவில் அது சரியாகிவிடும், விமலா! இப்போது நாம் அறைக்குப் போய் ஒரு தடவை ஒத்திகை செய்து பார்த்து விடுவோமா? இவ்வளவு தடவை ஒத்திகை பார்க்க வேண்டுமென்று அவசியமில்லை. நீ புதிதாக இருப்பதால் உனக்கு நன்றாகப் பழக்கமாக வேண்டுமென்றுதான் பல தடவைகள் ஒத்திகை நடத்த வேண்டியிருக்கிறது" என்றார் டைரக்டர்.

நானும் சந்தோஷமாகச் சம்மதித்தேன். ராஜகுமாரியும் அவள் தந்தையும் பேசும் கட்டம். அரசர் தன் குமாரி பிரபாவதியைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி சொல்கிறார். அவள் மறுக்கிறாள். அரசருக்குக் கோபம் வருகிறது. சேனாதிபதியைக் கல்யாணம் செய்து கொண்டுதான் ஆகவேண்டும் என்கிறார். பிரபாவதி சேனாதிபதியைத் தனக்குப் பிடிக்கவில்லை என்கிறாள்.

உடனே அரசர் ஆஸ்தான கவிஞனுக்கு அவள் அனுப்பிய ஓலையைத் தான் பார்த்து விட்டதாகவும், அவள் சேனாதிபதியைக் கல்யாணம் செய்து கொள்வதாக வாக்களித்தால் கவிஞனை உயிரோடு விட்டு விடுவதாகவும், அதற்கு மறுத்தால் அவனைக் கொன்று விடுவதாகவும் கூறுகிறார்.

இந்தக் கட்டத்தில் ராஜகுமாரி பிரபாவதியின் நடிப்பு மிக உன்னதமாக இருக்க வேண்டும். இதை நான் நன்றாக நடித்து விட்டால் எல்லோருக்கும் என்மீது நம்பிக்கை விழுந்து விடும். எந்தக் காரியத்தைச் செய்தாலும் நன்றாகச் செய்ய வேண்டுமல்லவா? என்னுடைய திறமையை அவர்களுக்கு நன்றாக நிரூபிக்க வேண்டும் என்று ஒரு ஆவல் பொங்கிக் கொண்டிருந்தது.

ஒத்திகை ஆரம்பமாயிற்று. டைரக்டர் பாஸ்கரன் அரசர் பேச வேண்டியதைப் பேசினார். நான் இளவரசி பிரபாவதியாக நடித்தேன்.

பிரபாவதியின் நிலையில் உண்மையாகவே நான் இருப்பதாகப் பாவித்துக் கொண்டு மனமுருகி, என்னுடைய சம்பாஷணைகளை உணர்ச்சி ததும்பக் கூறினேன். அவ்வப்போது பாஸ்கரன் எனக்கு எப்படிப் பேச வேண்டும் என்றும், எப்படிக் கைகளை வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் செய்து காட்டினார். நான் அவர் சொன்ன மாதிரியே செய்தேன்.

முடிவில் ராஜாராம், "ரொம்பப் பிரமாதம், இந்து! நீ வெகு சீக்கிரம் கற்றுக் கொண்டு விடுவாய் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இவ்வளவு சீக்கிரம் மிகச் சிறந்த நடிகையைப் போல் நடிக்கக் கற்றுக் கொண்டு விடுவாய் என்று நானே எதிர்பார்க்கவில்லை. என் நம்பிக்கை அணுவளவும் வீண் போகவில்லை" என்று குதூகலமாகச் சொன்னார்.

டைரக்டரும் அதை ஆமோதித்து, "நான் முதலில் ரொம்பப் பயந்து கொண்டிருந்தேன். நடிப்பு என்பதையே முன்பின் அறியாத ஒரு பெண்ணை வைத்துக்கொண்டு எப்படிப் படம் பிடிக்கப் போகிறோம் என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தேன். இப்போது தான் அவளுடைய திறமை வெளியாகிறது. மேலும் இவளிடம் உள்ள ஒரு சிறந்த குணம் என்னவென்றால் ஏதாவது திருத்தினால் அதைச் சரியாகப் புரிந்து கொள்கிறாள். சிலருக்கு ஏதாவது சொல்லி விட்டால், கோபம் வந்து விடும்; இல்லாவிட்டால் பயம் வந்து விடும். இந்துவோ குற்றம் சொல்லச் சொல்ல இன்னும் நன்றாகச் செய்கிறாள். அது ஒரு சிறந்த நடிகைக்கு வேண்டிய குணம். ஆயிரத்தில் ஒருவருக்குக் கூடத் தன் தவறைப் புரிந்து கொண்டு திருத்திக் கொள்ள முடியாது" என்று புகழ்ந்தார்.

மறுநாள் படப் பிடிப்பு ஆரம்பமாயிற்று. நான் நினைத்தது, மற்றவர்கள் சொன்னது எல்லாவற்றையும்விடச் சிரமமாக இருந்தது. அந்தத் தாங்க முடியாத உஷ்ணத்தையும், முகச் சாயங்களினால் ஏற்பட்ட எரிச்சலையும், கண்களில் உண்டான எரிச்சலையும், பொறுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. நின்று நின்று காலை வலித்தது. தலையில் சுமத்தப் பட்டிருந்த கனமான கிரீடம் வேறு ஒரே பாரமாக இருந்தது. அது அழுந்திய இடம் எல்லாம் வலித்தது. ஏகப்

பட்ட பித்தளை நகைகளும், பட்டு ஆடைகளும் வேறு கனத்தன. படப்பிடிப்பு ஆரம்பித்து ஒரு மணி நேரத்துக்குள்ளாகவே நான் மிகவும் களைத்துப் போனேன்.

என்னை எந்த இடத்தில் நிற்க வேண்டும், எங்கிருந்து எவ்வளவு தூரம் நடக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லிக் கொடுத்தார் டைரக்டர் பாஸ்கரன். எனக்கு எல்லாம் புரிந்து விட்ட மாதிரி இருந்தது. ஆனால், அதை நினைத்துக் கொண்டிருந்ததால் உணர்ச்சியோடு பேச வரவில்லை. உணர்ச்சியுடன் நடித்த போது எவ்வளவு தூரம் நகரலாமோ, அதைவிட அதிகமாகச் சென்று விட்டேன். ஒரு தடவை விளக்குகள் இரண்டு எரியவில்லை. இப்படிப் பல தடவைகள் திரும்பத் திரும்ப ஒரே சம்பாஷணையைச் சொல்லும்படி நேரிட்டது. நடு நடுவே சற்று இளைப்பாறினேன். அப்போது பாலைவனத்துக்குள்ளிருந்து பசுஞ் சோலைக்கு வந்த மாதிரி இருக்கும்.

எனக்குத் தந்தையாக நடித்தவர் ரொம்ப நல்ல மனிதர். அவரும் நான் நன்றாக நடிப்பதற்கு வேண்டிய முறைகளைச் சொல்லிக் கொடுத்தார்.

ஆஸ்தான கவிஞராக நடிக்கப் போகும் நடிகரை மாத்திரம் நான் அது வரை சந்திக்கவில்லை. அவர் எங்கேயோ வெளியூருக்கு வேறு படப்பிடிப்பு சம்பந்தமாகப் போயிருப்பதாகவும், அதற்குள் மற்றக் காட்சிகளை எடுத்து விடப் போவதாகவும் தெரிந்து கொண்டேன்.

ஸ்ரீமதி சுமதி முன்பு நடித்திருந்த சில கட்டங்களை ஸ்டுடியோ திரையில் போட்டுப் பார்த்தோம். அதில் அந்தக் கதாநாயக வேடதாரியைப் பார்த்ததும் எனக்கு மிகத் துயரமாக இருந்தது. இந்த மனிதருடன் நடிக்க வேண்டுமே என்று கஷ்டமாக இருந்தது. அதை நினைத்துக் கொண்டால் எனக்கு ஒன்றுமே பிடிக்க வில்லை.

ஆனால் சுமதியின் நடிப்பைவிட என் நடிப்பு நன்றாக இருக்கிறதென்று சொல்ல வேண்டும் என்று வேறு ஒரு பக்கம் ஆசையாக இருந்தது. நான் நடிகையாக நடிக்க ஆரம்பித்த புதிதில் சில மாதங்கள் இந்த மாதிரி எத்தனையோ விதமான உணர்ச்சிகளுக்கு நான் இரையானேன்.

இத்தனைக்கும் அடியில் ஏதோ ஒரு மனக் கசப்பும், வேதனையும் இருந்து கொண்டே தான் இருந்தது.

முதல் நாள் படப்பிடிப்பு ஆகி வேஷங்களைக் கலைத்து விட்டு வீட்டுக்கு வந்து படுக்கையில் விழுந்தேன். அந்த மாதிரி ஒரு சோர்வை என் ஆயுளில் நான் அதுவரை அனுபவித்ததே இல்லை. அன்று நான் சரியாகச் சாப்பிட வில்லையாதலால் பலஹீனமாக வேறு இருந்தது. உடம்பில் அசதி வலி எல்லாம் சேர்ந்து கண்ணீராக வெளிவந்தது.

ரங்கதுரையைக் கதாநாயகனாக நினைத்துக் கொண்டு, அவரோடு நான் நடிப்பதாகக் கற்பனை செய்து கொண்டே தூங்கிப் போனேன்.

மறுநாள் காலை என்னை வள்ளி வந்து எழுப்பியபோது ரங்கதுரை என்னருகில் வந்து உட்கார்ந்தமாதிரி கனவு கண்டு கொண்டிருந்தேன். இந்தச் சமயத்தில் இந்த வள்ளி வந்து இப்படி என்னை எழுப்பி விட்டாளே என்று கோபம் கோபமாக வந்தது.


சற்றைக் கெல்லாம் ராஜாராம் வந்து விட்டார். என்னை வானளாவப் புகழ்ந்தார். ஆனால் நான் உற்சாகமில்லாமல் இருப்பதைக் கண்டு சற்றுக் குறைத்துக் கொண்டார்.

"ஏன், இந்து! ஏன் இப்படிச் சோர்ந்து போயிருக்கிறாய்? களைப்பு தானே? வேறொன்றும் இல்லையே?" என்று கேட்டார்.

"எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை" என்று அலுத்துக் கொண்டேன்.

"என்ன பிடிக்கவில்லை அம்மா? உன்னைப் பற்றி டைரக்டரும் ப்ரொட்யூஸரும் அளவு கடந்து பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் நீ அளவில்லாத உற்சாகத்துடன் இருப்பாய் என்றல்லவா நான் நினைத்தேன்? இப்படி வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறாயே?"

என்னையும் அறியாமல் கண்ணீர் பொங்கி வந்தது. ராஜாராமுக்கு ஒன்றுமே புரியவில்லை. எனக்கே நான் ஏன் அப்படி அழுதேன் என்று புரியவில்லை. (தொடரும்)





'அனஸின்'

விஞ்ஞான முறையில்

நான்கு மருந்துகளின்

ஒரு கலப்பு.

'அனஸின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசை நார்களில் நோவு இவற்றை நீக்கும். அனஸினில் அடங்கிய சில நான்கு மருந்துகள் —

1. கொயினா: ஜுரத்தடுப்பு குணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பின்: பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினஸிடின்: ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. ஆஸிடில் ஸலிஸிலிக் ஆஸிட்: தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் போக்குவதற்கு மிகவும் உபயோகமுள்ளது.



அனஸினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனஸின்' வயிற்றுக்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறுண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் பெற எப்பொழுதும் அனஸினையே கேட்டு வாங்குங்கள்.

லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.



ஆற்றங்கரையினிலே

பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை

26. திருவரங்கம்

ஸ்ரீரங்கம் என்னும் திருவரங்கம் நாடறிந்த நன்னகரம்; சங்கத் . தமிழ் மாலையும், சான்றோர் புகழ் மாலையும் பெற்ற திருநகரம். வான் அளாவிய சோலை சூழ்ந்த அவ் வள நகரில் திருமால் கோயில் கொண்டருளினார். அப்பெருமானை மனமாரத் தொழுது வாயார வாழ்த்தும் பேறு பெற்ற அடியார் ஒருவர்,

"நாவுண்டு நீயுண்டு நாமம் தரித்தோதப்
பாவுண்டு நெஞ்சே பயமுண்டோ—பூவுண்டு
வண்டுரங்கும் சோலை மதிலரங்கத்தே உலகை
உண்டுரங்கு வான் ஒருவன் உண்டு"

என்று ஓர் அழகிய தமிழ்ப் பாட்டு இசைத்தார். "நல் நெஞ்சமே! தேனார் பூஞ் சோலைத் தென் அரங்க மாநகரில் கண்ணுறங்கும் பெருமான் ஒருவன் உண்டு; அவனை நினைக்க நீ உண்டு; வாழ்த்த வாயுண்டு; பாடப் பாட்டுண்டு; இனி உனக்குப் பயமும் உண்டோ?" என்று பேசினார் அக் கவிஞர்.

இவ்வாறு காவிரித் திருநதியிலே பள்ளி கொண்ட திருமாலின் கோலம் இளங்கோவடிகளின் உள்ளத்தையும் அள்ளுவதாயிற்று. பொன்மலையின் மேல் நீலமேகம் விரிந்து படிந்தாற் போன்று அரவணையின் மீது திருமால் பள்ளி கொண்டுள்ளார் என்று அவர் அழகாகப் பாடினார்.

"நீலமேகம் நெடும்பொன் குன்றத்துப்
பால்விரிந்து அகலாது படிந்தது போல
ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறல்
பாயற்பள்ளிப் பலர்தொழுது ஏத்த
விரிதிரைக் காவிரி வியன் பெருந் துருத்தித்
திருஅமர் மார்பன் கிடந்த வண்ணமும்."

[துருத்தி - ஆற்றின் நடுத்திட்டு]

என்பது சிலப்பதிகாரம் எழுதிக் காட்டும் சிறந்த சொல் ஓவியம். இப்பாட்டிலே "துருத்தி" என்ற பெயரால் குறிக்கப் படுகின்றது திரு அரங்கம்.

முன்னாளில் துருத்தி என்னும் பெயர் ஆற்றின் நடுவே எழுந்த சில ஊர்களுக்கு அமைந்தது. சோழ வள நாட்டில் கும்பகோணத்திற்கு அருகேயுள்ள குற்றாலத்தின் பழம் பெயர் திருத்துருத்தி என்பதாகும். அது பாடல் பெற்ற பழம்பதி. காவிரியாற்றின் நடுவே அக்காளில் கண்ணுக்கு இனிய காட்சி அளித்த திருத் துருத்தியில் அமர்ந்த ஈசனைத் தூய நறுந் தமிழால் துதித்தார் திருநாவுக் கரசர்.

"பொன்னியின் நடுவுதன்னுள்
பூம்புனல் பொலிந்து தோன்றும்
துன்னிய துருத்தியானைத்
தொண்டனேன் கண்டவாறே"


என்பது அவர் திருவாக்கு. பிற்காலத்தில் காவிரியின் போக்கு மாறியது. துருத்தி என்ற பெயரும் மறைந்தது. திருப்பூந் துருத்தி என்பது மற்றொரு பழம்பதியின் பெயர். அப் பெயர் இன்னும் வழங்கி வருகின்றது.

காவிரிப் 'பெருந் துருத்தி' யாகிய திரு வரங்கத்தில் இறைவன் பள்ளி கொண்ட பான்மை கண்டு மனமுருகிப் பாடினர் அடியார் எல்லாம்.

"கங்கையிற் புனிதமாய
காவிரி நடுவு பாட்டுப்
பொங்குநீர் பரந்துபாயும்
பூம்புனல் அரங்கம் தன்னுள்
எங்கள்மால், இறைவன்,ஈசன்
கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்கேன்
ஏழையேன் ஏழையேனே"

என்று கண்ணீர் உகுத்துக் கதறினார் தொண்டரடிப்பொடி ஆழ்வார்.

மன்னரும் முனிவரும் போற்றிப் புகழும் பெருமை சான்ற கோவில்களை உடையது



சோழ வள நாடு. சேர நாட்டில் அரசு வீற்றிருந்த சேரமான் பெருமானின் உள்ளத்தைக் கவர்ந்தது தில்லைச் சிற்றம்பலம்; மற்றொரு சேர மன்னனாகிய குலசேகரப் பெருமானின் மனத்தை ஈர்த்தது மணிக் கோயில் திருவரங்கம். சைவ உலகத்தில் கோயில் என்ற பொதுப் பெயரைத் தனக்கே உரியதாக்கிக் கொண்டது தில்லைச் சிற்றம்பலம். அவ்வண்ணமே வைணவ உலகத்தில் பெரிய கோயில் என்று புகழ் பூத்துத் திகழ்வது திருவரங்கம். தில்லை நடராசனையும் திருவரங்க நாதனையும் திசை நோக்கித் தொழுதனர் அம்மன்னர் இருவரும். சிற்றம்பலத்தைத் தொழுது ஏத்தும் செல்வமே செல்வத்துட் செல்வம் எனக் கொண்டார் சேரமான் பெருமான். திருவரங்கத்தைச் சேவித்துப் பெறும் செல்வமே சிறந்த பெருஞ் செல்வம் என்று கருதினார் குலசேகரப் பெருமான்.

"மெய்யில் வாழ்க்கையை
மெய்யெனக் கொள்ளும், இவ்
வையம் தன்னொடும்
கூடுவ தில்லை, யான்
ஐயனே, அரங்கா, என்று
அழைக் கின்றேன்
மையல் கொண்டொழிந்
தேன், என்தன் மாலுக்கே"

[மெய்யில்-பொய்யான, வையம்-உலகம்.]

என்று பாடிப் பரவசம் உற்றார் அம் மன்னர். "நிலையற்ற வாழ்க்கையை நிலையாகக் கருதுகின்றதே இம் மாநிலம்! பொன்னும் பொருளும் தேடி அல்லும் பகலும் அலைகின்றதே! 'இன்றுளார் நாளை மாள்வார்' என்பதை உணராது இறுமாந் திருக்கின்றதே! பொருளல்லவற்றைப் பொருளாகக் கருதும் மருள் நிறைந்த இம் மாந்தருடன் சேர்ந்து நான் வாழ மாட்டேன். அவர் போகும் நெறியிலே நான் போக மாட்டேன். முத்தி நெறி யறியாத மக்களுடன் கூடி வாழ மாட்டேன். அரந்தை கெடுத்து வரந்தரும் பெருமான் திருவரங்கத்திலே உள்ளான். ஐயனே! அரங்கனே என்று அவனை அயராது அழைப்பேன். அப் பெருமானையே காதலித்துக் கண்ணீர் பெருக்குவேன்" என்று ஆசையுற்றுப் பேசுகின்றார் குலசேகரப் பெருமான்.

குலசேகரப் பெருமானைப் போலவே திருவரங்கநாதனிடம் மையல் கொண்டாள் ஒரு மங்கை. மணிவண்ணனாகிய அப் பெருமானை மனக் கண்ணால் கண்டு மகிழ்ந்தாள். கமலக் கண்ணன், என் காதலன் என்று கைகூப்பித் தொழுதாள். ஊழிமுதல்வன், என் உள்ளங்கவர் கள்வன் என்று உருகினாள். இவ்வாறு அரங்கப் பெருமானையே நினைந்து இரவும் பகலும் அழுது அரற்றிய மங்கையின் நிலையினை அறிந்த அன்னை முறையிடுவாளாயினாள்.

"கங்குலும் பகலும் கண்துயில் அறியாள்
கண்ணநீர் கைகளால் இறைக்கும்
சங்குசக் கரங்கள் என்றுகை கூப்பும்
தாமரைக் கண்என்றே தளரும்
எங்ஙனே தரிக்கேன் உன்னைவிட் டென்னும்
இருநிலம் கைதுழா விருக்கும்
செங்கயல் பாய்நீர்த் திருவரங் கத்தாய்
இவள்திறத் தென்செய்கின் றாயே."

என்று அத்தாயின் மொழியாகத் திருவாய்மொழி பாடிற்று.

கருணை வடிவாய திருமால் அரங்கமா நகரில் பள்ளி கொண்ட கோலத்தில் அமைந்த குறிப்பையும் ஆன்றோர் அறிந்து மகிழ்ந்தனர். அரங்கநாதன் திருமுடியை மேற்கே வைத்தார்; திருவடியைக் கிழக்கே நீட்டினார். தென் திசைக்குத் திருமுகம் காட்டினார்.

‘குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை இலங்கை நோக்கிக்
கடல்நிறக் கடவுள் எந்தை
அரவணைத் துயிலு மாகண்டு
உடல் எனக்கு உருகுமாலோ
என்செய்கேன் உலகத் தீரே’’

என்று அவர் திருக்கோலத்தை எழுதிக் காட்டினார் ஓர் ஆழ்வார். தென்னாடு தெய்வத் தமிழ் வழங்கும் நன்னாடாதலால் திருமாலின் திருமுகம் தெற்கு நோக்கி அமைந்தது. வடநாடு “ஆழ்வார்கள் ஈரச்சொல்லும் நடையாடாத தேச மாகையாலே, அத்திக்கைத் திருத்தும் போது பின்னழகெல்லாம் வேண்டும்” என்று பெருமாள் “பின்பு காட்டினார்” என்று திருக்குறிப்பின் பொருளை விளக்கினார் வடமொழிக் கடலை நிலை கண்டுணர்ந்த பெரியவாச்சான் பிள்ளை.




சென்னை பிரபல அட்வோகேட் ஸ்ரீ கே. ராஜா அய்யர் அவர்களின் புதல்வரும், சென்னை பாரி அண்டு கம்பெனி உதவி மானேஜருமான சிரஞ்சீவி ராஜா கணபதி பி. எஸ்ஸி. க்கும், டாக்டர் வி. சுப்பிரமணியம் அவர்களின் புதல்வி சௌபாக்யவதி சசீலாவுக்கும் நீலகிரி அரவங்காட்டில் சென்ற மே மாதம் 23ந் தேதி வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.
வாழ்க மணமக்கள்!

இவ்வாறு தென் திசையை வாழ்வித்த திருவரங்கம் தென்னரங்கம் என்று அடியார்களால் போற்றப்படுகின்றது. தமிழகத்திலே தென்னரங்கமும் உண்டு; பொன்னரங்கமும் உண்டு என்று பாடினர் தமிழ்க் கவிஞர்கள். தென்னரங்கத்திலே இறைவன் கண் வளர்கின்றான்: பொன்னரங்கத்திலே ஈசன் களிநடம் புரிகின்றான். தென் அரங்கநாதனும் பொன் அரங்கநாதனும் இருவரல்லர்; ஒருவரே என்னும் உண்மையை இனிது உணர்த்தினார் பொய்கை ஆழ்வார்.

“பொன்திகழும் மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும் — என்றும்
இருஅரங்கத் தால்திரிவ ரேனும் ஒருவன்
ஒருவன் அங்கத்து என்றும் உளன்”

[தாய - தாவிய]

என்பது அவர் திருப்பாட்டு. தென் அரங்கம் என்றும் பொன் அரங்கம் என்றும் பேசப்படுகின்ற இரு அரங்கத்திலும் உள்ள இறைவன் ஒருவனே என்னும் உயரிய கருத்தைத் தெள்ளத் தெளிய உணர்த்தினார் பொய்கையார். இங்ஙனம் இருமையில் ஒருமை கண்ட பெருமை பழந்தமிழ் நாட்டின் பண்பாட்டிற்கு ஒரு சிறந்த சான்றாகும்.



அலையும் அமைதியும்

தென்னட்டி சூரி



தெலுங்குக் கதை: மொழிபெயர்ப்பு: ஜெயமணி

சுவரிலிருந்த கடிகாரம் இரண்டு மணி அடித்தது. அதே சமயம் அவன் கையிலிருந்த சிகரெட்டின் மிச்சத் துண்டு அந்த அறையின் மூலையில் போய் விழுந்தது. மறுபடியும் அவன் மற்றொரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தான். 'ஷெல்பி' லிருந்து மற்றொரு புத்தகத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்தான்.

இவ்விதமே அவன் மாலை ஐந்து மணி வரையில் செய்து கொண்டிருந்ததால், அறையின் ஓரத்தில் சிகரெட் துண்டுகள் குவிந்தன. மேஜையின் மீதும் நாற்காலிக்குக் கீழும் புத்தகங்களும் குவிந்து விட்டன.

அவ்வறை முழுதும் சிகரெட் புகை பரவியிருந்ததைப் போல் அவன் மனத்திலும் ஏக்கம் நிரம்பி யிருந்தது.

கடைசியாக அவன் நாற்காலியிலிருந்து எழுந்திருந்தான். வெகு நேரம் உட்கார்ந்திருந்ததால் அவன் கால்கள் மரத்து விட்டன. எனவே, நொண்டிக் கொண்டே ஜன்னலுக்கு அருகில் போய் நின்றான்.

அங்கிருந்து அவனது கண்கள் வான வெளியை நோக்கின. அந்தப் பார்வையில் ஜீவனோ, இலட்சியமோ எதுவும் இல்லை.

அச் சமயம் அவனது மனத்தைப் போல் ஆகாயமும் கருமேகங்களால் மறைக்கப்பட்டு ஒளியற்று இருந்தன.

அவன் தன் அறையிலிருந்து வெளியே கூடத்துக்கு வந்தான். மனத்தில் சஞ்சலமும் முகத்தில் சோகமும் நிறைந்திருந்த அச்சமயத்தில் தன்னை யாரும் பார்த்து விடக் கூடாது என்பது அவனது உத்தேசம்.

அவன் தன் துண்டை எடுத்து மேலே போட்டுக் கொண்டு திருட்டுத்தனமாக வெளியே போகும் சமயத்தில், "எனக்காக ஒரு நிமிஷம் இப்படி வருகிறீர்களா!" என்று ஓர் இனிமையான குரல் கேட்டது.

அவன் திரும்பிப் பார்த்தான். பாதரட்சைகளை வாயிற்புறத்திலேயே போட்டு விட்டு, சமையல் அறையை நோக்கி வந்தான்.

"எங்கேயோ வெளியே போகிறீர்கள் போல் தோன்றுகிறது. காப்பி தயாராக இருக்கிறது. இதைச் சாப்பிட்டு விட்டுப் போங்களேன்" என்றாள் சமையல் அறைக்குள் இருந்த யுவதி.

அவன் தன் அருகில் வந்து உட்கார்ந்த போது அவனுக்கு ஏற்பட்ட ஆனந்தம் கொஞ்ச நஞ்சமல்ல. உடனே அந்தக் கட்டழகி தன்னையே மறந்து அவனுடன் 'கலகல' வென்று பேச ஆரம்பித்தாள்.

"ஆஹா! அது எவ்வளவு அழகாக இருக்கிறது என்பதைக் கூட நீங்கள் பார்க்காமல் போய்க் கொண்டிருக்கிறீர்களே!" என்றாள்.

"எது அவ்வளவு அழகாக இருக்கிறது!"

"கன்றுக் குட்டியைத்தான் சொல்லுகிறேன். நமது வீட்டுக்குக் கடவுள் இப்பொழுது ஒரு புதிய ஜீவனைக் கொடுத்து அருளி யிருக்கிறார். நமது வெள்ளைப் பசு இன்று காலை கன்று போட்டிருக்கிறது. அந்தக் கன்றுக் குட்டி எவ்வளவு அழகாக இருக்கிறது, தெரியுமா!" என்றாள் யுவதி.

அவள் அதைக் கூறிய போது அவள் மனத்தில் மகிழ்ச்சி பொங்கியது. ஆனால், அவள் பேச்சு அவனுக்கு அர்த்தமற்றதாகத் தோன்றியது. பசுமாடு கன்று போடுவது பெரிய அதிசயமா! அதைக் கேட்டதும் அவனுக்குச் சிரிக்க வேண்டும் போல் இருந்தது. ஆனால், அவனுக்குச் சிரிப்பு வரவில்லை. அவன் தான் சிரித்துப் பல நாட்கள் ஆகி விட்டனவே!

அவன் காப்பியைக் குடித்து விட்டு, பாத்திரத்தைக் கீழே வைத்தான். சோகம் தோய்ந்த குரலில், இரகசியமாகப் "பாரதி" என்று கூப்பிட்டான்.

அவன் ஏன் தன்னை அப்படி மெதுவாகக் கூப்பிட வேண்டும்! அவன் அவள் பெயரைக் கூறி அழைத்த விதம் அவளுக்கு; மிகவும் வியப்பாக இருந்தது.

அவன் என்ன சொல்ல விரும்புகிறான் 'என்ற ஆர்வத்துடன் அவள் அவனது முகத்தைப் பார்த்தாள். அவன் முகத்தில் எப்போதும் போல் சோகமும் சோர்வும் தாண்டவமாடின.

"பாரதி, இவ்வாழ்க்கை உனக்குப் பிடிக்கிறதா!" என்று கேட்டான்.

"இது என்ன விக்தையான கேள்வி! எனக்கு இங்கு என்ன குறைவு! ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்!"

"ஒன்றுமில்லை. ஏதாவது பேச வேண்டும் அல்லவா! அதற்காகத்தான் ஏதோ கேட்டு வைத்தேன்" என்று கூறி அவன் மெதுவாக வெளியே நழுவி விட்டான்.

• • •

அப்போது மாலை ஆறு மணி இருக்கும். மாடுகள் எல்லாம் வீட்டுக்கு வந்து விட்டன. வேலைக்காரர்கள் அவற்றை அந்தந்த இடத்தில் கட்டி விட்டுக் கொட்டில்களில் நிறைய வைக்கோலும் போட்டு விட்டுப் போய்விட்டார்கள்.

பால் கறந்து முடிந்த பிறகும் கூட பாரதிக்குக் கொட்டிலை விட்டுச் செல்ல மனம் வரவில்லை. அவள், புதிதாகப் பிறந்த கன்றுக்குத் தாய்ப் பசுவின் மடியிலிருந்து பால் ஊட்டக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

அச்சமயம் வெங்கய்யா பாபு வயலிலிருந்து திரும்பி வந்தார். அவர் வீட்டுக்குள் செல்லு முன் வழக்கம் போல் கொட்டிலுக்குச் சென்று மாடுகளை யெல்லாம் பார்வை யிட்டார்.

அவர் கொட்டிலுக்கு வந்ததும் மாடுகளிடையே ஒரு சலசலப்பு ஏற்பட்டது. அவற்றின் காதுகள் குத்திட்டு நின்றன. அவை யாவும் ஏக காலத்தில் வெங்கய்யாவையே பார்த்தன. அவரைக் கண்டதும் அழகிய இளம் கன்று 'அம்மா' என்று கத்தியது!

"உனக்கு என்ன வந்தது இப்போது!" என்று சொல்லிக் கொண்டே வெங்கய்யா பாபு அதன் அருகில் சென்றார். அதை அவர் மெதுவாகத் தட்டிக் கொடுத்தார். ஆனால், அது அமைதியின்றி உறுமியது.

உடனே வெங்கய்யா கொட்டிலைப் பார்த்த போது அதில் கொஞ்சம் கூட வைக்கோல் இல்லை. அவ்வளவுதான்! அவருக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. அவர் அங்கிருந்து சென்று, வைக்கோல் போரிலிருந்து ஒரு கட்டு வைக்கோலைப் பிடுங்கிக் கொண்டு வந்து, இளம் கன்றுக்குப் போட்டார்.

"அயோக்கியப் பயல்கள்! இவர்களுக்கு மண்டைக் கர்வம் பிடித்து விட்டது. இந்த வாயில்லா ஜீவன்கள் விஷயத்தில் இவர்களுக்குச் சிறிதும் இரக்கமில்லை" என்று வேலைக்காரர்களைக் கோபித்துக் கொண்டார்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த பாரதிக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. அந்த இளம் கன்றுக்குத்தான் எவ்வளவு தந்திரம்!



"இது மிகவும் தந்திரமுள்ள காளை, அப்பா! உங்களை இது ஏய்த்து விட்டதே. சிறிது நேரத்துக்கு முன் தான் வேலைக்காரர்கள் இதற்கு நிறைய வைக்கோல் போட்டு விட்டுப் போனார்கள். அதற்குள் இது எல்லாவற்றையும் தின்று விட்டு, மீண்டும் வைக்கோல் தின்பதற்காக உங்களிடம் இப்படித் தந்திரம் செய்திருக்கிறது. இதற்கு நீங்கள் செல்லம் கொடுப்பதால்தான் இது இப்படி யெல்லாம் செய்கிறது" என்றாள் பாரதி.

இந்த வேடிக்கையான விவரங்களைக் கேட்டு சந்தோஷப்பட வேண்டிய வெங்கய்யாவுக்குக் கோபம் அதிகமாயிற்றேயன்றிக் குறையவில்லை.

"நான் செல்லம் கொடுத்ததால் இந்தக் காளை மாத்திரமா கெட்டுப் போயிருக்கிறது; இந்த வீட்டில் உள்ள ஒவ்வொரு அயோக்கியப் பயலும்தான் கெட்டுப் போய் விட்டான்!"

இவ்விதம் வெங்கய்யா சொல்லி விட்டுக் கோபத்துடன் வீட்டுக்குள் சென்று விட்டார்.

வெங்கய்யா பாபுவின் கோபத்தைக் கண்ட பாரதி திக்பிரமை பிடித்தவள் போல் அப்படியே நின்று விட்டாள். வெங்கய்யா சிறந்த குணங்கள் வாய்க்கப் பெற்றவர். மிகப் பொறுமையுள்ளவர். இனிமையாகவும் அன்பாகவும் பேசுவார். ஆனால் இன்று அவருக்கு ஏன் இவ்வளவு கோபம்!

பாரதி சிந்தனையுடன் கன்றுக் குட்டியைக் கட்டி விட்டு உள்ளே சென்றாள்.

எப்போதும் தமது மருமகளான பாரதியிடம் தம் சொந்த மகளைப் போல அன்புடன் பேசும் வெங்கய்யா அன்று வாயைத் திறக்கவேயில்லை. சாப்பிடும்போது கூட அவர் பாரதியிடம் ஒரு வார்த்தையும் பேசவில்லை. எனினும், வெங்கய்யாவின் மனத்தில் புயல் வீசிக் கொண்டிருப்பதை அவரது முகத் தோற்றத்திலிருந்து பாரதி உணர்ந்து கொண்டாள். எனவே, அவருடன் தானாக வலுவில் பேச்சை ஆரம்பிக்க அவள் துணியவில்லை.

வெங்கய்யா திடீரென்று தலையை நிமிர்த்திப் பாரதியைக் கோபத்துடன் பார்த்தார்.

"மகா பிரபுவான தங்கள் கணவர் இன்றும் நகருக்குச் சென்றிருக்கிறாரோ!" என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

"இல்லை, இல்லை! அவர் இன்று..." என்று பாரதி இழுத்தாள்.

"எங்கே அவன் சென்றிருக்கிறான்!"

அவள் மௌனமாக இருந்தாள்.

"பெண்ணே! எவ்வளவு காலம் இதையெல்லாம் என்னிடம் மறைக்கப் போகிறாய்! அவனது வேஷத்தை நீ இன்னும் எத்தனை நாள் மறைத்து வைக்கப் போகிறாய்! நிப் பிடித்து விட்டது. இனி நீ மறைக்க முடியாது."

"எதை நான் மறைத்து வைக்கிறேன்! மறைப்பதற்கு என்ன இருக்கிறது!"

"சரி, சரி! உன் இஷ்டப்படி மறைத்து வைத்து, அவனுடன் நீயும் சந்தியில் நில்லு. அவனைப் பற்றி உனக்குக் கவலை இல்லையாயின் ஒன்றுக்கும் உதவாத கிழவனான எனக்கு என்ன வந்தது! நான் ஒரு கிழட்டு மடையன். என்னை அவன் ஏய்க்கட்டும். புத்திசாலியான நீகூட அவன் கைப்பொம்மையாக ஆடும் அதிசயத்தை என்னவென்று சொல்லுவது!" என்று கத்தினார் வெங்கய்யா.



"அப்பா! என் தலை சுற்றுகிறது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. மனம் குழம்புகிறது. உங்களுக்கு இன்று ஏன் இப்படிக் கோபம் வருகிறது? அவர் என்ன செய்து விட்டார்!" என்றாள் பாரதி அழாக்குறையாக.

"என்ன செய்து விட்டானா! உனக்கு ஒன்றுமே தெரியாது போல் பாசாங்கு செய்கிறாய் அல்லவா! வாசற் கதவைத் திற. கிராம ஜனங்கள் சகலரும் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதை உன் காதினாலேயே கேள்."

"ஜனங்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள்!"

"மகனின் பெருமையை அப்பன் வாயிலிருந்து கேட்க வேண்டும் என்பது இந்தச் சீமாட்டியின் ஆசை போலும்! அப்படியானால் கேள். என் அருமை மகன் நகரத்தில் உள்ள யாரோ ஒருத்தியுடன் காதல் நாடகம் நடத்தி வருகிறான். காரியம் மிஞ்சி விட்டது. இனி அவனை மீட்க முடியாது, தெரிந்ததா!"

"இல்லை, இல்லை, இல்லை. இதெல்லாம் முழுப் பொய். நற்குணம் வாய்ந்த உங்கள் பிள்ளை மீது யாரோ பொறாமை கொண்டவர்கள் திரித்து விட்டுள்ள பொய். அவர் ஒரு காலத்திலும் அப்படி அற்பத்தனமாகப் போக மாட்டார்" என்று அலறினாள் பாரதி.

"வாயை மூடு! என்னைக் காட்டிலும் நீ உலக அனுபவசாலி அல்லவா! உனக்கு எல்லாம் தெரியும்! இப்போதாவது கண்களைத் திறந்து பார். உன் வீடு தீப்பற்றி எரிகிறது."

இவ்விதம் சொல்லிக் கொண்டே வெங்கய்யா அரைகுறையான சாப்பாட்டுடன் கோபமாக எழுந்து சென்று விட்டார்.

அது கோடைகாலம். மழை காலத்தில் அலை மோதிக் கொண்டு சப்தத்துடனும் சுழல்களுடனும் வாயால் வழியும் வெள்ளத்துடன் காட்சியளிக்கும் நதியில் அப்பொழுது எங்கும் மணலாக இருந்தது. ஓர் ஓரத்தில் மாத்திரம் சிறிதளவு தண்ணீர் சலசல வென்று ஓடிக் கொண்டிருந்தது. வெங்கய்யா பாபுவின் மகன் ராஜா ராவ் மணலில் படுத்துக் கொண்டு ஆகாயத்தைப் பார்த்த வண்ணம் தன்னைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

ராஜா ராவ் எம். ஏ. பட்டம் பெற்றுக் கல்லூரிப் படிப்பைப் பூர்த்தி செய்ததும், அவனுக்கு வெங்கய்யா சிறந்த லட்சணமும் குணங்களும் வாய்க்கப் பெற்ற பாரதியைக் கல்யாணம் செய்து வைத்தார்.

ராஜா ராவ் வேலைக்காக எவ்வளவோ முயற்சி செய்தும் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. வெங்கய்யா பாபு கிராமத்தில் உள்ள ஒரு விவசாயி. அதிகாரிகளையோ, அரசியல்வாதிகளையோ, செல்வாக்கு உள்ளவர்களையோ கண்டு அவர்களிடம் சாமர்த்தியமாகப் பேசித் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் ஆற்றலும் அவரிடம் இல்லை. அதனால் தான் ராஜா ராவுக்கு உயர்ந்த படிப்பு இருந்தும் கூட வேலை கிடைக்கவில்லை.

ராஜா ராவ் முயற்சித்தால் குமாஸ்தா வேலை எளிதாகக் கிடைத்திருக்கும். ஆனால் தன் மகனைக் குமாஸ்தா வேலைக்கு அனுப்ப வெங்கய்யா சிறிதும் விரும்ப வில்லை.

ராஜா ராவுக்குத் தகுந்த உத்தியோகம் எதுவும் கிடைக்காததும் ஒரு விதத்தில் நன்மை தான் என்று வெங்கய்யா எண்ணினார். ஏனெனில் வெங்கய்யாவின் மனைவி காலமாகிப் பத்து வருஷங்களுக்கு மேல் ஆகி விட்டன. இனியும் தமது வீடு இல்லாள் இல்லாத பாழ்வீடாக இருக்க அவர் விரும்ப வில்லை. எனவே, அவர் தமது மகனும் மருமகளும் வீட்டிலேயே இருக்க வேண்டும் என்று விரும்பினார்.

பாரதி தன் புக்ககத்துக்கு வந்ததும் சகல பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்டாள். எனவே, புத்திசாலியும் குணவதியுமான பாரதி வெகு சீக்கிரத்தில் அந்த வீட்டின் எஜமானியாக விளங்கினாள்.

சமையல் வேலையிலிருந்து பால் கறக்கும் வேலை வரையில் சகல அலுவல்களையும் அவளே நேரில் கவனித்தாள். உல்லாசமாக இருக்க வேண்டிய சிறு வயதிலேயே எல்லாப் பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்டால் உடம்புக்கு ஆகாது என்று வெங்கய்யா பாபு எவ்வளவோ கூறியும் பாரதி கேட்கவில்லை.

பல வீட்டு அலுவல்களையும் வேலைக்காரர்களிடம் விட்டு விடும்படி வெங்கய்யா கூறியதற்குப் பாரதி அளித்த பதில் அவரை மேற்கொண்டு பேச முடியாமற் செய்து விட்டது.

"கறவை மாட்டையும், அன்னம் சமைக்கும் வெண்கலப் பானையையும் வேறொருவரிடம் ஒப்படைத்தால் வீட்டில் லக்ஷ்மி தங்க மாட்டாள்" என்று பாரதி சிரித்துக் கொண்டே கூறி விட்டாள்!

எனவே, வெங்கய்யா பாரதியைத் தம் மகனைக் காட்டிலும் அதிக அன்புடன் நடத்தி

வந்ததில் வியப்பில்லை. அவளைத் தம் வீட்டுக்கு வந்த திருமகலக்ஷ்மியாகவே கருதினர்.

வெங்கய்யாவின் பேரபிமானத்தையும், தன் கணவன் ராஜா ராவின் களங்கமற்ற அன்பையும் பெற்றிருந்த பாரதி எப்போதும் சந்தோஷமாகவும் வேலை செய்யும்போது குதூகலமாகப் பாடிக் கொண்டும் உற்சாகத்துடனும் இருந்ததைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால், ராஜா ராவோ அவளுக்கு நேர் மாறாக இருந்தான். சிறு வயதில் தாயை இழந்த அவன் வெளியூரிலேயே படித்துக் கொண்டிருந்ததால், அவன் தன் சொந்தக் கிராமத்தில் ஓர் அன்னியனைப் போலவே இருந்தான். அந்தக் கிராமத்தில் அவனுடன் யாரும் பேச வருவதில்லை. அவனுக்கு அங்கு தன் நண்பன் என்று சொல்லிக் கொள்வதற்குக் கூட யாருமில்லை. கிராமத்தில் உள்ளவர்களிடம் என்ன பேசுவது என்பதும் அவனுக்குத் தெரியவில்லை. எனவே, அவன் அலமாரியிலிருந்து கைக்குக் கிடைத்த புத்தகத்தை வாசிப்பதிலேயே காலம் கழித்து வந்தான்.

இடைவிடாமல் புத்தகங்களை வாசித்து வாசித்து அவனுக்கு அலுத்து விட்டது. எனவே மனத்தில் சோகமும் அமைதியின்மையும் ஏற்படலாயின. சோம்பலும் சோர்வும் அவனை ஆட்கொள்ளத் தொடங்கின.

அதன் விளைவாக அவனுக்கு வாழ்க்கையே சாரமற்றதாகத் தோன்றியது. தன் மீதும் உலகத்தின் மீதும் அவனுக்கு மிகுந்த வெறுப்பு உண்டாயிற்று.

ராஜா ராவின் மனமும் தேகமும் சோர்வடைந்ததால், அவனுக்கு அடிக்கடி தலைவலியும் வேறு சில்லறை நோய்களும் ஏற்படத் துவங்கின. தனக்கு ஏதோ தீராத நோய் பிடித்து விட்டதாகக் கருதி ராஜா ராவ் டாக்டரிடம் சென்றான். டாக்டர் அவனைச் சோதித்துப் பார்த்து, அவன் உடலில் கோளாறு எதுவுமில்லை என்று கூறி விட்டார்.

அப்படியிருந்தும் ராஜா ராவுக்குத் திருப்தி ஏற்படவில்லை. அவனது சோகத்தையும் சோர்வையும் உற்சாக மின்மையையும் கண்டு பாரதி மிகவும் கலக்கம் அடைந்தாள். அமைதியாக இருந்த அவள் மனமும் இப்போது தவிக்கத் தொடங்கியது.

பாரதி திருப்பித் திருப்பிக் கேட்டதற்கும், அவன் தன் உடலும் மனமும் சரியான நிலைமையில் இருப்பதாகக் கூறி விட்டான்.

*   *   *

ஒரு நாள் ராஜா ராவின் தந்தை வெங்கய்யா பாபு ஏதோ சில முக்கிய சாமான்கள் வாங்கி வருவதற்காக அருகில் உள்ள நகரப் பிரதேசத்துக்குத் தன் மகனை அனுப்பி வைத்தார்.

அவன் ஸ்டேஷனில் இறங்கியதும் "அரே, ராஜு!" என்று யாரோ உரக்கக் கூப்பிடுவது அவனுக்குக் கேட்டது. அந்தக் குரல் அவனுக்கு மிகவும் பழகிய குரலாகவும் இருந்தது.

ராஜா ராவ் திரும்பிப் பார்த்தான். ஸ்டேஷனில் உள்ள புத்தகக் கடைக்கு அருகில் அவனது கல்லூரி நண்பனான பந்துலு நின்று கொண்டிருந்தான்.

அவனைக் கண்டதும் ராஜா ராவுக்கு மகிழ்ச்சி பொங்கியது. இருவரும் கல்லூரியில் நெருங்கிய நண்பர்கள். தவிர, பந்துலு எப்போதும்

ஹாஸ்யமாகப் பேசி எல்லோரும் வயிறு குலுங்கச் சிரிக்கும்படி செய்வதில் கெட்டிக்காரன்.

ராஜா ராவின் தோளில் கையை வைத்துக் கொண்டே "நீ பெரிய முட்டாள்தான், அப்பா! அழைப்பு அனுப்பியிருந்தேனே வரவில்லையா! என் கல்யாணத்துக்கு வராமல் இருந்து விட்டாயே! இதோ நிற்பவள்தான் எனது தர்ம பத்னி. பெண்கள் சமூகத்துக்கே இவள் ரத்னம் என்று வைத்துக் கொள்" என்றான் பந்துலு கேலியாக.

பந்துலுவுக்கு அருகில் அவனது மனைவி நின்று கொண்டிருந்தாள். குட்டையாகவும் ஸ்தூல சரீரத்துடனும் நின்று கொண்டிருந்த அந்தப் பெண்ணைப் பார்த்தான் ராஜா ராவ். இந்த லட்சணத்தில் அவள் தன் உதடுகளுக்குச் சாயம் கொடுத்திருந்தது ராஜா ராவின் மனத்தை என்னவோ செய்தது. தன் அருமை நண்பனான பந்துலுவுக்கு இப்படி ஒரு பெண் மனைவியாக வாய்க்க வேண்டுமா என்று அவன் மனம் அங்கலாய்த்தது.

"இவள் காலஞ் சென்ற ஜில்லா சிரஸ்தார் அபிராமய்யாவின் செல்வப் புதல்வி, அப்பா! எனவே, அவர் எப்படி யெல்லாமோ சம்பாதித்துச் சேர்த்து வைத்த சொத்தைச் செலவு செய்ய வேண்டிய பொறுப்பு இப்போது என் தலையில் சுமந்திருக்கிறது! நாங்கள் இப்போது எங்கள் கலை மன்றத்துக்குச் செல்லுகிறோம். நீயும் வருகிறாயா!"

பந்துலு இவ்விதம் சொல்லிய போது அவன் மனைவி சிரித்துக் கொண்டு நின்றாள். அவன் பேசி முடித்ததும் அவள் ராஜா ராவுடன் பேசச் சிறிதும் கூச்சப்படவில்லை.

"உங்கள் நண்பர் கல்லூரியிலும் இப்படித் தான் ஏதாவது அர்த்தமின்றி உளறிக் கொட் டிக் கொண்டே இருப்பாரா!" என்று ராஜாராவைக் கேட்டாள்.

"மந்திரி! இந்த ராணி உன்னை ஏன் அப் படிக் கேட்க வேண்டும்! என்னுடைய நாவன்மையில் மயங்கித்தானே இந்த சகுந் தலா தேவி இந்த துஷ்யந்தன் மீது காதல் கொண்டு கல்யாணம் செய்து கொண்டாள்" என்றான் பந்துலு இடைமறித்து.

"ஓஹோ! உன் மனைவியின் பெயர் சகுந் தலா தேவியா!" என்று கேட்டான் ராஜாராவ்.

"ஆமாம், ஸ்ரீமதி சகுந்தலா எம். ஏ. மாதர் சங்கத்தின் காரியதரிசி; கலா மன்றத்தின் தலைவி; சினிமா, நாடக விமர்சகி, கவியரசி, அரசியல் வாதி. இவளைப் பற்றி இப்படியே அடுக்கிக் கொண்டு போகலாம் ... சரி, சரி, நாழியாகிறது. மன்றத்துக்குப் போவோம் வா."

மற்றொரு சமயம் வருவதாக ராஜா ராவ் கூறியதைப் பந்துலு ஏற்றுக் கொள்ளாததால் அவனுடன் கலா மன்றத்துக்குச் செல்லு வதைத் தவிர ராஜுவுக்கு வேறு வழியில் லாமல் போயிற்று.

போகும் போது பந்துலு தன் மனைவியிடம் ராஜுவின் குணநிசயங்களை எடுத்துக் கூறத் தவறவில்லை. கேலியாக, அவனைப் பெரிய தத்துவ ஞானி என்றும், அரசியல் மேதை என்றும், புத்தகப் பூச்சி என்றும் சொல்லிக் கொண்டே போனான்.

கடைசியில் அவர்கள் மூவரும் கலா மன்றத் துக்குள் சென்றனர். அங்கு சென்றதும் ராஜா ராவ் அப்படியே பிரமித்து நின்று விட்டான். சோகத்தினால் ஆட்கொண்டிருந்த அவனுக்குக் கலாமன்றம் ஆனந்த மயமான ஒரு புது உலகமாகவே தோன்றியது.

(அடுத்த இதழில் முடியும்)

டி.கே.சி.யின் கடிதங்கள்

திருக்குற்றாலம்
12—7—46

நாங்கள் 30—6—46 அன்று அனுப் பிய கடிதம் கிடைத்தது. அரசியலைப் பற்றி வெகு அழகாக எழுதி யிருக்கிறீர்கள். அது விஷயமாக நாம் செய்யக் கூடிய தெல்லாம் கண்ணை மூடிக் கொண்டு சும்மா இருப்பது தானே?

சதுரங்கத்திலுள்ள காய்கள் — ராஜா ராணி வேறு — அங்கும் இங்குமாக நகர் கின்றன. அவைகளாகவா? அல்ல. ஆடுகிற ஆசாமிகள் வேறல்லவா — அரசியல் விளை யாட்டில் நாம் காய்கள் தான்.

காய்களுக்கும் நமக்கும் ஒருவித்தியாசம். நமக்குக் கண் இருக்கிறது. மூடிக் கொள் ளும் வேலை இருக்கிறது. அது இல்லை காய்களுக்கு!

* * *

'கலைச் சொல்க் கமிட்டி' யில் சையன்ஸ் சம்பந்தம் இல்லாதவர்களே இதுவரை இருந்து வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரே நோக்கம், வட மொழியை விருத்தி பண்ணி விட வேண் டும். அல்லது தமிழை விருத்தி பண்ணி விடவேண்டும். சையன்ஸ் எப்படியேனும் போகட்டும் — என்று தான் எண்ணு கிறார்கள். விஷயந்தான் முக்கியம் என்று எண்ணி விட்டால் வார்த்தைகளின் ஆதிக் கம் முன்னணிக்கு வராது.

மேல் நாட்டான் ஒரு பிள்ளையைப் பெற்றான். அதற்கு ஏதோ 'விக்டர்' என்றும் பெயரிட்டான். நாமும் அவனை 'விக்டர்' என்று சொல்லி விட்டால் தமிழ் கெட்டா போகும்? போகாது.

அது போல, உடம்பைப் பிரித்துப் பார்த்தான். ஒரு உறுப்புக்கு 'மால்பிகியன் காப்ஸியூல்' என்று ஏதோ பெயரிட்டான். நாமும் அந்தப் பெயரையே இட்டு அழைத்தால் கேடு ஒன்றும் விளைந்து விடாது. நாளடைவில் வேறு பெயர் இட்டு நம்மவர்கள் அழைக்க ஆரம்பித்தால் அதைச் சேர்த்துக் கொள்ளுகிறது. ஆனாலும் மேல் நாட்டு சையன்ஸோடு கலந்து கொள்ளுவதற்கு மேல் நாட்டார் நாமகரணம் செய்தபடியே பெயர் வைத் துக் கொண்டால் பிரயோஜனமாய் இருக் கும். அதைத்தான் பதினைந்து வருஷங் களாகச் சொல்லி வருகிறேன். இதைப் பற்றி யூனிவர்ஸிட்டி கமிஷன் முன் வாக்குமூலம் முன்னமேயே கொடுத்தி ருக்கிறேன். ரிக்கார்டுகளைப் பார்த் தால் தெரிய வரும்.

மக்கள் மனம் உடம்பைச் சேர்ந்தது. பற் றியதை விடாது. பட்டினியாய்க் கிடந்து சாகும். பாறாங்கல்லைக் கட்டித் தொங்க விட்டாலும் கலைச்சொல் ஆக்கக்காரர் அநேகமாய்ச் சாகத் தயாராய் இருக் கிறார்கள். பிடித்ததை விடப் போவதில்லை. தமிழை வைத்தோ வடமொழியை வைத்தோ தொங்கிக் கொண்டே இருக்கத் தயார், கடைசி வரையுமே!

ஆங்கிலச் சொற்களையே வைத்துக் கொள் ளலாம் என்று ஏற்பட்டு விட்டால் எல் லாம் எளிதாய்ப் போய் விடுகிறது. அதன் பிறகு. கலைச் சொற்களுக்காகக் கழகம் என்று ஒன்று வேண்டாமென்றல்லவா ஆய்விடும். பெரிய விபத்தல்லவா அது!

[illegible] அன்புள்ள
டி. கே. சிதம்பரநாதன்



“தொலை தூரத்திலுள்ள தேசங்களுக்குப் புத்தகத்தைப் போல் வெகு விரைவாக அழைத்துச் செல்லும் கப்பல் இல்லை” என்று பிரபல கவிஞர் எமிலி டிக்கன்சன் கூறியிருக்கிறார். மூன்று முறை உலகம் சுற்றி வந்து, ‘உலகம் சுற்றும் தமிழன்’ என்னும் பிரயாண நூலின் மூலம் தமிழ் ரஸிகர்களைக் கொள்ளை கொண்ட திரு ஏ. கே. செட்டியார் அவர்கள் நம்மை ‘மலேயா முதல் கானடா’ வரை தம் புத்தகக் கப்பலில் பிரயாணத்துக்கு அழைத்துச் செல்கிறார்.

மலேயாவுக்குச் செல்கிறோம். யுத்தத்தின் பொழுது மலேயாவிலிருந்து பயந்தோடிய ஆங்கிலேய ரப்பர்த் தோட்ட முதலாளி ஒருவர் யுத்தம் முடிந்த பிறகு மலேயாவுக்குத் திரும்பி வந்தார். அவரைக் கண்டதும் ரப்பர்த் தோட்டத் தொழிலாளி ஒருவன் தொப்பியைக் கழற்றாமல் சென்று விட்டான். அவருக்குப் பிரமாதமாகக் கோபம் வந்துவிட்டது. தொழிலாளியைக் கடுமையாகச் சினந்து கொண்டார். அது மட்டுமல்ல; காரியாலய குமாஸ்தாவிடம் சென்று, “யுத்தத்துக்குப் பிறகு இந்த நாட்டில் அநேக மாறுதல்கள் ஏற்பட்டு இருப்பதாகத் தெரிகிறது” என்றார். அதற்கு அந்தக் குமாஸ்தா, “ஆம்! எல்லாம் மாறிவிட்டன— தங்களைத் தவிர” என்று சூடாகப் பதிலளித்தார். இந்த ரஸமான சம்பவம் நம்மைத் திகைப்பில் ஆழ்த்துகிறது.

“கல்லின் கதைகளெல்லாம் — இரு
காது குளிரக் கேட்பேன்” என்று

கவிமணி பாடினார். இந்தோனிஷியாவிலுள்ள கற்கோயில்கள் அழகழகான அற்புதக் கதைகளைக் கூறுகின்றன.

இந்தோனிஷியாவிலேயே இரண்டாவது பெரிய தீவு சுமத்ரா. இதன் முக்கிய நகரம் மீடான் டில்லி. ‘டில்லியா! ஆச்சரியமாயிருக்கிறதே! நம் இந்தியத் தலைநகரின் பெயராகவே இருக்கிறதே!’ என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா! ஆம்! உண்மைதான்! அவ்விரண்டுக்கும் சம்பந்தமுண்டு என்று டில்லி சுல்தானை அவர் அரண்மனையில் திரு ஏ. கே. செட்டியார் சந்தித்துப் பேசியதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். டில்லி சுல்தானுக்கு இந்தியாவிடம் உள்ள அளவற்ற அன்பை அறிந்து கொள்ளலாம். டில்லி சுல்தான் இந்நூல் ஆசிரியரிடம், “நான் இந்தியன் என்று கூறிக் கொள்ளப் பெருமைப்படுகிறேன். பண்டித நேரு இங்கு வந்த போதும் அவரிடம் இதைத்தான் கூறினேன். எங்கள் முன்னோர்கள் இந்திய டில்லியிலிருந்து வந்தவர்கள். அதற்காகத்தான் எங்கள் ஊருக்கும் டில்லி என்று பெயர் வைத்திருக்கிறோம். நாங்கள் இன்று சாப்பிடும் உணவைப் பாருங்கள். எல்லாம் இந்திய உணவு. எங்கள் வீட்டுச் சமையற்காரர்கூட இந்தியர்” என்று கூறினார். அட! பல ஆயிரம் மைல்கள் தூரத்திலுள்ள இந்த சுல்தானுக்குத்தான் இந்தியாவிடம் என்ன அன்பு, பக்தி என்று வியப்புக் கடலில் மூழ்குகிறோம்.

பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள கண்ணற்ற தீவாகிய பீஜித்தீவிலே எண்ணற்ற நம் இந்தியச் சகோதரர்கள் இருக்கிறார்கள் என்று தெரிந்ததும் வியக்கிறோம். பீஜித் தீவில் நந்தியில் விநாயகர் கோயிலும், சுப்பிரமணிய சுவாமி கோயிலும், இரண்டு மூன்று பெருமாள் கோயில்களும் இருக்கின்றன. சைவ வைஷ்ணவச் சண்டைகள் அங்கு இடையா. சுப்பிரமணிய சுவாமி கோயிலிலே துளசி தீர்த்தம் வழங்குகிறார்கள். பெருமாள் கோயிலில் விபூதிப் பிரசாதம் கொடுக்கிறார்கள் என்று தெரிந்ததும், ‘இது என்ன அதிசயம்!’ என்று மூக்கின் மேல் விரலை வைக்கின்றோம். பீஜித்தீவிலுள்ள வைத்தியர்களிடம் யார் வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் “ஈரே ஈரே” என்று சொல்லிப் பெற்றுக் கொண்டு விடலாம் என்றதும் நாமும் அங்கேயே போய்க் குடியேறி விடலாம் என்றே தோன்றுகிறது.

இன்னும் பாலித்தீவையும் ஆஸ்திரேலியாவிலுள்ள பலப்பல விந்தை மனிதர்களையும், அவர்களின் விநோதப் பழக்க வழக்கங்களையும் தெரிந்து கொள்கிறோம்.

கடைசியாகக் கானடாவுக்குச் செல்லுகிறோம். உழைப்பினால் உயர்ந்த இரு இந்தியர்களின் வாழ்க்கை நம்மைப் பரவசத்திலாழ்த்துகிறது. மர ஆலையில் வேலையிலிருந்த இந்தியத் தொழிலாளரிடம் ஒரு சீக்கியர் சமையல்காரராகப் பணியாற்றினார். இந்தச் சீக்கியச் சமையற்காரர், மர ஆலையிலிருந்த மற்றொரு சீக்கிய குமாஸ்தாவுடன் கூட்டாகச் சேர்ந்து, 1930ம் வருஷத்தில் பொருளாதார நெருக்கடியினால் மூட வேண்டிய அந்த மர ஆலையைக் குத்தகைக்கு எடுத்து நடத்தினர். பல இந்தியத் தொழிலாளர்களையும் அதில் கூட்டாகச் சேர்த்துக் கொண்டனர். உழைப்பாலும், யுத்தத்தால் ஏற்பட்ட லாபத்தாலும் அந்த மர ஆலையையே விலைக்கு வாங்கி விட்டனர். அதோடு மற்றும் பல ஆலைகளையும் உழைப்பினால் உயர்ந்த அவ்விருவரும் விலைக்கு வாங்கினார்கள். இப்பொழுது அவ்விருவரும் தனித்தனியாகப் பிரிந்து கானடாவில் இரு பெரும் கோடீசுவரர்களாக உழைப்பின் உயர்வுக்குச் சான்றாக விளங்குகிறார்கள்.

‘மலேயா முதல் கானடா வரை’ என்ற இப் புத்தகத்தைப் படித்து முடித்தவுடன் நமக்கு நூலாசிரியரோடு எவ்வித செலவும் இல்லாமலேயே மலேயா முதல் கானடா வரை சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு வந்த திருப்தி ஏற்படுகிறது.


ஆசிரியர்: திரு ஏ. கே. செட்டியார்; பிரசுரம்: குமரி மலர் காரியாலயம், ஆழ்வார்ப்பேட்டை, சென்னை-18, விலை ரூ 5. — பி. எஸ். மணி

ஒரு கோடை யோசனை ...

ஐஸ் டீ

1. புது நீரைக் கொதிக்கவைத்துத் தேயிலையை ஊறவைக்கவும்.
2. டம்ளரில் ஐஸ் தூளைப் போட்டு, வடிகட்டி மூலம் டீ கரைசலை விடவும். பால் சேர்க்கவேண்டாம்.
3. ருசியைப்பொறுத்து, சர்க்கரையும், எலுமிச்சம் பழத் துண்டுகளையும் சேர்க்கவும்.
4. குளிரும்வரை சிலநிமிஷங்கள் காத்திருங்கள். கலக்கிப் பரிமாறவும்.





தெம்பூட்டும் குளிர் பானம்

ரவிசந்திரிகா

சோமு



13. மீரான் சபதம்!

"இது மருதி. அல்லாஹ் பேரில் ஆணை! கத்தியை விடு."

இந்த வார்த்தைகள் காஜியாரின் இதயத்திலிருந்து வந்தன. மீரானுடைய இதயத்திலே சென்று தாக்கின.

"அல்லாஹ் பேரில் ஆணை!" — எத்தனை பெரிய வார்த்தை அது.

உஸ்தாத் மீரானுக்குத் தலை வேகமாகச் சுற்றியது. ஓங்கிய கையிலிருந்து பிச்சுவா தளர்ந்தது. அப்படியே கையைத் தொங்கப் போட்டுக் கொண்டே தலையை வளைத்துக் காஜியாருக்கு 'சலாம்' செய்தார் மீரான்.

"பாவா" என்று கத்திக் கொண்டே மீரானுடைய காலிலே வந்து விழுந்தாள் ஆமினா. மீரானுக்கு மனத்தை என்னவோ ஒரு உணர்ச்சி வந்து தளர்த்தியது. அவருடைய இதயத்தில் பிள்ளைப் பாசம் என்பது ஒரு தாயின் அன்பாக அல்லவா இருந்தது? அந்த அன்பு இப்பொழுது அவரை ஆட்கொண்டது!

"மீரான், என்ன காரியம் செய்வதற்கு இருந்தாய்! உட்காரம்மா!" என்றார் காஜியார், மீரானைப் பார்த்து. அளவு கடந்த பரிவோடு பேசும்போது ஆண்களையுங்கூட "அம்மா" என்றுதான் அன்போடு கூப்பிடுவார் காஜியார். இப்பொழுது அந்த "அம்மா" என்ற அழைப்பு மீரானுடைய உள்ளத்தில் இரட்டிப்பு வேகத்தோடு சென்றது. உண்மையில் மீரான் ஆமினாவின் அப்பா மட்டுமில்லை, அம்மாவுந்தான்! அந்தப் பாசத்தையே ஊறுவது போன்று வந்த காஜியாரின் 'அம்மா!' என்ற வார்த்தை, இறந்து போன மனைவியின் நினைவை அப்படியே பசுமையாக மீரானின் உள்ளத்தில் கொண்டு வந்து நிறுத்தியது.

காஜியார் பேச ஆரம்பித்தார்:



இப்படிச் சொல்லிக் கொண்டே மயில் பீலியை எடுத்து மீரானுடைய உடம்பிலே ஒரு தரம் ஏற இறங்கத் தடவி விட்டார் காஜியார். மீரானுக்கு உடம்பு புல்லரித்தது.

காஜியார் மகுதியின் பளிங்குக் கல்லிலே உட்கார்ந்தார். மீரான், ஆமினா, அப்துல் மஜீத் மூவரையும் உட்காரச் சொன்னார்.

"நடந்திருப்பது சாமானிய விஷயமில்லை. இரண்டு பேருடைய வாழ்க்கையைப் பொறுத்த விஷயம். கோபப்பட்டு, ஒன்றும் முடிவு செய்ய வேண்டாம். நீங்கள் மூவரும் இப்படியே வீட்டுக்குப் போங்கள். நன்றாக ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வாருங்கள். அதன் பிறகு எனக்குத் தகவல் கொடுங்கள்" என்றார் காஜியார்.

மீரான் ஒன்றும் பதில் பேசவில்லை. காஜியார் தொடர்ந்து சொன்னார்:

"மீரான்! உன்னுடைய மனம் எத்தனை புண் பட்டிருக்கிறது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நீ வீட்டுக்குப் போய்க் கொஞ்சம் ஓய்வு எடு. பாவம், இரவெல்லாம் விழித்திருக்கிறாய். தூக்கம் இல்லையென்றாலே மனிதனுக்குப் புத்திக் குழப்பம் ஏற்பட்டு விடும். மஜீத், உனக்கும் ஒரு முக்கியமான வார்த்தை சொல்ல வேண்டும். நானும் மீரானும் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வருகிறவரை, நீ ஆமினாவைப் பார்க்கவே கூடாது. தெரிந்ததா? நீங்களாக ஒரு முடிவுக்கு வந்து, நீங்களாகவே ஒரு காரியத்தைச் செய்வது என்பதை இந்த நிமிஷத்திலிருந்து விட்டு விட வேண்டும். நியாயமான ஒரு கோரிக்கைக்குப் பிறரை இசையப் பண்ணுவதிலே தான், அந்தக் கோரிக்கையின் நியாயமும் பிறருக்குப் புரியும்!" என்று ஒரு போடு போட்டார் காஜியார்.

மீரான் எழுந்தார்.

"ஹஸ்ரத்! உங்களுடைய கருணைக்கு ஆயிரம் சலாம். உங்களுடைய கட்டளையை மீறுவதற்கு இந்த ஆயுளில் எனக்கு அதிகாரம் கிடையாது. உங்களுடைய மயில் பீலிக்கு முன்னால், என்

"திருக்குர் ஆன் சொல்கிறது: 'விசுவாசிகளே! பெண்களுடைய விருப்பத்துக்கு மாறாக, அவர்களை நீங்கள் வாரிசுகளாக ஆக்கிக் கொள்வது கூடாத செய்கையாகும். அவர்கள் மணம் செய்து கொள்வதிலிருந்தும் அவர்களைத் தடை செய்ய வேண்டாம்.... அவர்களை அன்போடு நடத்துங்கள். நீங்கள் அவர்களை வெறுத்தால், அல்லாஹ் பெரிதும் நன்மை வைத்துள்ளதை நீங்கள் வெறுப்பதாகி விடும்.'"

(4: 19)

கத்தி தலை வணங்கி வளையும். சந்தேக மில்லை. ஒரு பெரிய கொலைக் குற்றத்தி லிருந்து என்னைக் காப்பாற்றினீர்கள். ஒரு பெரிய கொலையிலிருந்து அவனைத் தப்புவித்தீர்கள். எனக்கு உண்மை யாகவே புத்தி குழம்பித்தான் இருக்கிறது. நான் வருகிறேன். யோசித்து அதன் பிறகு தங்களை வந்து பார்க்கிறேன்—"


"மீரான்! உன்னோடு ஆமினாவையும் அழைத்துப் போ. உன்னைக் கேட்காமல் இப்படி நடந்து கொண்டாளே என்று அவளிடம் கோபப்படாதே. உன்னிடம் அவளுக்குள்ள பிரியம் எனக்கு நன்றாகத் தெரியும். அல்லாஹ்வுக்கும் தெரியும். அவளை வித்தியாசமாக நினைக்காதே. நம்முடைய அங்கீகாரம் இல்லாமல் அவள் இனி ஒன்றும் செய்ய மாட்டாள்."

மீரானுக்குக் கண் கலங்கியது. காஜியார் சொன்னார்:

"மீரான்! இப்பொழுது அவன் செய்த குற்றம், அவனுடைய குற்றமில்லை. அது தான் வயதின் குற்றம் என்பது. அதற்காக அவனை மன்னித்து விடு. அப்துல் மஜீத் நல்ல பையன். திருக்குர் ஆன் முழுதும் நன்றாகப் படித்திருக்கிறான். புத்திசாலி. எனக்கு அவனிடத்தில் அலாதியான பிரியம். மற்றப்படி முடிவு செய்கிற பொறுப்பை உன்னிடமே விடுகிறேன். கோபத்தையெல்லாம் மறந்து விட்டு யோசனை செய். ஒரு பத்து நாளில் மறுபடி என்னைப் பார்!"

"அப்படியே ஹஸ்ரத்!" என்று சொல்லி விட்டு மசூதியிலிருந்து புறப்பட்டார் மீரான். அப்துல் மஜீத் அவருக்கு முன்பாக நடந்து வந்து அவருடைய காலில் விழுந்தான்.

"ஷிஷ்யா!—" என்று ஏதோ வேகத்தோடு பேச ஆரம்பித்த மீரான் காஜியாரை உத்தேசித்து வார்த்தைகளை அடக்கிக் கொண்டார்.



"ஷிஷ்யன்" என்ற அந்த வார்த்தைக்குப் பொருத்தமானவன் மஜீத். மேனாட்டு வாத்திய கோஷ்டியில் பிசகில்லாமல் தாளம் போடுவதற்காக ஒரு இயந்திரம் வைத்திருக்கிறார்களே, அப்படி ஒரு இயந்திரத்தை வைத்தாலும் அதன் தாளத்திற்குப் பிசகாமல் சிலம்பம் ஆடக் கூடியவன் மஜீத். இப்பொழுது அவனுடைய செயலில் அல்லவா தாளம் தவறிப் போய் விட்டது!

காஜியார் சொன்னார்:— "தரையிலே உடம்பு படும்படியாக விழுந்து வணங்குகிறவர்களை, அல்லாஹ் மன்னிக்கிறான். அல்லாஹ்வுக்குப் பணியும் ஆண்களும், அல்லாஹ்வுக்குப் பணியும் பெண்களும், விசுவாசம் கொண்ட ஆண்களும், விசுவாசம் கொண்ட பெண்களும் ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான வெகுமதியையும் தயாரித்துள்ளான்."

இவ்வாறு சொல்லிக் கொண்டே இந்தக் கருத்துக்களைச் சொல்லுகிற முப்பத்து மூன்று — முப்பத்தைந்தாவது திருவாக்கியங்களை ஓதும்படி அப்துல் மஜீதிடம் சொன்னார் காஜியார்.

திருக்குர் ஆன் முழுதும் முறையான விதத்தில் ஓதக் கற்றுக் கொண்டிருந்த மஜீத், மண்டியிட்டு உட்கார்ந்து கொண்டு அந்தத் திருவாக்கியங்களை ஓதினான். அப்படியே மீரானும் மண்டியிட்டுக் கொண்டு அந்த வாக்கியத்தின் பொருளிலும் மஜீதின் குரலிலே இருந்த உருக்கத்திலும் வசமானான்.

குர் ஆன் திருவாக்கியம் முடிந்ததும் அந்தப் புனிதமான மன நிலையிலேயே அவர்களை வழியனுப்பினார் காஜியார். மஜீதிடம் மட்டும் மீண்டும் ஒரு முறை வற்புறுத்தினார்.

"மீரானுக்குத் தெரியாமல், என்னுடைய அங்கீகாரம் இல்லாமல் ஆமினாவைச் சந்திப்பதை, அல்லாஹ் பேரில் சொல்லுகிறேன், இன்றோடு விட்டு விடு. மீரானுடைய சம்மதத்தை என்று பெறுகிறாயோ, அன்று என்னுடைய அங்கீகாரமும் உனக்கு உண்டு."

மஜீத் காஜியாருக்கு மண்டியிட்டு வணங்கினான். அப்படியே மீரானுக்கும் சலாம் செய்து விட்டு, மறு பக்கம் திரும்பி ஓரே பய பக்தியோடு நடந்து சென்றான்.

மகளை அழைத்துக் கொண்டு மீரான் மசூதிக்கு வெளியே வந்தார். படிகளிலே இறங்கியிருப்பார். என்ன ஆச்சரியம்! மசூதிக்கு வெளியே ஒரு கார் வந்து நின்று கொண்டிருந்தது. மீரான் கூர்ந்து பார்த்தார். அப்புலிங்கம் அந்தக் காரிலிருந்து வேகமாகக் கீழே இறங்கினான். மீரானைக் கண்டதும் அப்படியே ஒரு துள்ளுத் துள்ளி சலாம் செய்தான்.

"உஸ்தாத்! கடந்த இரண்டு மணி நேரமாக உங்களை வலை போட்டுத் தேடுகிறேன். கடைசியில் அல்லாஹ் தான் கண் பார்த்தான். தொழுகைக்குப் போயிருப்பீர்கள் என்று ஒரு நினைப்பு வந்தது. இந்த ஒரு இடத்தை மட்டும் விடுவானேன், இங்கேயும் தேடிப் பார்த்து விடுவோமே என்று நினைத்து வந்தேன்."

இவ்வாறு சொல்லிக்கொண்டு படிகளில் ஏறி மேலேவந்தான் அப்புலிங்கம். அவன் வருவதைக் கண்டதும், 'பர்தா'வை இழுத்து மூடிக் கொண்டு மசூதியின் தூணுக்கு மறைவிலே சென்றாள் ஆமினா.

"என்ன மிராசுதார்த் தம்பி! அப்படி என்ன இத்தனை அவசரம்?" என்று கேட்டுக் கொண்டே அப்புலிங்கத்துக்கு அருகிலே வந்தார் உஸ்தாத்.

உஸ்தாத் மீரானுக்கு மூதூர் மிராசுதார் குடும்பத்தில் அளவு கடந்த பக்தி. தனக்கு ஏதாவது பண உதவி வேண்டியிருந்தால், வேறு யாரிடமும் போக மாட்டார் மீரான். மானஸ்தர். மூதூர் மிராசுதார் ஒருவரிடந்தான் அவருக்கு நம்பிக்கை. மிராசுதாருக்கும் மீரானிடத்தில் ஒரு அபாரமான பிரியம். பண்ணை யாட்களோடு ஏதாவது கலகம் ஏற்படும் போல இருந்தால், உடனே மீரானைத் தான் மத்தியஸ்தம் செய்யக் கூப்பிட்டு விடுவார்.



இப்படிப் பல ஆண்டுகளாக அவர்களுக்குள்ளே ஒரு தொடர்பு. அப்புலிங்கத்திடமோ மீரானுக்கு ஒரு தனிப்பட்ட பிரியம். "தங்கமான பிள்ளை. நம்மையெல்லாம் போல் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்திருக்க வேண்டியது. தப்பிப் போய் மிராசுதார் வீட்டில் பிறந்திருக்கிறது. அத்தனை நல்ல பிள்ளை!" என்று அப்புலிங்கத்தைப் பற்றி மீரான் விமர்சனம் செய்வதுண்டு.

"உஸ்தாத்! என்ன இது! ஏன் இப்படி முகம் எல்லாம் வெளிறிப் போய் இருக்கிறது? இப்படித் தூக்கம் முழிக்கலாமா?" என்று அளவற்ற அன்போடு கேட்டான் அப்புலிங்கம்.

"அதெல்லாம் இருக்கட்டும், தம்பி! இத்தனை அவசரமாக என்னைத் தேடி வந்த காரணம் என்ன? அதைச் சொல்லு!" என்று கேட்டார் உஸ்தாத்.

"அது ஒரு முக்கியமான விஷயம். அவசரமான விஷயம்!" என்று சொல்லிக் கொண்டே, மீரானை மசூதியின் ஒரு ஓரமாக அழைத்துச் சென்றான் அப்புலிங்கம். பாவம், அவனுக்கு உஸ்தாதின் அப்போதைய மன நிலை எப்படித் தெரியும்?

"உஸ்தாத்! நமக்கு உயிருக்கு உயிரான இடத்தில் நேற்று யாரோ ஒரு போக்கிரி மாடியிலே ஏறி வம்பு செய்ய வந்தான். நல்லவேளை! நான் முழித்துக் கொண்டிருந்த சமயம் அது!......"

அப்புலிங்கம் முழுதும் சொல்வதற்குள் மீரான் இடைமறித்தார்.

"யார் வீட்டில்? ரவீந்திரன் வீட்டிலே தானே?" என்று குறுக்குக் கேள்வி போட்டார், மீரான். அத்தனை மனக் குழப்பத்தின் இடையேயும் அவருடைய துப்பறியும் சக்தி மட்டும் வேலை செய்து கொண்டுதான் இருந்தது.

"ஆமாம், ரவீந்திரன் வீட்டிலேதான்! நாகரத்தினம் என்று......"

"லால்குடிப் பையன். கனகசுந்தரத்தின் பிள்ளை. நம்முடைய சிலம்பப் பள்ளிக்கூடத்திலே கூடக் கொஞ்ச நாள் மண்ணை வாரிப் போட்டான்!" என்றார் உஸ்தாத்.

"அவனுடைய வேலைதான் போலிருக்கிறது. ஆனால் மாடியில் ஏறிக் குதித்தவன் வேறு ஒரு ஆள்......"

"தம்பி, அதெல்லாம் எனக்கு இப்பொழுது புரிந்தது. திருடன் என்ன ஆனான், சொல்லு!" என்றார் உஸ்தாத்.

"நான் பின்தொடர்ந்ததும் அவன் ஓடி விட்டான். இப்பொழுது ரவீந்திரன் வீட்டில் உங்களுக்காக நாலைந்து பேர் காத்திருக்கிறோம். திருச்சி ஏ. டி. எம். ஓ. வேறு அங்கே உட்கார்ந்திருக்கிறார். அவருடைய கார்தான் இது!"

"டாக்டர் எங்கே அங்கு வந்தார்? யாருக்கும் உடம்பு ஒன்றும் இல்லையே?" என்று கேட்டார் மீரான்.

"இல்லை. ரவீந்திரனுடைய மனைவி ஆஸ்பத்திரியில் இருக்கிறாள். அவ்வளவு தான்" என்றான் அப்புலிங்கம்.

"கல்யாணி அம்மாள்தானே?"

"ஆமாம். உங்களுக்கு எப்படி அவர்களுடைய பெயர் தெரியும்?"

"தம்பி! எனக்குக் கல்யாணியம்மாளைப் பற்றியும் தெரியும். சந்திரிகாவைப் பற்றியும் தெரியும். நன்றாகத் தெரியாது. விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். அதற்குள் நம்மை மீறி இத்தனை காரியம் நடந்திருக்கிறது. சரி, பரவாயில்லை. இனிமேல் அவரைப் பற்றி விசாரிக்கிற எண்ணத்தைக் கை விட்டு விட்டேன். ரவீந்திரன் எப்படிப் பட்ட மனிதனாக இருந்தாலும் சரி, இனி அவர் நம்முடைய ஆள்!"

"அது சரி.... ஆனாலும் நீங்கள் அவருடைய வீட்டுக்கு வந்து ...."

"தம்பீ, நீ இவ்வளவு கஷ்டப்பட்டு வந்து பார்த்ததற்காகத்தான் ரவீந்திரனை நம்முடைய ஆள் என்று சொல்கிறேன் என்று நினைக்காதே. அதுவும் ஒரு காரணந்தான். என்றாலும், முக்கியமான காரணம் நாகரத்தினந்தான்! என்னையும் என் வார்த்தையையும் மீறி அவன் ஒரு காரியம் செய்யப் போனான் என்றால் இந்த உஸ்தாதை அவன் என்னதான் நினைத்து விட்டான்? பார்த்து விடுகிறேன், இனிமேல் எந்தப் பயல் ரவீந்திரன் வீட்டுத் திசைப் பக்கம் வருகிறான் என்று!"

ஏற்கனவே உணர்ச்சியின் வசமாகி நின்ற மீரானுடைய உடம்பு இப்பொழுது அப்படியே ஆவேசத்தினால் குலுங்கியது.


"உஸ்தாத், உங்கள் அன்புக்கு சலாம். நீங்கள் இத்தனை சொன்னதே போதும். எதற்கும் இப்பொழுது நீங்கள் ஒரு தரம் வீட்டு வரை—"

"தம்பீ, இப்பொழுது என்னுடைய மனம் ஒரு நிலையில் இல்லை. எந்த உஸ்தாதை எதிர்த்து எவனும் நிற்க முடியாது என்று நினைக்கிறாயோ, அந்த உஸ்தாதை எதிர்த்து அவனுடைய......"

"என்ன, உஸ்தாத்! சொல்லுங்கள்."

"ஒன்றுமில்லை, உஸ்தாதினுடைய சிஷ்யர்களே அவனுக்குத் துரோகம் செய்தால் எப்படியிருக்கும்—"

"உஸ்தாத் நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று படபடப்போடு கேட்டான் அப்புலிங்கம். உஸ்தாத் அப்பொழுதுதான் என்ன சொல்வதற்கு இருந்தோம் என்பதை உணர்ந்தார். கொஞ்சம் நிதானித்துக் கொண்டார்.



"ஒன்றுமில்லை. நாகரத்தினம் நம்முடைய சிஷ்யன்தானே!" என்று சொல்லியவண்ணம் சிரிப்பை வரவழைத்துக் கொண்டார். ஆனாலும் அப்புலிங்கம் அவர் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். வழக்கமான சிரிப்பு இல்லை அது! அதில் ஏதோ ஒரு வேதனை இருந்தது.

"சரி, உஸ்தாத்! உங்களுக்கு இப்பொழுது வரச் சௌகரியம் இல்லையென்றால், நாளைக்கு வாருங்கள். பரவாயில்லை. நான் புறப்படுகிறேன். அப்படியே உங்களையும் உங்கள் வீட்டிலே கொண்டு போய் விட்டு விட்டுச் செல்கிறேன்!" என்றான் அப்புலிங்கம்.

"சுக்ரியா பாயி!" என்று சொல்லிச் சிரித்தார் உஸ்தாத். ஏதோ யோசித்த வண்ணம் தொடர்ந்து சொன்னார்:

"இன்றைக்கு ஒரு நாள் உன்னுடைய காரிலே வீட்டுக்குப் போய், விட்டால் போதுமா? தினமும் நான் வீடு போய்ச் சேர்வதற்கு ஒரு கார் கொடு. அந்தச் சமயத்தில் ஏறிக் கொள்கிறேன். இப்பொழுது நீ கொடுக்கிற கார் எலெக்ஷனில் ஓட் போடச் சொல்லிக் கூப்பிட்டு வருகிற கார் மாதிரி, தம்பீ!"

"உஸ்தாதுக்கு இல்லாத காரா? உங்களுக்கு என்றே ஒரு கார் தருகிறேன். இது என்ன பிரமாதம்!" என்றான் அப்புலிங்கம்.

"வேடிக்கைக்குச் சொன்னேன், தம்பி. நமக்கெல்லாம் கார் ஒத்து வராது. காரிலே சவாரி செய்ய ஆரம்பித்து விட்டால், பிறகு கால் சொன்னபடி கேளாது, தெரியுமா? எனக்கு என்றே தனியாக ஒரு கார் தேவைப்படுகிற அளவுக்குக் கலகம் முற்றக் கூடும். சம்பவங்கள் அப்படி நடக்கின்றன. எனவே, அந்தச் சமயத்தில் பார்த்துக் கொள்ளுவோம்" என்று சொல்லிக் கொண்டே சிரித்தார் மீரான். இப்பொழுதும் அவருடைய முகத்தைக் கூர்ந்து பார்த்தான் அப்புலிங்கம். அந்தச் சிரிப்பு இதயத்திலிருந்து பொங்கிக் கொண்டு வரவில்லை. ஏதோ ஒரு வேதனை உள்ளத்தின் ஆழத்திலிருந்து அந்தச் சிரிப்புக்கும் மேலே வந்து பாசி போல் படர்ந்திருந்தது.

"உஸ்தாத்! அப்படியானால் நான் வருகிறேன். ஏதோ உங்கள் மனம் இப்பொழுது சரியாக இல்லை என்று சொன்னீர்கள். வீட்டுக்குச் சென்று கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். என்னிடம் சொல்லக் கூடிய விஷயம் எதுவும் இருந்தால், தாராளமாகச் சொல்லலாம்—" என்றான் அப்புலிங்கம்.


"தம்பி! நீ இத்தனை தூரம் அலைந்து வந்து என்னைப் பார்த்ததால், ஏதோ குழப்பத்தையெல்லாம் அடக்கிக் கொண்டு பேசுகிறேன். மற்றப்படி உள்ளே ஒன்று வேதனை செய்து கொண்டிருக்கிறது. ஆனால் அந்த வேதனை கூடாது. காஜியார் பேச்சுக்கு மறு பேச்சு இல்லை. அவர் சொல்லிமுடித்த பிறகு நான் அது விஷயமாக வேதனைப் படக்கூடாது. என்றாலும் இந்த மனசு இருக்கிறதே இது ஒரு சைத்தான். இந்தச் சைத்தானை அல்லாஹ் பேர் சொல்லித்தான் அடக்க வேண்டும். சிலம்பத்துக்கெல்லாம் பயப்படாது இது!"

அப்புலிங்கத்துக்கு உஸ்தாதின் மனக் குழப்பம் இப்பொழுது தெளிவாகத்

தெரிந்தது. ஏதோ மிகவும் சொந்தமான அந்தரங்க விஷயம்போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டான்.

"அப்பு, அப்படியானால் நீ புறப்படு. சௌகரியப் பட்டால் நானே ராத்திரி நம்முடைய வீட்டுப் பக்கம் வந்து சேர். உனக்குத் தெரியாத ரகசியம் ஏது? ஒரு சிக்கலான விஷயமாக உன்னிடம் ஆலோசனை செய்ய வேண்டும்; தெரிந்ததா?"

"சரி உஸ்தாத்!" என்றான் அப்புலிங்கம்.



"நாகரத்தினத்தைப் பற்றிக் கவலைப்படாதே. ஒரு கை பார்த்து விடுவோம். ஆனால் ஒரு சிறு எச்சரிக்கை செய்து வைக்கிறேன். நாகரத்தினம் சாதாரணப் போக்கிரி இல்லை. முறை கெட்ட போக்கிரி அவன். தான் எண்ணியதை முடிப்பதற்கு என்ன வேண்டுமானாலும் செய்வான். பணவசதி வேறு இருக்கிறதல்லவா!" என்றார் உஸ்தாத். அப்புலிங்கம் ஒன்றுமே பதில் பேசவில்லை. உஸ்தாத் மறுபடியும் சொன்னார்.

"அப்பு, போக்கிரிகளிலும் இரண்டு வகை உண்டு. சில போக்கிரிகள் முழுக்க முழுக்க முறை கெட்டுப் போவார்கள். சிலர் வம்புத்தனத்திலும் ஒரு முறையோடு தான் போவார்கள்—நம்மை மாதிரி என்று வைத்துக் கொள்ளேன்!" என்று சொல்லிச் சிரித்தார் மீரான். அதுவும் பழைய சிரிப்பைப் போலவேதான் இருந்தது. மணிக்கூண்டுக் கடிகாரத்தில் சில சமயங்களில் ஏதோ பழுது ஏற்படும்போது, இரண்டு மூன்றும் பிடிப்பு இல்லாமல் 'கிர்' என்று சுழன்று சுற்றும். அப்படிப் பிடிப்பில்லாத சுழல் சிரிப்பாக இருந்தது அது.

"உஸ்தாத்! என்னை மன்னியுங்கள். உங்கள் சிரிப்பையும் பேச்சையும் மீறி ஏதோ ஒரு வேதனை மனசைக் கஷ்டப்படுத்துகிறது. இத்தனை நேரம் நானும் வேறு வந்து தொந்தரவு கொடுத்து விட்டேன். தவறுதான். உங்களுடைய பெருந்தன்மையினால் என்னோடு நின்று பேசுகிறீர்கள். மற்றப்படி மனசுக்குள் அளவு கடந்த துன்பம் இருப்பது தெரிகிறது. நான் புறப்படுகிறேன். நானே இரவு உங்களை வந்து சந்திக்கிறேன்!"

இவ்வாறு சொல்லி விட்டு அப்புலிங்கம் காரிலே ஏறிக் கொண்டு மலைக் கோட்டையை நோக்கிப் புறப்பட்டான். அவன் சென்ற ஐந்து நிமிஷத்துக் கெல்லாம் மீரான் ஆமினாவை அழைத்துக் கொண்டு மசூதிக்கு அருகிலே இருந்த ஒரு சிறிய குறுகலான வீதியின் வழியாக வீடு நோக்கி நடந்தார். வழியெல்லாம் ஒரே மௌனம்தான். மகளோடு ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. உள்ளம் முழுதும் குழப்பமும் வேதனையும் பின்னிச் சுருண்டன.

மதம் கொண்ட யானை எங்கெங்கோ சென்று முட்டி மோதிவிட்டுக் கடைசியில் ஏதோ ஒரு விவரிக்க முடியாத சோர்வோடு மீளுமே, அப்படி யிருந்தது மீரானுடைய நிலை.

பல ஆண்டுகளுக்கு முன்பு மீரான் ஒரு கருப்புப் பூனை வாங்கினார். அதை வாங்குவதற்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது. குஸ்தியிலே போட்டி போட்டுக் "கை கொடுக்கும்" எதிரியின் ஆட்கள், ஐந்தாம் படை வேலையும் செய்வதுண்டு. வெளியிலிருந்து ஏதாவது சாப்பிடக் கொண்டு கொடுத்தால், விஷச் சத்தைக் கலந்து கொடுத்து விடுவார்கள். கையையும் காலையும் முடக்கி விடும் அது! மீரான் இதை உத்தேசித்துத்தான் பூனை வாங்கினார். தான் எது சாப்பிட்டாலும் முதலில் அதற்குக் கொடுத்து விட்டுத்தான் பிறகு சாப்பிடுவார். பால் குடிப்பதற்கு முன்னால் முதலில் அந்தப் பூனை ஒரு வாய் குடிக்கும். பதினைந்து நிமிஷம் கழித்துத்தான் மீரான் மீதிப் பாலைக் குடிப்பார். ஆனால் நாளாக நாளாக அந்தப் பூனையிடம் பிரியம் அதிகமாகி விட்டது. பூனைக்குக் கொடுக்கிற ஆகாரத்தைத் தான் முதலிலே ருசி பார்த்து விட்டுப் பிறகுதான் அதற்குக் கொடுப்பார்! அத்தனை பிரியம் உண்டாகி விட்டது. ஆனால் அதுவும் இப்படித்தான் ஒரு நாள் வீட்டை விட்டு ஓடியது. அப்பொழுது அவர் மனைவி எத்தனை துடியாகத் துடித்தாள்?......இப்போது அவள் மட்டும் உயிரோடிருந்தால்......!

அப்புலிங்கத்தின் மனமும் குழப்பத்திலேதான் இருந்தது. உதவிக்குப் போன இடத்தில், மீரானுடைய மன நிலையைக் கண்டு அவன் வேதனைப்பட்டான். எதற்கும் அஞ்சாத தீரன் இப்படிக் குழம்பிப் போக வேண்டுமானால், காரணம் மிக மிகப் பெரிதாகத்தான் இருக்க வேண்டும் என்று அப்புலிங்கம் யோசித்தான்.

மௌனமாக வீடு நோக்கி விரைந்த மீரானுக்கு அங்கேயும் ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. வீட்டுக்குள்ளே அடியெடுத்து வைத்ததும் அப்படியே ஸ்தம்பித்து விட்டார்! திண்ணையில் நாகரத்தினமும் குப்புசாமியும் மிக்க ஆவலோடு உஸ்தாதின் வரவுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள்!

(தொடரும்)

8-7-55 வெள்ளிக்கிழமை முதல்

சென்னை ஸ்டாரில்

குதூகல ஆரம்பம்

பார்ப்போர் இதயங்களைக் கவரும் உன்னதமான படம்

பிலிமிஸ்தாரின் மகோன்னத தயாரிப்பு

ஜாக்ரிதி (ஹிந்தி)

JAGRITI (HINDI)

நடிகர்கள் :

★ ரத்தன் குமார்

★ அபி பட்டாச்சார்யா

★ பிரணோதி கோஷ்

★ ராஜ்குமார் குப்தா

டைரக்ஷன் :

ஸத்யன் போஸ்

ஸங்கீதம் :

ஹேமந்த் குமார்


தினசரி 3 காட்சிகள்

3-15, 6-30, 9-30 மணிக்கு

இப்பொழுது

பம்பாய் நாஸ் தியேட்டரில்

22வது வாரம் நடைபெறுகிறது



வெளியிடுவோர்கள்

பிலிமிஸ்தான் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் (இந்தியா) லிட்.


நீங்கள் போகுமிட மெல்லாம்

கோடக்


ஸ்னப்ஷாட்டுகளுக்கு அருமையான சந்தர்ப்பம் கிடைக்கும்

என்ன கூத்தும் கும்மாளமுமாயிருந்தது அந்த பிக்னிக்! அச்சந்தர்ப்பத்தில் எடுத்த 'கோடக்' ஸ்னப்புகள் மூலம் அந்த இன்பத்தை மீண்டும் நினைத்த போதெல்லாம் நீங்கள் பருகமுடியும் என்பது வியக்கத்தக்கதே—வெளியே எங்கு போவதாயினும் உங்கள் காமிராவையும் கூடவே எடுத்துச் செல்லுங்கள். கூட, ஞாபகமாக 'கோடக்' பிலிம் ரோல்களும் போதிய அளவு கையிலிருக்கட்டும்.






வெரிக்ரோம்: வெளிக்காட்சிகளே சகஜமான வெளிச்சத்தில் எந்த காமிராவைக் கொண்டும் எடுப்பதற்கு உகந்த பிலிம் இது.



ப்ளஸ் – X : விளக்கமான பெரிய என்லார்ஜ்மெண்டுகள் தரவல்ல தெளிவான படங்கள் எடுப்பதற்கு மிகச்சிறந்தது.



சூப்பர் – X X : துரிதமான செயல் காட்சிகளுக்கும், மங்கிய வெளிச்சத்தில் அல்லது வீட்டினுள் படம்பிடிக்கவும் இணையற்றது.

ஒவ்வொரு வகைப் படத்திற்கும் உகந்த ஒரு 'கோடக்' பிலிம் கிடைக்கும்.


கோடக் லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)
பம்பாய் - கல்கத்தா - டில்லி
மதராஸ்

K 404

பாப்பா மலர்

சிறுத்தையின் பசி

சீதா





கந்தன் ஒரு விவசாயி. நாள் எல்லாம் வயலில் உழைத்துப் பாடுபடுபவன். கிழக்கே சூரியன் உதிப்பதற்கு முன் புறப்பட்டு வயலுக்குப் போய் விடுவான். சாயங்காலம் சூரியன் மறைந்த பிறகு தான் அவன் வீட்டுக்குத் திரும்புவான்.

வயலுக்குக் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்தல், களை பிடுங்குதல், நாற்று நடுதல், வரப்பு கட்டுதல்—இப்படி நாள் எல்லாம் அவனுக்கு வேலையிருக்கும். ஏன், வருஷம் பூராவுமே வேலை யிருக்கும்.

அவன் மனைவி குப்பச்சி ரொம்பவும் கெட்டிக்காரி. அவள் தான் வீட்டு வேலைகளை யெல்லாம் பராமரித்து வந்தாள். கந்தன் ஐந்து ஆடுகள் வாங்கி யிருந்தான். அவற்றைக் குப்பச்சிதான் வளர்த்துப் பராமரித்து வந்தாள். ஆடுகளை மேய்க்க ஓட்டிச் செல்வது, பால் கறப்பது, கறந்த பாலை விற்பது ஆகிய எல்லாக் காரியங்களையும் அவள்தான் பார்த்து வந்தாள். அத்துடன் மத்தியானமானால் தலையில் கஞ்சிக் கலயம் வைத்துக் கொண்டு, வயலுக்குச் சென்று கந்தனுக்குச் சாப்பாடு பண்ணி வைத்து விட்டு வருவாள். குப்பச்சி கையால் போடும் சோறு அவனுக்குக் கற்கண்டு போலிருக்கும். கந்தனுக்கும், தன் மனைவி ரொம்பக் கெட்டிக்காரி என்ற பெருமை யுண்டு.

* * *



ஒரு நாள் கந்தன் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது திடீர் என்று ஒரு சிறுத்தைப் புலி வந்தது. அதைப் பார்த்ததும் கந்தன் நடுநடுங்கிப் போனான். கை கால்கள் எல்லாம் வெட வெட வென்று நடுங்கத் தொடங்கின. யாரையாகிலும் உதவிக்குக் கூப்பிடலாம் என்றால் கூட முடியாமல் தொண்டை அடைத்துக் கொண்டு விட்டது. குரல் வெளி வரவில்லை. அப்போது ஒரு அதிசயம் நிகழ்ந்தது.

சிறுத்தைப் புலி மனிதக் குரலில் பேசத் தொடங்கியது. "பயப்படாதே! உன்னிடம் ஆடுகள் இருக்கின்றன அல்லவா?" என்று கேட்டது.

கந்தன் "ஆமாம்!" என்றான்.

"எத்தனை?" என்று கேட்டது.


"ஐந்து!"

"எனக்கு இப்போது ரொம்பவும் பசியாக இருக்கிறது. ஐந்து ஆடுகளில் மூன்று எனக்குக் கொடுத்து விடு. இல்லை என்றால் உன்னைக் கொன்று விடுவேன்!" என்று பயமுறுத்தியது.

கந்தன் என்ன செய்வான், பாவம்! "சரி, மூன்று ஆடுகளைக் கொண்டு வருகிறேன். இங்கேயே இரு" என்று சொல்லி விட்டு வீட்டுக்குப் போனான்.

வீட்டுக் கொட்டிலில் கட்டியிருந்த ஆடுகளில் மூன்றைப் பற்றிக் கொண்டு போனான். வீட்டுக்குள் வேலையாயிருந்த குப்பச்சி கொட்டிலில் ஏதோ சத்தம் கேட்டு வெளியில் வந்து எட்டிப் பார்த்தாள். கந்தன் மூன்று ஆடுகளை எங்கேயோ ஓட்டிக் கொண்டு போவதைப் பார்த்தாள்.

"இந்த ஆடுகளை எங்கே ஓட்டிக் கொண்டு போகிறீர்கள்?" என்று பலமான குரலில் கேட்டாள்.



கழுதையின் உருவத்தைத் திருப்பிப் பாருங்கள். இனி உருவம் தெரியும்!

கந்தன், வயலுக்குச் சிறுத்தைப் புலி வந்திருக்கிற செய்தியைச் சொன்னான்.


அதைக் கேட்ட குப்பச்சி, "இந்த ஆடுகள் இன்னும் ஆகாரம் தின்னவில்லை. அவை தின்று முடிந்ததும் ஆட்டிடையச் சிறுவன் மூன்று ஆடுகளையும் ஓட்டிக் கொண்டு வருவான். அதுவரை சற்றுப் பொறுக்கச்சொல்லுங்கள், அந்தச் சிறுத்தைப் புலியை. அப்புறம் இன்னொரு விஷயம்: தூரத்தே எவனாவது குதிரை மீது சவாரி செய்து கொண்டு கையில் கூரிய வேல் ஏந்திக் கொண்டு வருவானானால் அவன் ஒரு பெரிய சிறுத்தை வேட்டைக்காரன் என்று சொல்லி, அந்தச் சிறுத்தையை எச்சரிக்கை செய்து ஒளிந்து கொள்ளச் சொல்லுங்கள்" என்றாள்.

அப்படியே கந்தன் போய், சிறுத்தையினிடம் ஆடுகள் தீனி தின்று, விட்டு வந்து விடும் என்றும், அது வரை சற்றுப் பொறுக்கும்படியும் சொன்னான்.

"நான் பத்து நிமிஷம்தான் பொறுப்பேன். அதற்குமேல் பொறுக்க முடியாது! அதற்கு மேலும் தாமதித்தால் உன்னைக் கொன்று விடுவேன்!" என்று பயமுறுத்தியது சிறுத்தை.

அப்படியே கந்தன் நடுங்கினான். ஆடுகளை ஆட்டிடையன் ஓட்டிக் கொண்டு வருவதாகத் தெரியவில்லை. ஒவ்வொரு நிமிஷமும் அவன் உயிர் போய்க் கொண்டேயிருந்தது. ஆட்டிடையன் ஆடுகளை ஓட்டிக் கொண்டு வருகிறானா என்று தன் வீடு இருந்த பக்கமே நோக்கிக் கொண்டிருந்தான்.

அப்போது அவனுக்குப் பின்புறமிருந்து டக் டக் என்று குதிரைக் காலடிச் சத்தம் கேட்டது. கந்தன் திரும்பிப் பார்த்தான். தூரத்தே வேட்டையுடை அணிந்திருந்த ஒரு வீரன் கையில் நீண்ட வேலைப் பிடித்துக் கொண்டு வந்து கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததுமே கந்தனுக்குத் தன் மனைவி கூறியது ஞாபகம் வந்து விட்டது. குதிரை மீது எவனாகிலும் வீரன் வந்தான் என்றால் அவன் ஒரு பெரிய வேட்டைக்காரன் என்று சிறுத்தையி



செங்கோட்டை பிரபல மிராசுதார் ஸ்ரீ இ. வெங்கடாசலமய்யர் அவர்களின் சகோதரரும், தி ப்ரீமியர் எலக்டிரிக் கம்பெனியின் அதிபருமான ஸ்ரீ இ. சுப்பிரமண்ய அய்யர் அவர்களின் புத்திரி சௌ பார்வதிக்கும் ராவ்பகதூர் ஸ்ரீ ராமசந்திரய்யர் அவர்களின் புதல்வர் ஸ்ரீ ஆர். நடராஜன் எம்.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ். (திண்டுக்கல் சப்-கலெக்டர்) அவர்களுக்கும் சென்ற ஜூன் மாதம் 2-ம் தேதி திருக்குற்றாலத்தில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. வாழ்க, மணமக்கள்!

னிடம் கூறி எச்சரிக்கை செய்யச் சொன்னாளே! அது அவன் நினைவுக்கு வந்தது. அடுத்த கணம் 'அடாடா, அந்த வேட்டைக்காரன் இந்தச் சிறுத்தையைத் தீர்த்துவிட்டால் பெரிய தொல்லையிலிருந்து விடுபடலாமே. ஏன், எச்சரிக்கை செய்யும்படி கூறினாள்!' என்று ரொம்பவும் வருத்தப்பட்டான். எனினும் தன் மனைவி குப்பச்சி கெட்டிக்காரி. அவள் யோசனைக்கு மாறாக நடக்கக் கூடாது என்று தீர்மானித்தான். அதனால் கந்தன், சிறுத்தைப் புலியினிடம், "இவன் ஒரு பெரிய வேட்டைக்காரன். புலி கரடிகளைத்தான் வேட்டையாடுவான். அதில் அவன் பெயரும் புகழும் பெற்றிருக்கிறான்" என்று கூறி எச்சரிக்கை செய்தான்.

அதைக் கேட்ட சிறுத்தை, "அப்படியானால் நான் ஒளிந்து கொள்ளுகிறேன்" என்று புதருக்குள் ஓடிற்று.

குதிரைமீது வந்த வீரன், கந்தனைப் பார்த்ததும் தன் குதிரையை நிறுத்தினான். "என்னப்பா, இந்தப் பக்கம் ஏதாகிலும் சிறுத்தைப் புலி ஓடிற்றா? நீ பார்த்தாயா? இங்கே சிறுத்தைப் புலி வாசனை வருகிறதே. நான் இது வரை இருபத்தி நாலு புலிகளைக் கொன்று விட்டேன். இருபத்தைந்தாவதைக் கொன்று விட்டேனானால் என் வாழ்க்கை லட்சியம் தீர்ந்து விடும். அந்த இருபத்தைந்தாவது சிறுத்தையை இன்று தேடிப் பிடித்துக் கொன்றே தீர்த்து விடுவது என்று இருக்கிறேன்!" என்று உரத்த குரலில் தன் வீரத்தை முழக்கச் சொன்னான்.

"இந்தப் பக்கம் ஒன்றும் சிறுத்தை வரவில்லையே!" என்று நடுங்கிக் கொண்டே பதில் கூறினான் கந்தன்.

"இங்கே வந்தாற்போல் தோன்றியது. இங்கே எங்கேயாகிலும் ஒளிந்து கொண்டிருக்கிறதா என்று நானே தேடுகிறேன்" என்று கூறி விட்டு டக்டக் என்று மேலே போனான்.

அவன் போனதும் புதரிலிருந்து வெளிப்பட்ட சிறுத்தை, "உன் ஆடுகள் வரும் வரை காத்திருந்தால் இந்த வேட்டைக்காரனிடம் நான் அகப்பட்டு உயிர் இழக்க வேண்டியதுதான். நான் போகிறேன்" என்று வேகமாகப் பாய்ந்து ஓடி மறைந்தது.

கந்தன் 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டான்.

* * *

மாலை வீட்டுக்குத் திரும்பிய கந்தன் தன் வீட்டு வாசலில் ஒரு குதிரை நிற்பதைப் பார்த்தான். அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. உள்ளே போனால் ஒரு வேலிருந்தது. பெட்டி மீது வேட்டைக்காரன் உடுப்பு இருந்தது! அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.


"இதெல்லாம் என்ன, குப்பச்சி?" என்று கேட்டான்.

குப்பச்சி, "உள்ளூர் நாடகக்காரரிடமிருந்து இந்த உடுப்புக்களை வாங்கி வந்து வேஷம் போட்டுக் கொண்டு நான் நான் வேட்டைக்காரனாக வந்து சிறுத்தையைப் பயமுறுத்தி விரட்டினேன்!" என்று கூறினாள்.

"என்ன நீயா வேட்டைக்காரனாக வந்தாய்! உன்னை நான் அடையாளமே கண்டு கொள்ள முடியவில்லையே!" என்று ஒரே ஆச்சரியத்தில் மூழ்கிப் போய்க் கூறினான் கந்தன்!

எப்படிக் குப்பச்சியின் தந்திரம்!

ஹாஸ்யக் களஞ்சியம்







"நான் எந்த மாம்பழம் வாங்கினாலும் புளிக்கிறது!"
"மகர ராசிக் காரர்களுக்கு இந்த மாதம் எந்த மாம்பழம் வாங்கினாலும் புளிக்கும் என்று ராசி பலனில் போட்டிருக்கிறது!"



"கூட்டத்தில் நடுவில் இருப்பவன் பைத்தியக் காரனோ?"
"இல்லை சுற்றி நிற்பவர்கள்தான்."



"சரசுவின் கணவருக்கு இப்பொழுது உத்தியோகம் கிடைச்சிருக்காமே! பெரிய உத்தியோகமாமே."
"ஆமாம்! முன்பெல்லாம் வீட்டில் வேலை இல்லாமல் இருந்தார். இப்பொழுது ஆபீசில் வேலை இல்லாமல் இருக்கிறார்."



சாமா
"டாக்டர் சார், எனக்கு இரண்டு வருஷமா 'ஆஸ்த்துமா' இருக்கு!"
"அதென்ன பிரமாதம் எனக்குப் பத்து வருஷமா 'ஆஸ்த்துமா' இருக்கு!"
அடி! பத்மா! பள்ளிக்கூடம் வந்து விட்டோமா சொல்லுடி!
என்ன செய்கிறது? என் பையன் எதற்கும் நேர் மாறுதலாக இருக்கிறான்!
உன் பாடு, என் பாடு என்று காலேஜ் அட்மிஷனுக்கு 'மாலடோவி'டமிருந்து சிபாரிசுக் கடிதம் வாங்கி விட்டேன்
நீங்கள் தேவலை. என் துர் அதிர்ஷ்டம் 'ஸ்டாலின்' போய் விட்டார். அவரை எனக்கு நன்றாகத் தெரியும்.
இந்தாங்க மசால் தோசை.
சாப்பிட்டு முடிகிற வரையிலும் பிளேட்டைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று நான் தான் அப்பவே சொன்னேனே!

மகத்தான விலைக் குறைவு

மிகவும் நவீனமான
1955 ஸ்பெஷல் மாடல்கள்

நேர்த்தியான உயர் ரக மிஷின்&டிசைன் : ஒவ்வொன்றும் 3 வருஷ உத்தரவாதம்


இனாம் : ஏதாவது மூன்று கடிகாரங்கள் வாங்குபவருக்கு ஒரு கைக்கடிகாரமும் இரண்டு கடிகாரங்கள் ஆர்டருக்கு ஒரு பாக்கெட் கெடிகாரமும் ஒரு கடிகார ஆர்டருக்கு ஒரு கோல்டு கேப் பவுண்டன் பேனாவும் இலவசம்



No. 1181 **10½ Size**

WATERPROOF

15	ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	ரூ. 36
17	ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	40
17	ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	54
21	ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	50
21	ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	64



No. 1183 7½ Size Curved Shape !

15	ஜுவல்ஸ் பிரைட்-க்ரோம்	ரூ. 32
15	ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	38
15	ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு (லீவர்)	63



No 1185 10½ Size Flat Shape

5	ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	ரூ. 18
5	ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு C/S	21
15	ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	28
17	ஜுவல்ஸ் க்ரோம் கேஸ்	37
17	ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	42




No. 1186 5¼ Size Ladies

15	ஜுவல்ஸ் பின் லீவர் ரோ. கோ.	ரூ. 45
17	ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	48
17	ஜுவல்ஸ் ரோ. கோ. (20 மைக்.)	65
21	ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	68




No. 1182 **8¾ Size**

15	ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	ரூ. 40
17	ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	44
17	ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	54
21	ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	58
21	ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	68



No. 1184 7½ Size Tonneau

15	ஜுவல்ஸ் பிரைட்-க்ரோம்	ரூ. 34
15	ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	40
15	ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு (லீவர்)	65



அலாரம் டைம் பீஸ்	ரூ. 13
உயர் ரக டைம் பீஸ்	15

பாக்கெட் கடிகாரம்

சாதா டயல்	ரூ. 9
ரேடியம்	11
15 ஜுவல்ஸ்	27
15 ஜுவல்ஸ் பெரியது	32

PIONEER WATCH CO. **P.O. BOX No. 11428, CALCUTTA-6**

ஆரோக்கிய வாழ்வு

சீதாலக்ஷ்மி குமாரசாமி

25. காலரிகள்

மனிதனுக்கு வேண்டிய உணவின் அளவைக் காலரிகளாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள். இன்ன உணவு இவ்வளவு சக்தி, அதாவது காலரிகள் தரக் கூடியவை என்று கணக்கு உண்டு. சில பொருள்கள் அளவில் குறைந்து இருக்கலாம். ஆனால் சக்தியில்—காலரி கணக்கில் அதிகமாய் இருக்கலாம். இவைகளுக்கு உதாரணமாக நெய், இனிப்பு இவைகளைச் சொல்லலாம். சில உணவுப் பொருள்கள் அளவில் அதிகமிருக்கலாம். ஆனால் சக்தி காலரி கணக்கில் குறைந்திருக்கலாம். உதாரணமாக முட்டைகோஸ், வெள்ளரி, காரட் வகைகளைச் சொல்லலாம். தானிய வகைகள் நடுத்தர வகையைச் சார்ந்தவை.

நமது இந்திய சராசரி எடை ஆண்களுக்கு 120 ராத்தலும், பெண்களுக்கு 100 ராத்தலும் உண்டு. 120 ராத்தல் எடையுள்ள ஆண்களுக்கு, உடல் உழைப்பு அதிகம் இல்லாதவர்களுக்குத் தினசரி அவர்களுக்கு வேண்டிய காலரிகள் 2400. சற்று உடல் உழைப்பு உள்ளவர்களுக்கு 3000 காலரிகள் வேண்டும். அதிகமாய்க் கஷ்டப்பட்டு உடல் உழைப்பு செய்பவர்களுக்கு 3600 காலரிகள் தேவைப்படும்.

100 ராத்தல் எடையுள்ள பெண்களுக்கு, உடல் உழைப்பு இல்லாதவர்களுக்கு 2100 காலரிகள் தேவை. சிறிது இலேசாக உழைப்பு உள்ளவர்களுக்கு 2500 காலரிகள் வேண்டும். அதிக உழைப்பு உள்ளவர்களுக்கு 3000 காலரிகள் வேண்டும்.

உடல் எடைக்குத் தக்கவாறு காலரிகளின் எண்ணிக்கை மாறுபடும். அமெரிக்காவில் ஒரு யந்திரம் இருக்கிறதாம். அதில் ஒருவர் நின்றால் எடை போடும் யந்திரம் எடை காட்டுவது போல, நமக்கு எவ்வளவு காலரிகள் தேவை என்பதைக் காட்டுகின்றதாம். எந்தெந்த உடலுக்கு எவ்வளவு காலரிகள் வேண்டுமோ, அவை நாம் உண்ணும் உணவின் மூலம் கிடைத்தால்தான் ஆரோக்கியமாய் இருக்க முடியும்.

அதிக உழைப்பு இருந்து குறைந்த காலரிகளை உட்கொள்ளுவதும் தீங்கு. உழைப்பில்லாமல் பாதாம் ஹல்வா, கேக்குகள், குலாப்ஜாமூனைச் சாப்பிடுவதும் தீங்கு. இன்று நமது நாட்டில் மேற்படி இரண்டு காட்சிகளையும் காணலாம். உடல் உழைப்பு செய்பவர்களுக்குப் போதிய காலரிகள் கிடைக்காமல் வாடி நோய்களுக்கு இரையாகின்றார்கள் ஒரு பக்கம். அதிகக் காலரிகளால் உடலைக் கெடுத்து மருந்தின் துணை கொண்டு வாழ்கிறார்கள். இதில் இரு தரத்தாரும் தவறு செய்கிறார்கள். கிடைத்த உணவை, உணவு ஞானத்துடன் உபயோகிக்கத்தெரியாமல் ஏழைகள் சத்தைச் சாகடித்துச் சாப்பிடுகின்றனர். பணக்காரர்கள் உணவின் சத்தை இழந்தாலும் மற்றும் கொழுப்பு, சர்க்கரைப் பண்டங்களால் கொழுக்கிறார்கள். கடைசியில் இருவரும் நோய்களின் எல்லையில் சந்திக்கின்றனர். அங்கு மருந்துகள் பல நாடப்படுகின்றன.

இன்றுள்ள மிகப் பெரிய பிரச்னைகளில் இந்த உணவுப் பிரச்னையும் ஒன்று. ஒவ்வொருவரும் அவரவர்களுக்கு வேண்டிய காலரிகளைப் பெறுகிறார்களா? சமையல் என்னும் பெயரால் எத்தனை காலரிகளை வீணாக்கி விடுகின்றனர்! இதனை மக்கள் உணர்கிறார்களா! பொது ஜனங்கள் உணவு ஞானம் அடையாதவரை என்னதான் உணவைப் பெருக்கினாலும் பிரயோசனமில்லை. நமது நாட்டில் உணவுப் பிரச்னை தீர்ந்து விட்டது. உணவுப் பற்றாக்குறை என்பதைத் தீவிர முயற்சிகளினால் ஒரு வகையாய்ச் சமாளித்து விட்டோம். நமது நாட்டிலிருந்தும் மற்ற நாடுகளுக்கு அனுப்பும் நிலையிலுள்ளோம் என்பதைப் பத்திரிகைகளில் பார்க்கும் போது மனம் பெருமிதம் தான் அடைகிறது. ஆனால் உண்மை நிலை கண்களின் முன் காட்சி அளிக்கும்போது படித்த செய்திகள் மறந்து மனம் தயக்கம் அடைகிறது.

"தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்"

என்றார் பாரதியார். ஆனால் அவர் இதைப் பாடிய போது வைட்டமின் சத்துக்கள், தாதுப் பொருள்கள், காலரிகள் முதலியவைகளை நினைத்துப் பாடியிருக்க மாட்டார் என்பது நிச்சயம். ஒருவனுக்குப் பசிப்பது இயற்கை. அதைச் சமாளிக்க முடியவில்லையானால் யார் மேல் பழியைப் போட்டு யாது பயன்! அதனால் உலகையே அழித்து விடுவோம் என்று தன் உணர்வின் எல்லையையே மீறி விட்டார் பாரதியார்.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக உலகியற்றியான்"

என்று வள்ளுவர் வரம்பு கூறி விட்டார். உலகை உண்டாக்கும் படைப்புக் கடவுளையே 'அழிக' என்று அறுதியிட்டுக் கூறிவிட்டார். பசியின் கொடுமையைக் காணச் சகிக்காமல் என்னதான் கூற மாட்டார்கள்!

இவ்விரு பெரியார்களும் கண்ட காட்சிகள் இன்னமும் நம்மிடையே காணத்தான் செய்கின்றோம். தான் சம்பாதிக்கும் ஊதியம் தன் ஒருவனுக்கே நல்ல சத்துள்ள உணவைச் சாப்பிட்டு வாழப் போதாது. ஆனால் அவ் ஊதியம் கொண்டு வீட்டு வாடகை கொடுத்து, தன் மனைவி, மக்கள், சுற்றமுடன் வாழவேண்டியிருக்கிறது. இவர்கள் வயிறார ஒரு வேளை உணவுகூட உண்டு அறிய மாட்டார்கள். இந்நிலை எங்கும் காணலாம். நூற்றுக்கு எழுபத்திஐந்து பேர்கள் இன்று நம் நாட்டில் இந்நிலையில்தான் உள்ளவர்கள் என்று சொன்னால் அது சிறிதும் மிகையாகாது.

சர்க்கார் தரும் புள்ளி விவரங்களைப் பார்த்துத் திருப்தி அடையலாமே அன்றி, உண்மை நிலை கண்முன் காட்சி அளிக்கிறது. ஒரு நாளைக்கு ஒருவருக்கு வேண்டிய உணவின் அளவு.

தானியங்கள்	14	அவுன்ஸ்
காய்கறி	10	,,
எண்ணெய் அல்லது கொழுப்பு	2	,,
பால்	10	,,
பயறு வகைகள்	3	,,
பழம்	4	,,
சர்க்கரை	2	,,

இவைகளெல்லாம் சேர்ந்தால் சுமார் 2800 காலரிகள் ஆகும். இந்த உணவுகளைச் சக்தி இழக்காமல் சமைத்தால்தான் மேற்சொன்ன காலரிகள் பெற முடியும். அரிப்பதிலும், கழுவுவதிலும், வேக வைப்பதிலும், வேக வைத்த ஜலத்தைக் கீழே கொட்டி விடுவதிலும் பல வைடமின்கள், தாதுப் பொருள்கள் வீணாகி விடுகின்றன. பிறகு மிகுந்தது சக்கை. அதிலும் காலரிகள் இருந்தாலும் உடலுக்கு வேண்டிய வைடமின்கள், தாதுப் பொருள்கள் கிடைக்காததினால் மறுபடியும் நோய்களுக்கு இரையாகும்படியான நிலைமையே ஏற்படுகின்றது.

மேற்சொன்ன அளவில் உள்ள உணவுப் பொருள்களை மூன்று வேளைகளாகப் பங்கிட்டுக் காலையில் இலேசாகவும், பகலில் நிறையவும், இரவில் இலேசாகவும் சாப்பிட வேண்டும். ஒருவன் ஆரோக்கியமாய் இருக்க மேற்படி உணவு வகைகள் அவசியம் வேண்டும். ஆனால் அரசாங்கப் புள்ளி விவரப்படி மக்களுக்குக் கிடைத்தது என்ன என்று பார்ப்போம்.

தானியம்	13·8	அவுன்ஸ்
காய்கறி	1·0	,,
எண்ணெய்	·29	,,
பால்	5·0	,,
பயறு	2·1	,,
பழம்	1·8	,,
சர்க்கரை	2	,,

இது சராசரி கணக்கின் தன்மை. இதிலுள்ள கணக்குப்படி ஏழைகள் ஒரு நாள்கூட சாப்பிட்டு அறியார்கள். பாலுக்கு எங்கு போவார்கள்! பழம் வாங்கப் பணம் ஏது! பயறுகள்தான் அமாவாசைக்கு அமாவாசை ஆயிற்றே! அளவுக்கு மீறிச் செலவு செய்பவர்களையும், இவர்களையும் கணக்கிட்டுச் சரிசமமான கணக்கெடுத்திருக்கிறார்கள். இப்பட்டியல்படி உண்மையைச் சிறிது ஒத்துக்கொள்ளக் கூடியது, தானிய வகையில்தான். தானிய வகையிலும் சத்துண்டு. ஆனால் அது ஒன்று மட்டும் போதாது. மற்ற ஏனையப் பொருள்கள் கிடைத்தால்தான் ஆரோக்கியமாய் வாழ முடியும். இரண்டையும் பார்வையிட்டால் பற்றாக் குறை மற்றவைகளில் எவ்வளவு என்பது தெரியும். இப் பற்றாக்குறை எப்பொழுது நீங்கி எல்லோருக்கும் நல்ல உணவு கிடைக்கின்றதோ, அப்பொழுதுதான் மக்கள் ஆரோக்கிய வாழ்வு எய்த முடியும். அதுவரை சத்து மருந்துகளுக்காகப் பணம் செலவிட வேண்டியதுதான்; ஆஸ்பத்திரிகளின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டியதுதான்.

தானியத்தில் அரசாங்கம் பூரண கவனம் செலுத்தி வெற்றியும் கண்டு விட்டது. அதைப் போல மற்ற உணவு வகைகளிலும் கவனம் செலுத்தி உணவு பெருக்குவதோடல்லாமல் எல்லோரும் வாங்கும் அளவுக்குப் பால், பழம், சர்க்கரை, எண்ணெய், நெய் வகைகள், காய்கறிகள் ஆகியவைகளின் விலை குறைய ஏற்பாடு செய்ய வேண்டும். வெண்டைக்காய் விலை விசை ரூ. 0–8–0 என்றால் எப்படி வாங்குவது! தக்காளி விசை ரூ 1–8–0 என்றால் யார் வாங்க முடியும்! நெய் விலை விசை ரூ. 7–8–0 என்றால் கனவிலும் நினைக்க முடியுமா! எனவே எல்லோரும் எல்லாப் பொருள்களையும் அடையும் வண்ணம் இனி அரசாங்கம் திட்டம் வகுத்துப் பாடுபட வேண்டும்.

உணவு விஷயத்தில் நமக்குச் சுமார் இருபது வருடங்களுக்கு முன்பு என்ன கிடைத்து வந்ததோ அதேதான் இன்றும் கிடைக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. உணவுப் பெருக்கம் ஏற்பட்டிருப்பினும் மக்கள் பெருக்கம் இருபது வருஷத்துக்கு முன்பு விட மூன்றில் ஒரு பங்கு அதிகமாய் விட்டிருக்கின்றது. எனவே இனி வரும் ஜன சங்கியையும் எதிர்பார்த்துத் திட்டமிட்டால் தான் பத்து வருஷத்திலாவது உணவுப் பிரச்னையைச் சமாளிக்க முடியும். இல்லையானால் மீண்டும் முப்பது வருஷ நிலைமையே நம்முன் நிற்கும்.

100 கிராம் அல்லது மூன்றரை அவுன்ஸ் எடையுள்ள கீழ்க்கண்ட பொருள்களில் இருக்கக் கூடிய காலரிகளின் விவரம்:

சோளம் 355, மக்காசோளம் 342, ராகி 345, பச்சரிசி 351, புழுங்கல் அரிசி 349, கோதுமை 349, கடலை 361, உளுத்தம் பருப்பு 350, மொச்சை 347, காராமணி 327, பச்சைப்பயிறு 334, கொள்ளு 322, துவரம் பருப்பு 333, சோயா பீன்ஸ் 432, அகத்தி 93, முளைக்கீரை 47, முட்டைகோஸ் 33, கொத்தமல்லி 45, முருங்கக்காய் 96, இலெட்டூஸ் 23, மணத்தக்காளி 68, புதினா 57, பார்லி 111, பொன்னாங்கண்ணி 84, பீட்ரூட் 47, காரட் 47, சிறு வெங்காயம் 61, பெரிய வெங்காயம் 51, உருளைக் கிழங்கு 99, சிவப்பு முள்ளங்கி 35, வெள்ளை முள்ளங்கி 21, வள்ளிக்கிழங்கு 132, மரவள்ளி 159, சேனை 79, சிறு கருணை 115, கீரைத் தண்டு 19, கல்யாண பூசனி 15, பாவக்காய் 25, சிறு பாவக்காய் 60, சொரக்காய் 13, சௌசௌ 29, வாழைக்காய் 66, வாழைத்தண்டு 42, கொத்தவரை 56, கத்திரிக்காய் 14, டபின் பீன்ஸ் 85, பலாப் பிஞ்சு 51, வெண்டைக்காய் 41, வெங்காயத் தண்டு 41, டர்னிப் 34, பரங்கிக்காய் 28, பாதாமி 655, முந்திரி 596, தேங்காய் 444, எள்ளு 564, கடலை 549, அக்ரூட் 687, பச்சை மிளகாய் 454, தனியா 288, சீரகம் 356, மிளகு 305, ஆப்பிள் 561, வாழைப் பழம் 153, பேரீச்சம் பழம் 283, திராட்சைப் பழம் 49, பலாப்பழம் 84, நாகப்பழம் 3, எலுமிச்சம் பழம் 59, ஆரஞ்சு 40, பைன் ஆப்பிள் 50, பிளம்ஸ் 40, தக்காளி 21, நூக்கோல் 30, முருங்கைக் கீரை 26, ஆட்டுக்கறி 194, மாட்டுக்கறி 114, முட்டை 173, மீன் 91, ஈரல் 150, பசும் பால் 65, எருமைப் பால் 117, மோர் 15, கோவா 421, வெல்லம் 383, இளநீர் 13.

உடைகளைக் களைந்து விட்டு, 'உஸ் அப்பாடா' என்று சிரமபரிகாரம் செய்த வாறே ஹாலின் நடுவே யிருந்த வட்ட மேஜையைச் சுற்றியுள்ள நாற்காலிகளில் ஒன்றில் சாய்ந்தார் சுந்தரேசன். மேஜை மேலிருந்த பூக்கிண்ணம் அவர் கண்களில் பட்டது.

"கோவிந்தா!" என்று அவர் குரல் கொடுத்தார்.

"எசமான்..." முன்புறத்து அலுவலக அறையில் 'பைல்' கட்டை வைத்துவிட்டு ஓடோடி வந்தான், கோவிந்தன்.

"ஏய், பூக்கிண்ணத்தைப் பார்த்தாயா? இன்னும் புதுப் பூ வைக்கவில்லையே!"

"ஹி...ஹி...இப்பொழுது தான் தோட் டத்துக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண் டிருந்தேன். ரோஜாப்பூ இப்பொழுதே கொண்டு வரேனுங்க!"

"போடா, சோம்பேறிப் பயலே!"

கோவிந்தன் நகர்ந்ததும் சமையற்காரர் குப்பு ஹாலுக்கு வந்தார். எவர்ஸில்வர் தட்டில் சிற்றுண்டியும் டவரா டம்ளரில் காப்பியும் அவருடன் வந்தன.

"இப்போ என்னய்யா, அவசரம்? இன் னும் கைகால் கூடக் கழுவவில்லை? காரியாலயத்திலே தான் குமாஸ்தாக்கள் தொல்லையென்றால் இங்கேயும் உங்கள் தொல்லையா?" என்று எரிந்து விழுந்தார்.

குப்புவுக்கு எஜமானரின் சுபாவம் நன்றாகத் தெரியும். வார்த்தைகள் நெருப் பாகக் கொதிக்குமே தவிர, இதயம் இத மானதுதான். மேலும், காரியாலயத்தில் அவருக்கு என்ன தொல்லைகளோ? அறு நூறு ரூபாய் சம்பளம் வாங்கும் மானே ஜர் என்றால், ஆனந்தமாகப் பொழுது போய் விடுகிறதா? சுந்தரேசனுக்கு மேலே, 'சீத சீதோஷ்ண' அறையில் சுகமாக அமர்ந்திருக்கும் துரை அவரை நெட்டி வாங்கிவிட மாட்டாரா?

குப்பு, கையில் சிற்றுண்டித் தட்டு கனக்கப் பல் இளித்தவாறே சிந்தனையில் ஆழ்ந்து விட்டார்.

"என்னய்யா நிற்கிறீர்? ... சரி, சரி, வைத்து விட்டுப் போம்!"

மேஜைமேல் சிற்றுண்டியையும் காப்பி யையும் வைத்துவிட்டுச் சமையலறைக்குச் சென்றார் குப்பு.

இரவுச் சாப்பாட்டுக்காகத் தயாரித்த வற்றை ஒழுங்காக எடுத்து வைத்திருக் கிறோமா என்று கடைசி முறையாக ஒரு தடவை சரி பார்த்துக் கொண்டார். ஒன்றுக்கொன்று கைக்கு எட்டாத தூரத் தில் வைத்து விட்டால், சாப்பிடும்போது தாமே எடுத்துப் போட்டுக் கொள்ளச் சுந்தரேசன் சிரமப்படுவார். தினந்தோ றும் குப்பு அவருக்கு உணவு பரிமாறிய பின்தான் வீட்டுக்குப் போவார். ஆனால் அன்று இரவு மட்டும் அவரேதான் பரிமாறிக் கொள்ள வேண்டும். காரணம், அன்று மாலை ஆறு மணிக்குமேல் லீவு கேட்டிருந்தார் குப்பு.

குப்பு ஹாலின் பக்கம் எட்டிப் பார்த் தார். காப்பி டம்ளரை மேஜைமேல் வைத்து விட்டு நாற்காலியில் சாய்ந்த சுந்தரேசனின் கண்கள் குப்புவைக் கவனித்தன.

"குப்பு..."

"...ஸார்!"

"சமையல் பண்ணி விட்டீரா?"

"அப்பவே முடித்து விட்டேன், ஸார்!"

"பலே! இன்று உமக்குச் சம்பளம் கொடுக்கனும். இல்லையா?"

இரு குழந்தைகள்



டி. எஸ். கோதண்டராமன்

"ஹி...ஹி...ஆமாம். போன வாரம் பத்து ரூபாய் வாங்கிக் கொண்டிருக் கிறேன்!" என்று இழுத்தார் குப்பு.

நாற்காலியி லிருந்து எழுந்து, தம் அறைக்குச் சென்று கையில் ரூபாய் நோட்டுக்களுடன் வந்தார், சுந்தரேசன்.


"இந்தாரும்!"

சம்பளத்தைப் பெற்றுக் கொண்டதும் குப்புவின் மனம் அளவில்லாத ஆனந்தம் அடைந்தது.

"எல்லாம் ஒழுங்காக எடுத்து வைத் திருக்கிறேன். வரட்டுமா, ஸார்?"

'உம்' என்று விடையளித்த சுந்தரேசன் மறுபடியும் நாற்காலியில் சாய்ந்து கொண் டார். அவருக்கு என்ன தோன்றியதோ, என்னவோ? வாசற்படியைத் தாண்டிக் கொண்டிருந்த குப்புவைத் திரும்பவும் தம்மிடம் அழைத்தார்.

"குப்பு,...உம்மை ஒன்று கேட்கிறேன். தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டீரே?"



லீவர் பிரதர்ஸின் சென்னைக் கிளையைச் சேர்ந்த ஸ்ரீ வி. வரதாச்சாரியாரின் புதல்வி சௌ. கனகவல்லிக்கும் தஞ்சை ஸ்ரீ வி. என். குப்புசுவாமி அய்யங்கார் அவர்களின் குமாரர் ஸ்ரீ வி. கே. சேஷாத்திரிக்கும் சென்ற 12—6—55 அன்று சென்னையில் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. வாழ்க மணமக்கள்!

"ஸார், ஸார்! என்ன இப்படிப் பேசுகிறீர்கள்? தாராளமாக என்ன வேண்டுமானாலும் கேளுங்கள், ஸார்..."

"ஆமாம், இவ்வளவு அவசரமாகப் போகிறீரே, அப்படி என்ன தலைபோகிற காரியம், வீட்டில்?"

"ஹி......ஹி......ஒன்றுமில்லை, ஸார்! இன்றைக்கு முதல் தேதி!"

"அதனால் என்ன? மாதா மாதம்தான் முதல் தேதி வருகிறது!"

"இன்றைக்கு வீட்டில் எல்லாரையும் அழைத்துக் கொண்டு சினிமாவுக்குப் போகப் போகிறேன்!"

"விசித்திரமா யிருக்கிறதே, உம்பேச்சு! சினிமாவுக்குப் போவதற்கும் முதல் தேதிக்கும் என்ன சம்பந்தம்? இன்னொரு நாள் போனால் போகிறது!"

"வந்து ஸார், இன்றைக்குச் சம்பளம் கொடுத்திருக்கிறீர்கள். நாளை வரை இந்தப் பணம் செலவழியாமல் இராது. மளிகைக் கணக்கு, வீட்டு வாடகை எல்லாம் கொடுக்க வேண்டாமா?... நாளை இந்நேரத்துக்குக் கைப்பணம் காலி! அப்புறம், அடுத்த மாதம் முதல் தேதி தான் பணத்தைப் பார்க்கலாம்! குழந்தைகளெல்லாம் சினிமாவுக்குப் போக வேணும் என்று ரொம்பவும் ஆசைப்படுகிறார்கள்!" என்றார் குப்பு.

'போய் வாரும்' என்ற மாதிரியில் சுந்தரேசன் தலையை அசைத்தார். ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கி நடந்தார் குப்பு.

சுந்தரேசனுக்குப் புரியவில்லை; புரியவும் புரியாது தான்! முதல் தேதிக்கும் சினிமாவுக்குப் போவதற்கும் என்ன சம்பந்தம்?

சுந்தரேசன், மார்க்கன் கம்பெனியில் விற்பனைப் பிரிவின் மானேஜர். பொருளாதாரப் பிரிவின் மானேஜராக இருந்திருந்தால், ஒரு வேளை, குப்புவின் பொருளாதார விளக்கம் அவருக்குப் புரிந்திருக்கலாம்!

சுந்தரேசனின் சிந்தனை எங்கோ சென்றது. அவருடைய காரியாலயத்தில் சிப்பந்திகள் சம்பளம் வாங்கும் தினத்தன்று எவ்வளவு களேபரமாக இருக்கும்! குறைந்த சம்பளம் வாங்கும் குமாஸ்தாக்கள் மட்டுமல்ல, நானூறு, ஐந்நூறு என்று வாங்கும் அதிகாரிகள் கூடப் பரபரப்புடன் சம்பளத்தைப் பெறுவதற்கு ஓடுவார்கள்.

"மற்றவர்களைப் போல, அவரும் சம்பளம் வராதா?" என்று கவலைப்பட்டு ஏங்கிய காலம் ஒன்று உண்டு. ஆனால், அந்த அனுபவங்களெல்லாம் இப்பொழுது காலத்தின் ஆழத்தில் புதைக்கப்பட்டு மறைந்து விட்டன.

* * *

முதல் தடவையாகச் சுந்தரேசன் சென்னைக்கு வந்தபோது அவரிடம் இருந்தவை—இடுப்பு வேஷ்டி, மேல் சட்டை, ஆறாவது பாரம் தேறியதை ஊர்ஜிதப் படுத்தும் அத்தாட்சிப் பத்திரம், எட்டணுக் காசு, இவ்வளவுதான்.

எழும்பூர் புகை வண்டி நிலையத்தில் அவர் இறங்கியபோதே, அவரை எதிர் கொண்டழைத்தாள், அதிர்ஷ்ட தேவதை! இல்லாவிட்டால், ஸ்டேஷனுக்கு வெளியே வந்ததுமே, மார்க்கன் கம்பெனியின் முதலாளியான மார்க்கண்டேயனின் அபிமானத்தை அவர் பெற்றதற்கு வேறு என்ன காரணம் கூற முடியும்?

மார்க்கண்டேயன் யாரையோ அழைத்துச் செல்வதற்காக ஸ்டேஷனுக்குக் காரில் வந்து கொண்டிருந்தார். வேகமாக ஓடி வரும் காரின் ஹாரன் ஒலியைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் கிழவி ஒருத்தி தலையில் கூடையுடன் சாலையின் நடுவே சென்றாள். ஒரு கணம்தான்! மயிரிழை தப்பியிருந்தால் கூடக் கிழவி காரில் அடி பட்டிருப்பாள். நல்ல வேளையாகப் பேந்தப் பேந்தச் சாலையை நோக்கி விழித்துக் கொண்டிருந்த சுந்தரேசன், கிழவியை அப்பால் இழுத்து விட்டார்!

கார் நின்றது. மார்க்கண்டேயன் இறங்கி வந்தார். சுந்தரேசனின் தைரியத்தைப் பாராட்டி அவரைப் பற்றி விசா

ரித்தார். சுந்தரேசனுக்கு வேலையும் கிடைத்தது!

விற்பனைப் பிரிவின் மானேஜராக வருவதற்குள் சுந்தரேசன் எவ்வளவு அவதாரம் எடுத்து விட்டார். முதலில் சாதாரணக் குமாஸ்தாவாக யிருந்து படிப்படியாக முன்னேறியது சரித்திரத்தில் பொறிக்கப்பட வேண்டிய சாதனைதான். அவருடைய அயராத உழைப்பையும் தன்னம்பிக்கையையும் மார்க்கண்டேயன் ஆரம்பத்திலேயே நன்றாக உணர்ந்து கொண்டு விட்டார்.

சுந்தரேசனுக்குத் திருமணம் நிகழ்ந்தது. அந்தப் புண்ணியத்தைக் கட்டிக் கொண்டவர், அவருடைய அலுவலக நண்பர் நாராயணன்.

பிறந்ததிலிருந்து துன்பத்தைத் தவிர வேறு ஒன்றையும் அறியாத சுந்தரேசனின் வாழ்க்கை இன்பத்தின் சிகரமாக விளங்கியது. கை நிறையச் சம்பளமும் கருத்துடன் கவனிக்கும் ஆசை மனைவியும் கிட்டியதோடு மட்டுமல்ல; திருமணமான ஐந்து ஆண்டுகளுக்கெல்லாம் செல்வத்துக்கெல்லாம் மேலான செல்வமாகப் பாபு பிறந்தான். சுந்தரேசன் உலகையே மறந்தார். அப்போதெல்லாம் வாழ்க்கை என்றால் இன்பம் என்றுதான் அவருடைய அகராதி தெரிவித்தது!

ஆனால், வெகு சீக்கிரத்திலேயே அவருடைய அகராதிக்குப் புதிய பதிப்புப் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டது!

பேரிடி தான் சுந்தரேசனுக்கு. ஒரு இடியாக இருந்தால் தாங்கிக் கொண்டிருப்பார். ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்று என்றால்......?

பாபுவுக்கு வயிற்றில் கட்டி. முதலில் கவனிக்கவில்லை. கடைசி நேரத்தில் டாக்டரிடம் காட்டியபோது கையை விரித்து விட்டார், அவர்.

தாயாரின் நெஞ்சு துக்கத்தைத் தாங்க முடியாமல் தவித்தது. உள்ளத்தைப் பற்றிய நோய். அவர் வீடு ஆஸ்பத்திரியாகவே மாறியது.

பாங்கியிலிருந்த பணம் கரைவதைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. அவர் யாருக்காகப் பணம் சேர்த்து வைக்க வேண்டும்? அவருடைய மனைவி மட்டும் பிழைத்தெழுந்து விட்டால்...!

அன்று முதல் தேதி. சம்பளப் பட்டியலில் கையெழுத்துப் போடப் போன போது 'வாழ்த்துக்கள்' என்று கைகுலுக்கினர் அலுவலகக் காஷியர்.

"என்ன ஸார், விஷயம்?"

"உங்களுக்குச் சம்பள உயர்வு, ஸார். முப்பது ரூபாய் கூட்டியிருக்கிறது."

மனைவியிடம் சந்தோஷச் செய்தியைத் தெரிவிக்க வீட்டுக்கு ஓடோடி வந்தார் சுந்தரேசன். அவருடைய மனத்துக்கு இந்தச் செய்தியாவது தெம்பு கொடுக்காதா என்ற நப்பாசை.

"பாக்கியம்... பாக்கியம்...... எனக்குச் சம்பளம்......"

படுக்கையில் கிடந்த பாக்கியம், அவருடைய பரபரப்பைக் கண்டு கண்ணைத் திறந்து பார்க்கவே இல்லை!

• • •

வாழ்க்கை வறட்சியாகப் போய் விட்டது சுந்தரேசனுக்கு.

மறுபடியும் தனிமை!

முந்நூற்றைம்பது ரூபாயை எப்படிச் செலவழிப்பது? செலவுக்குப் பணம் போதவில்லையே என்று எல்லோரும் தவித்துக் கொண்டிருந்த போது



சுந்தரேசன் தம் வருமானத்தை எப்படிச் செலவு செய்வது என்று தெரியாமல் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்!

சுந்தரேசனைப் பொறுத்த வரையில் முதல் தேதியும் முப்பதாம் தேதியும் ஒன்றுதான். 'கையில் பணம் இல்லை' என்ற நிலையே அவருக்கு ஏற்பட்டதில்லை. லட்சியமில்லாத வாழ்க்கையில் ரூபாய்களின் சலசலப்புக்கு என்ன வேலை? அவை பாங்கியில் பத்திரமாகத் தூங்கிக் கொண்டிருந்தன.

பாபு மட்டும் இன்று உயிரோடிருந்தால் அவனுக்குப் பன்னிரண்டு வயதாகி இருக்கும். சட்டையும் நிஜாரும் அணிந்து கொண்டு பள்ளிக்குப் போய் வருவான். 'அப்பா, அப்பா' என்று கூவிக்கொண்டே அவர் காரியாலயத்திலிருந்து திரும்பி வந்ததும் அவரைச் சுற்றிச் சுற்றி வருவான். சினிமாவுக்குப் போக வேண்டுமென்று தொந்தரவு செய்வான். பெப்பர்மிண்ட், பிஸ்கட் வேண்டுமென்று அடம் பிடிப்பான்; சைக்கிள் வேண்டும் என்று பிடிவாதம் செய்வான்!

"மாமா!"

சிந்தனையில் ஆழ்ந்திருந்த சுந்தரேசனின் செவிகளில் வார்த்தை குறுகுறுத்தது. குரல் வந்த திக்கில்—வாசற்படியருகே—பார்த்தார் அவர். பத்துப் பன்னிரண்டு வயதுப் பையன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். அவர் மனத்தைப் பிரமை நிறைத்தது. அவர் பிள்ளை பாபுவா வந்து விட்டான்?

அவர் தம்மை மறந்து, "பாபு......!" என்று அழைத்தார்.

"பாபு இல்லே, மாமா! கோபு."

சுந்தரேசன் கண்களைக் கசக்கிக் கொண்டார். ஒரு கணத்துக்குள் உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டி விட்டது. நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தார். வாசற்படியருகே நின்றுகொண்டிருந்த கோபுவை ஒட்டினாற் போல் ஐந்தாறு வயதுப் பெண் ஒருத்தியும் தயங்கியபடி நின்று கொண்டிருந்தாள்.

"மாமா...!"

"வா, அப்பா! யார் நீ? உனக்கு என்ன வேணும்?"

கோபுவும் அவன் தங்கையும் உள்ளே வந்தார்கள்.

"மாமா, நான் அடுத்த தெருவிலே இருக்கிறேன்! இரண்டாவது பாரம் படிக்கிறேன்..."

"உம்?"

"ரொம்ப ஏழை. பள்ளிக்கூடச் சம்பளம் கட்டப் பணம் இல்லே. அபராதத்தோடு பணம் கட்டுவதற்கு நாளைய தினம்தான்

கடைசி நாள். நாளைக்குள் சம்பளம் கட்டவில்லை என்றால் பெயரை அடித்து விடுவார்கள். அப்புறம் பள்ளிக்கூடம் போக முடியாது!''

இருதயத்திலே இரக்கத்தைக் கசியச் செய்யும் குழந்தை கோபுவின் வார்த்தைகளைக் கேட்டதும் சுந்தரேசனின் மனக் கண்களில் அவருடைய பால்யப் பருவம் உருவெடுத்து வந்தது. அவர் என்ன பசையுள்ள குடும்பத்திலா பிறந்திருந்தார்? அவரைச் சிறு வயதிலேயே தவிக்கவிட்டு விட்டு அவர் தாய் தந்தையர் விண்ணுலகம் எய்தி விடவில்லையா? அவர் தம் சிற்றப்பாவின் வீட்டில் இருந்து கொண்டு படிக்கும் பொழுது எத்தகைய சிரமங்களுக்கெல்லாம் இலக்கானார்? அவருடைய சிற்றப்பா விழிகளில் விரலை விட்டு ஆட்டி அவரை எப்படியெல்லாம் சித்திரவதை செய்து விட்டார்? அந்த சிரமங்களையும் தாண்டி இந்த நிலைக்கு அவர் வந்ததற்குக் கடவுளின் கருணையைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்? தம் நிலையை நினைத்துப் பார்த்த அவருக்கு அந்தப் பையனைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அவா உந்தித் தள்ளியது.

''ஏன், கோபு! உன் அப்பா என்ன பண்ணுகிறார்?'' என்று கேட்டார்.

'' அவர்......அவர்......செத்துப் போய் விட்டார்.''

''த்ஸொ, த்ஸொ! அம்மா?''

'' இருக்கிறாள்!''

'' இந்தப் பெண் யார்?''

'' என் தங்கை!''

''பெயர்?''

'' லக்ஷ்மி!''

சுந்தரேசன் லக்ஷ்மியை உற்றுப் பார்த்தார். அழகான சிறிய வட்ட முகம். பால் மணம் மாறவில்லை. மோவாய்க் கட்டையின் அமைப்பில் ஒரு தனிக் கவர்ச்சி. முகத்தில் வீசிய ஒளியில் மலரின் மிருதுத் தன்மையைத் தூரத்திலிருந்தே உணர முடிந்தது. கறுத்து அடர்ந்திருந்த கேசம் முன்புறம் பிசிறிப் பிசிறி இருந்தது. சட்டையும் பாவாடையும் உயர்ந்த ரகத் துணியாயிருந்தால் அரசகுமாரிதான்!

'' லக்ஷ்மி, இங்கே வா!''

அண்ணனை ஒட்டிக் கொண்டாள், அவள் பயத்தில்!

'' வரமாட்டாய், நீ? சரி, நீ பள்ளிக்கூடத்திலே படிக்கிறாயா?''

லக்ஷ்மி தலையை ஆட்டினாள்.

'' எத்தனாவது?''

'' ஒண்ணாவது!''



நிலப் பிரச்னை மிக முக்கியமான பிரச்னையாகி, நிலச் சீர்திருத்தம்பற்றி எங்கும் பேசப்படும் இந்நாளில், 'தஞ்சை ஜில்லா விவசாயிகள் தொழிலாளர்கள் நிலக்குவாரன்தாரர்கள் நல உரிமைச் சங்க'த்தின் ஆண்டுவிழா சென்ற ஜூன் மாதம் 9, 10 தேதிகளில் தஞ்சை ஜில்லா மணக்கால் அய்யம் பேட்டையில் சர்தார் ஏ. வேதரத்தினம் அவர்கள் தலைமையில் மந்திரி திரு பக்தவத்சலம் மகாநாட்டைத் திறந்து வைக்க வெகு விமரிசையாக நடந்தது. பல முக்கியமான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. தஞ்சை ஜில்லாவின் பல பகுதிகளிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர். இந்தவிழாவில் ஸ்ரீமதி டி. என். அனந்த நாயகி, திரு எஸ். எம். வின்சென்ட், திரு ஆர். எஸ். மணி பாரதி, மத்திய சங்கத் தலைவர் திரு கே. பெரியசாமி, காரியதரிசி திரு. டி. எம் ராஜப்பா முதலியவர்கள் பங்கெடுத்துக் கொண்டனர்.

"ஏன், லக்ஷ்மி! நீ என்னிடம் வர மாட்டாயா?"

சுந்தரேசன் மறுபடியும் கெஞ்சுவதைக் கண்டு கோபு சிபாரிசு செய்தான்.

"போ, லக்ஷ்மி! மாமா ரொம்ப நல்லவர். பார்த்தியா, உனக்கு ஆப்பிள் கொடுத்திருக்கிறார்!"

லக்ஷ்மி தயங்கினாள். சுந்தரேசன் எழுந்து சென்று கோபுவையும் லக்ஷ்மியையும் அணைத்துக் கொண்டார். அவர் உடல் முழுவதும் ஒரு மின் உணர்ச்சி பெருகிப் பரவியது. பனிப்பாறையை அணைத்துக் கொண்டாற் போல அவரது உடல் குளிர்ந்தது.

பத்து ஆண்டுகளாக எதற்கோ ஏங்கிக் கொண்டிருந்த அவர் இதயம் ஆனந்தக் கூத்தாடியது.

"கோபு, இனிமேல் மாதா மாதம் உன் பள்ளிக்கூடச் சம்பளத்தை நானே தருகிறேன். புஸ்தகம் வாங்க, சட்டைத் துணி வாங்க; எல்லாவற்றுக்கும் தருகிறேன். லக்ஷ்மி, உனக்கும்தான்!...... நாளைக்குச் சாயந்திரம் வாங்கோ இரண்டு பேரும்..."

சுந்தரேசனுக்கு ஏனோ தொண்டையை அடைத்தது. அந்த உணர்ச்சி வசத்துடனே இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து வந்து கோபுவிடம் கொடுத்தார்.

ரூபாயைப் பெற்றுக் கொண்டு சந்தோஷத்துடன் கோபுவும் லக்ஷ்மியும் வீட்டைக் கடந்து கொண்டிருந்தனர். சுந்தரேசனுக்கு என்றுமில்லாத உவகை. கண்ணுக்கு மறையும் வரை அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, 'உஸ்...' என்று நீண்டதொரு பெருமூச்சு விட்டார், மகத்தான காரியத்தைச் சாதித்து விட்டவரைப் போல!

ஆமாம், இன்றைய தினம் அவருக்கு முதல் தேதி! வாழ்க்கையிலேயே முதல் தரமான தேதி! சுந்தரேசனின் உள்ளத்தை அமைதி சூழ்ந்து கொண்டது.

"பேஷ், பேஷ்!..." சுந்தரேசன் சிரித்தார். "ராத்திரிக்கு இங்கே சாப்பிடுகிறாயா, லக்ஷ்மி!"

இந்தக் கேள்வியை எதற்காகக் கேட்கிறோம் என்பது அவருக்கே புரியவில்லை. லக்ஷ்மியுடன் ஏதாவது பேச வேண்டும் போலிருந்தது.

'ஊஹூம், மாட்டேன். அம்மா என்னை அடிப்பாள்..."

சுந்தரேசன் ஏனோ தமக்குள் சிரித்துக் கொண்டார். அவர் மனித ஜாதியோடு நெருங்கிப் பழகிப் பத்து வருஷங்களுக்கு மேல் ஆகிவிட்டது. எத்தனையோ கல்யாணங்களுக்கும் ஆண்டு நிறைவுகளுக்கும் அவருக்கு அழைப்பு வரும். உல்லாஸமாகப் பொழுது போக்கி விட்டு வருவோமே என்பதற்காகக்கூட அவர் போக மாட்டார். நாற்பது, ஐம்பது என்று பணத்தைக் கொட்டிப் பரிசு வாங்கி அனுப்பி விடுவார்......அவ்வளவுதான்!

எழுந்து சென்று அலமாரியிலிருந்து இரண்டு ஆப்பிள் பழத்தைக் கொண்டு வந்து லக்ஷ்மியிடம் நீட்டினார்.

குழந்தைக்கு எப்பொழுது

டுமெக்ஸ்

பால் உணவைக் கொடுக்க


ஆரம்பிக்க வேண்டும்?

தாய்ப் பால் குறைந்து புட்டிப்பால் கொடுக்க நேரிடும் போது மட்டுமே யன்றி இதற்கு முன்பு இல்லை. விளம்பரங்களில் என்ன சொல்லப்பட்ட போதிலும் குழந்தைக்குத் தாய்ப்பாலைப் போல் வேறு எதுவும் ஆகாது. தாய்ப்பாலுக்கு அடுத்ததாக டுமெக்ஸ் பால் உணவே மிகவும் நல்லது என்று நீங்கள் சந்தேகமின்றி கொடுக்கலாம். குழந்தைக்கு புட்டிப்பால் கொடுக்க அவசியம் ஏற்படும் போது டுமெக்ஸ் பால் உணவையே கொடுக்க ஆரம்பியுங்கள். இது நிர்பயமானது. போஷாக்கு அளிக்க வல்லது. உங்கள் பணத்திற்கு முழு பொறுமானம். ஆகவே எப்போதும் டுமெக்ஸ்ஸையே வாங்குங்கள்.

டுமெக்ஸ்

பால் உணவு

உங்கள் குழந்தைகளுக்கு டுமெக்ஸ் பால் உணவைக் கொடுத்து அவர்களின் வளர்ச்சியைக்கவனியுங்கள்


VT. 1510 (a)
கஷ்டமான நாட்களில்
ஆச்சரியமான நிவாரணி
ஸாரிடான்
வலியை
விரட்டுகின்றது
நிவாரணமளிக்கிறது
ஸாரிடான், வலியை உடனே நீக்குகிறது—பெரும்பாலும் ஒரு இரண்டு வில்லையே போதும்.
இதமளிக்கிறது
ஸாரிடான், உங்கள் நரம்புகளுக்கு சாந்தியளிக்கிறது. வலியினால் உண்டான சங்கடமான உணர்ச்சியை நீக்கிவிடுகிறது.
தெம்பூட்டுகிறது
ஸாரிடான், உங்களுக்கு இலேசாக உற்சாகமளிக்கிறது. சில நிமிஷங்களில் மறுபடியும் சௌகரியமாகவும், பலத்தமாகவும் உணரச் செய்கிறது!
Saridon
வயிற்றுக்கோளாறுகளோ,
பின் தளர்ச்சியோ
கொடுப்பதில்லை.
பெண்கள் 'அந்த கஷ்டமான நாட்களில்' ஸாரிடானை ஒரு ஆச்சரியமான உதவியாய்ச் சொல்கிறார்கள். ஸாரிடான் உங்கள் வயிற்றைக் கெடுக்காமலும், சோர்வு உண்டாக்காமலும் பெரும்பாலும் உடனேயே வலியிலிருந்து நிவாரணம் அளிக்கிறது.
ஆனால் இது அத்துடன் நிற்காமல் மேற்கொண்டும் உதவி வளிக்கின்றது. அநேகம் பெண்கள் உணரும் கவலையான நிலையை நிறுத்து நேரத்திலெல்லாம் தணிக்கும். பின் உங்களை நிதானத்துடனும் சந்தோஷமாயுமிருக்கச் செய்கிறது. விரைவில் நீங்கள் தெம்புடனும் மறுபடியும் சுறுசுறுப்புடனும் இருப்பீர்கள்.
உங்களிடம் எப்பொழுதும் கொஞ்சம் ஸாரிடான் வில்லைகளை வைத்திருங்கள். இது ஏன் சாதாரண வலி மருந்தினினும் சிறந்தது என்பதை உணருவீர்கள்.
ஒரு வில்லை 2 அணா ஒவ்வொரு வில்லையும் ஒரு பூர்த்தியான டோஸ். ஆஸ்பிரின் கலக்காதது. (அஸிடில் ஸாலிஸிலிக் ஆஸிட்)
ஸாரிடான் ரேடியோ தரங்—ஸாரிடான் சார்பில் அளிக்கும் இந்தியாவின் மிகச்சிறந்த சினிமா நிகழ்ச்சியை ரேடியோ ஸிலோனில் ஒவ்வொரு திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு 41 மீட்டர்களில் கேளுங்கள்.



மலர்ந்த தாமரை

சதி

தோட்டத்து மகிழ மரத்தடியில் நின்று எதையோ கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள் சிறுமி விஜயா. அங்கே காம்பவுண்டுச் சுவரில் சிறிது 'கல்' பெயர்ந்து பிறை போன்றிருந்த இடத்தில் கருங்குருவி யொன்று கூடு கட்டி அதில் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்திருந்தது. அதிலுள்ள சின்னஞ்சிறு குஞ்சுகள் 'ஆ, ஆ' வென்று வாயைத் திறந்து கொள்வதும், தாய்க்குருவி சற்றைக் கொரு முறை அவற்றிற்கு ஆகாரம் கொண்டுவந்து தருவதும்தான் அவள் கவனத்தை மிகவும் கவர்ந்திருந்தது.

"நான்கூடத் தம்பி மோகனுக்கு அன்றைக்குச் சாதம் ஊட்டினேனே! வாயைத் திற என்று சொல்லுறபொழுது 'ஆ' வென்று வாயைத் திறந்து, சாதத்தை வாய் அருகில் கொண்டு போனதும் டக்கென்று வாயை மூடிக்கொண்டு குறும்பு செய்தானே, போக்கிரிப் பயல்! அம்மாதிரி யெல்லாம் இந்தக் குஞ்சுகளுக்கு விளையாடத் தெரியுமா!"

இப்படி அவள் மனத்தில் எண்ணங்கள் ஓடின. உடனே மோகனின் நினைவு அவள் மனத்தில் ஏக்கத்தை வருவித்துக் கண்களில் நீரைத் தேக்கியது.

"மியாவ்! மியாவ்!"

ஐயையோ! எங்கிருந்தோ வந்த பூனை குருவிக் கூட்டை நோக்கிப் பாய்கிறதே! தாய்க்குருவி கீச், கீச்சென்று கத்தி உதவிக்கு ஆள் தேடுகிறதே!—சட்டென்று ஒரு பெரிய கல்லை யெடுத்துப் பூனையின்மேல் வீசி யெறிந்தாள் விஜயா.

'மியாவ்' என்று கத்திக்கொண்டு ஓட்டம் பிடித்தது பூனை. அடிமேல் அடிவைத்து வந்து கூட்டினுள் எட்டிப் பார்த்தாள். பயத்தினால் நடுங்கிக் கொண்டிருந்த குஞ்சுகளைப் பயம் நீங்கிய தாய்க்குருவி தன் அலகினால் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தது.

விஜயாவின் மனத்தில் பழையபடி மோகனின் நினைவு எழுந்தது. "இப்படித்தானே மோகனை அழைத்துக் கொண்டு போகச் சுவாமி திடுதிப்பென்று வந்திருக்கிறார்! அப்பொழுது நான் அருகில் இருந்திருந்தால் இந்தப் பூனையை அடித்தமாதிரி அவரையும் அடித்து......

"தப்பு, தப்பு—சுவாமியை ஒருவரும் ஒன்றும் செய்ய முடியாது என்று அம்மா சொன்னாளே! அப்பொழுது நான் மட்டும் அருகில் இருந்தால் அவரிடம் கெஞ்சியாவது மோகனை விட்டு விட்டுப் போகச் சொல்லி யிருப்பேன்! இந்த அம்மா, அத்தை இவர்களுக் கெல்லாம் ஒன்

றுமே தெரியவில்லை. பேசாமல் அழுதுகொண்டிருக்கிறார்கள். எல்லாரையும் . அதிகாரம் பண்ணுகிற அப்பாகூட அல்லவா பேசாமல் இருந்திருக்கிறார்! சுவாமி அவ்வளவு பொல்லாதவரா, என்ன!

"சுவாமீ! பகவானே! என் தம்பி 'மோகனைத் திருப்பிக்கொண்டு வந்து விட்டுவிடுங்கோ. வெளியிலிருந்து யாராவது வந்தால் அவர்களிடம் போகப் பயந்து அழுவானே, பாவம்! அவனை ரொம்பப் பயமுறுத்தாதீர்கள். நானும் இனிமேல் அவனோடு சண்டை போட மாட்டேன். அவன் பொம்மையைப் பிடுங்கிக் கொள்ள மாட்டேன். 'கறுப்பு மோகன்' என்று பரிகாசம் செய்ய மாட்டேன்!" என்று சொல்லிப் 'பட், பட்' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டாள்.

அப்படியே மகிழ மரத்தடியில் உட்கார்ந்து கொண்ட அந்த ஏழு வயதுச் சிறுமியின் உள்ளம் ஈசுவரனின் லீலைகளுக்கு என்னென்னவோ வியாக்கியானங்கள் செய்து கொண்டிருந்தது. வயதுக்கு மீறிய அசாதாரண விவேகமும், அதே போல் பிடிவாதமும் கொண்டவள் விஜயா.

"நேற்றுக் காலையில், 'அக்கா! நானும் பள்ளிக்கூடம் வருகிறேன்' என்று அழுதான் மோகன். அப்பொழுது நான், 'நீயெல்லாம் அங்கே வரக்கூடாது. போகிற வழியிலே கோவில் இருக்கிறது, பார்! அதில் இருக்கிற சுவாமிக்குக் கோபம் வந்துவிடும். அப்புறம் உன்னைப் பிடித்துக் கொண்டு போய் விடுவார்' என்று சொன்னேன். நான் ஏன் அப்படிச் சொன்னேன்!

"ஆமாம்! அன்றைக்கு வெள்ளிக்கிழமை. அம்மா கொழுக்கட்டை செய்து கொண்டிருந்தாள். அதைப் பார்த்து எனக்கும் செய்ய வேணும்போல் ஆசையாக இருந்தது. 'அம்மா! நானும் செய்கிறேனே!' என்று சொல்லிக் கொண்டு போய் உட்கார்ந்தேன். 'நன்றாயிருக்கிறது. நீயெல்லாம் செய்யக் கூடாது. கோவிலுக்குக் கொண்டு போய் நைவேத்யம் பண்ணவேணும். நீ கொழுக்கட்டை பண்ணினால் சுவாமிக்குக் கோபம் வந்துவிடும்!' என்று சொல்லி அம்மா என்னை விரட்டி விட்டாள். ஓகோ! பெரியவர்களுக்குப் பிடிக்காத காரியத்தை யெல்லாம் குழந்தைகள் செய்தால் சுவாமிக்குக் கோபம் வந்துவிடும் போலிருக்கிறது என்று எண்ணிக் கொண்டேன்.

"மோகன் பள்ளிக்கூடம் வருகிறேன் என்று சொன்னது எனக்குப் பிடிக்கவில்லை. 'எத்தனை சின்னக் குழந்தையை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறாள் பேய்' என்று எல்லாரும் பரிகாசம் பண்ணுகிறார்களே! அதனால்தான் அழைத்துக் கொண்டு போகத் தோன்றவில்லை.

"இப்படித்தான் ஒரு நாளைக்குப் போனால் போகிறது என்று அம்மாவுக்குத் தெரியாமல் அழைத்துக் கொண்டு போனேன். அங்கே ஓரேயடியாக ரகளை பண்ண ஆரம்பித்து விட்டான். அதனால் வாத்தியாரம்மாள், 'சின்னக் குழந்தையை ஏன் அழைத்துக் கொண்டு வருகிறாய்!' என்று கோபித்துக் கொண்டாள். பசங்களெல்லாம் பரிகாசம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அப்புறம் நல்ல வேளையாக அம்மா அவனை எங்கெல்லாமோ தேடிப் பார்த்து விட்டுப் பள்ளிக்கூடத்துக்கு வந்து அழைத்துப் போனாள். அதிலிருந்து தினமும் அவனுக்குத் தெரியாமல் தான் நான் பள்ளிக்கூடத்துக்கு ஓடிப் போவேன்.

"அவனுக்கு மூன்று வயசுதானே! நான் அவனைவிடப் பெரியவள் இல்லையா! அம்மா சொன்னாற்போல் எனக்குப் பிடிக்காத காரியத்தை அவன் செய்தால் சுவாமிக்குக் கோபம் வராதா, என்ன! அதனால்தான் நான் அவனிடம் அப்படிச் சொன்னேன்!

"நான் பள்ளிக்கூடம் போன பிறகு, வெகு நேரம் அழுது கொண்டே இருந்தானாம். மத்தியானம் ஜுரம் வந்ததாம். சாயங்காலம் வீட்டுக்கு வந்த பொழுது மோகன் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தான். அம்மா, அப்பா, அத்தை எல்லோருமாக அவனைச் சுற்றிக் கவலையோடு உட்கார்ந்திருந்தார்கள். டாக்டர் வந்து ஒரு ஊசியைக் குத்தி விட்டு அப்பாவிடம் ஏதோ சொல்லி விட்டுப் போனார்.

"நான் மெல்ல அப்பாவிடம் போய், 'என்னப்பா மோகனுக்கு! ஏன் இப்படிப் படுத்துக் கொண்டிருக்கிறான்!' என்று கேட்டேன்.

"'அவனுக்கு உடம்பு சரியாயில்லை. நீ தொந்தரவு செய்யாமல் போய் விளையாடு' என்றார்.

"'நான் எப்படித் தனியாக விளையாடுகிறதாம்!' என்று கேட்டேன்.

"அப்பொழுது அத்தை, 'இவளை நான் அழைத்துக் கொண்டு போகிறேன்' என்று சொல்லி என்னைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போனாள். சாதத்தைப் பிசைந்து கொண்டு வந்து 'இதைச் சாப்பிடு, அம்மா!' என்றாள்.

"என்ன தான் சண்டை போட்டாலும் மோகன் இல்லாமல் தனியாக நான் ஒரு நாளும் சாப்பிட்டதில்லை. அதனால் சாப்பிடவேயில்லை. படுத்துக் கொண்டு விட்டேன்.

"மறு நாள் காலையில் வீட்டுக்குப் போனால் எல்லாரும் அழுது கொண்டிருந்தார்கள். மோகன் படுத்திருந்த இடம் காலியாகக் கிடந்தது. அம்மாவிடம் போகவே பயமாயிருந்தது. அப்பாவிடம் போய், 'மோகன் எங்கே அப்பா!' என்று கேட்டேன். அழுததினால் அவர் கண்களெல்லாம் சிவந்து வீங்கிப்போயிருந்தது. தொண்டை கம்மினாற்போல் மெதுவாக, 'மோகனைச் சுவாமி கொண்டு போய் விட்டார், அம்மா!' என்றார்.

"எனக்குப் பகீரென்றது. 'ஓ'வென்று அழுது விட்டேன். அப்புறம், 'ஏனப்பா அவனைச் சுவாமியிடம் கொடுத்தாய்! அவன் இல்லாமல் நான் தனியாக எப்படி இருக்கிறதாம்! அந்தச் சுவாமியிடம் சொல்லி என்னையும் கூட்டிக் கொண்டு போகச் சொல்லு' என்று பெரிதாக அழுது விட்டேன்.

"'அப்படியெல்லாம் சொல்லக் கூடாதடி, கண்ணே!' என்று சமாதானம் பண்ணினார்.

"அத்தை வந்து 'ராத்திரி கூடச் சாப்பிடவில்லையே, என் விஜிக்கண்ணு! இப்பொழுது கொஞ்சம் சாப்பிடுவாயாம்!' என்று கெஞ்சிக் கொஞ்சிப் பார்த்தாள்.

"ஹூம்! அருமைத் தம்பியைச் சுவாமியிடம் கொடுத்து விட்டு ...... எனக்கு ஒன்றுமே பிடிக்க வில்லை. ஒருவருக்கும் தெரியாமல் இங்கே ஓடி வந்து விட்டேன். நல்ல வேளை! வந்ததற்குக் குருவிக் குஞ்சுகளையாவது காப்



பாற்ற முடிந்ததே! இல்லையென்றால் அந்த பாழாய்ப் போன பூனை அல்லவா அவற்றைக் கொண்டு போய்க் கொலை செய்திருக்கும்!"

இத்தகைய எண்ணக் கூட்டிலே அடைபட்டிருந்த விஜயா குருவிக்கூட்டை நோக்கினாள். பழையபடி தாய்க் குருவி, குழந்தைகளுக்கு ஆகாரம் கொடுத்துக் கொண்டிருந்தது. 'நாம் யாருக்காவது உதவி செய்தால், சுவாமி நமக்கு உதவி செய்வார்' என்று வாத்தியார் அம்மாள் அன்றைக்குச் சொன்னாளே! 'நான் இன்று இந்தக் குஞ்சுகளைக் காப்பாற்றினதற்குப் பதிலாகச் சுவாமி என் தம்பி மோகனைத் திருப்பிக் கொடுத்து விடமாட்டாரா!' என்று எண்ணினாள்.

பின்னர் அவளுக்குத் தன் வகுப்பு உபாத்தியாயினி சொல்லிய 'துருவன் கதை' நினைவுக்கு வந்தது. 'என்னைவிடச் சின்னப் பையன் தவம் செய்து சுவாமியை நேரே பார்த்தானாமே! அதுபோல் நாமும் தவம் செய்தால் என்ன!' என்று எண்ணிக் கண்களை மூடிக் கொண்டு, தான் படத்தில் கண்ட துருவனைப் போல் உட்கார்ந்து கொண்டாள்.

அப்பொழுது மழை இலேசாகத் தூறிக் கொண்டிருந்தது.

"விஜி, விஜயா! எங்கே யிருக்கிறாய்!" என்று அவள் அத்தையின் குரல் வந்தது. கண்களை மூடிக் கொண்டு அவள் உட்கார்ந்திருக்கும் நிலை கண்டு, "என்னடி, இது! மழையிலே நனைந்து கொண்டு என்ன செய்கிறாய்!" என்று கேட்டு அவளை அப்படியே 'லபக்' கென்று தூக்கிக் கொண்டாள்.

அளவுக்கு மீறிய அன்பினால் அத்தை செய்த காரியம் விஜயாவுக்குக் கோபத்தை உண்டு பண்ணியது. "போ, அத்தை! நான் சுவாமியை வரவழைத்து மோகனை விட்டு விடச் சொல்வதற்காகத் தவம் செய்ய ஆரம்பித்தேன். நாரதர் மாதிரி வந்து நீ கலைத்து விட்டாயே! அத்தையாம், அத்தை!" என்று சொல்லித் திமிறிக் கொண்டு ஓடினாள்.

"ஓகோ, நீ தவம் செய்தால் சுவாமி வந்து விடுவாராக்கும்! சுவாமியும் வரமாட்டார், மோகனையும் தரமாட்டார். நீ மழையிலே நின்றால் உன்னையும் பிடித்துக் கொண்டு போய் விடுவார், தெரியுமா!" என்று அதட்டினாள் அத்தை. "பிடித்துக் கொண்டால் பிடித்துக் கொள்ளட்டும்" என்று சொல்லிப் பழையபடி தவத்துக்கு உட்கார்ந்து விட்டாள் விஜயா.

"யாராவது எதையாவது சொன்னால் கிராமபோன் பிளேட்டில் பதிவாகிறமாதிரி அவள் பிஞ்சு நெஞ்சில் பதிந்து விடுகிறது. நீ சொன்னதும் நிஜமென்று நினைத்துக்கொண்டு மழையிலே நனைவதைப் பார். மோகனையே நினைத்துக்கொண்டு ஏங்கும் அவளிடம் இப்படியெல்லாம் பேசலாமா!" என்று தம் தங்கையைக் கடிந்து கொண்டார் விஜயாவின் அப்பா. பிறகு விஜயாவை நோக்கி, "நீ வா அம்மா, விஜி! என் சமர்த்தோன்னோ, நாம் இரண்டு பேருமாகச் சேர்ந்து சுவாமியைப் பிரார்த்திப்போம்!" என்று சமாதானம் செய்தார்.

மன ஏக்கத்தினாலும், மழையில் நனைந்ததாலும் அன்றிரவு கடுமையான ஜுரம் வந்து விட்டது விஜயாவுக்கு. தன் அருமைச் செல்வனைப் பிரிந்த அவள் தாயார் நிறைமாத கர்ப்பிணியாகவும் இருந்தாள். சோதனையைப்போல் நான்கைந்து குழந்தைகளைப் பறி கொடுத்திருந்த அவள், மிஞ்சியிருக்கும் தன் ஒரே மகளுக்கு ஒன்றும் நேராதிருக்க வேண்டுமே யென்று மிகக் கவலையினால் அதிர்ந்து போனாள். நாலைந்து நாட்கள் விஜயாவுக்கு ஜுரம் விடாமல் அடித்துக் கொண்டிருந்தது. வாய் ஓயாமல், "மோகன்! மோகன்!" என்று புலம்பினாள். "சுவாமி, அவனை ஒன்றும் செய்யாதீர்கள்!" என்று அரற்றினாள்.

திடுதிப்பென்று எங்கேயோ மிதந்து செல்வது போலிருந்தது விஜயாவுக்கு. ஒரே நீல நிறமான வானவெளியில் மலர்ந்த மல்லிகைகளைத் தெளித்தாற் போல் நக்ஷத்திரங்கள் மின்னின. யாரோ மோகனைக் கரகர வென்று இழுத்துப் போய்க் கொண்டிருந்தார்கள். ஒரு



ஜூன் மாதம் 11ந் தேதி ஸ்போர்ட்ஸ்மென் கிளப் துணைக்கிளைப் பகுதியை ஸ்ரீமதி பட்டம்மாள் வாஸன் துவக்கி வைத்தார். அந்தத் துவக்க விழாவை யொட்டித் தோட்டக்கார விசுவநாதன் அவர்களின் "ராஜா" என்ற நாடகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. அக் கலை நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொண்ட நடிகர்களையும் ஸ்ரீமதி வாஸன் அவர்களையும் மேலேயுள்ள படத்தில் காணலாம்.

வேளை அவர்தான் சுவாமியோ! அப்படி யிருந்தால் போய் அவரையே மோகனைத் தந்து விடும்படி கேட்டால் என்ன!

அட! ஆனால் இது என்ன வேடிக்கை! இப்பொழுது மோகனைக் காணோமே! அதோ, அவர் கையிலே வைத்துக் கொண்டிருக்கிற அந்தத் தாமரைப் பூவைப் பார்த்தால் மோகன் மாதிரி யிருக்கிறதே! ஓகோ! மோகனைத் தாமரைப் பூவாக மாற்றி விட்டாரா!

இப்படி எண்ணியதும் அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. 'ஓ' வென்று அழுது விட்டாள். அப்பொழுது சுவாமி அவளைப் பார்த்து, "ஏன் அம்மா, அழுகிறாய்! உனக்கு என்ன வேணும்!" என்று அன்புடன் அவள் முதுகில் தட்டிக் கேட்டார். அவளுக்குக் கொஞ்சம் தைரியம் பிறந்தது.

"என் தம்பி மோகனைப் பிடித்துக் கொண்டு வந்து தாமரைப் பூவாக்கி வைத்துக் கொண்டிருக்கிறீர்களே, எதற்காகவாம்! அவனில்லாமல் என்னால் தனியாகவே இருக்க முடியவில்லை. ஒன்று அவனைத் தந்து விடுங்கள். இல்லை, என்னையும் அம் மாதிரி பூவாக்கி விடுங்கள்" என்று விசும்பினாள் சிறுமி விஜயா.

"ரொம்பச் சமர்த்துக் குழந்தையாக இருக்கிறாயே! நீ யெல்லாம் இங்கே வரக்கூடாது, அம்மா! உன் தம்பி தானே வேணும், உனக்கு! உன் அம்மாவிடம் போய்ப் பாரு" என்று சொல்லி அழகாகப் புன்னகை புரிந்தார் சுவாமி. அடுத்த கணம் அவர் கையிலிருந்த தாமரைப் புஷ்பம் கீழே விழுந்து எங்கோ சென்றது. அதைப் பிடிக்க வேண்டும் என்று தாவினாள் விஜயா. ஐயையோ! உருண்டு உருண்டு கீழே விழுகிறாளே!

"அம்மா! அதோ மோகன்!" என்று அலறிப் படுக்கையி லிருந்து தாவினாள் விஜயா. அதைக் கண்ட அவள் தாயார் பயந்து, "குழந்தைக்கு என்னமோ வந்து விட்டது, நான் என்ன செய்வேன்!" என்று அலறி விழுந்து அப்படியே மூர்ச்சை யானாள்.

விஜயாவுக்குப் பரபரப்புடன் சிகிச்சை செய்த டாக்டர், அவள் தாயாரையும் அவசரம் அவசரமாகக் கவனிக்க வேண்டி வந்தது.

விஜயாவின் தாயாருக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்து விட்டு டாக்டர் திரும்பி வந்தபோது விஜயாவுக்கு ஜுரம் சற்றுக் குறைந்திருந்தது. மெல்லக் கண்களை விழித்துப் பார்த்தாள். "அப்பா! மோகனைச் சுவாமி தாமரைப் பூவாக்கி வைத்துக் கொண்டிருந்தார். நான் போய்க் கேட்டதும் கீழே போட்டார். பிடிக்கப் பார்த்தேன். பிடிக்க முடியவில்லை. உன் அம்மாவிடம் உன் தம்பி இருப்பான். போய்ப் பார் என்று சொன்னார். அப்பா! என் அம்மாவிடம் தம்பி வந்து விட்டானா!" என்று கேட்டாள் விஜயா.

அதைக் கேட்ட டாக்டர் காதோடு ஏதோ ரகசியமாகச் சொல்லவே, விஜயாவின் தந்தைக்கு முகம் மலர்ந்தது.

"ஆமாம், விஜயா! நாம் எல்லோரும் மோகனைக் 'கறுப்பு' என்று பரிகாசம் செய்வோம் அல்லவா! அதைப் பார்த்த சுவாமி அவனைத் தாமரைப் பூப்போல அழகாக ஆக்கி, விஷமம் பண்ணாத சமர்த்துப் பாப்பாவாகப் பண்ணி விட்டிருக்கிறார். இப்பொழுது அம்மாவின் அருகில் சமர்த்தாகப் படுத்துக்கொண்டிருக்கிறான். நீ பார்க்கிறாயா!" என்று கேட்டார். அவர் சொன்னதை யெல்லாம் ஆச்சரியத்தோடு கேட்ட விஜயா சந்தோஷத்துடன் துள்ளிக் குதித்துக் கொண்டு எழுந்தாள். ஜுரமெல்லாம் பறந்தோடி விட்டது.

அப்போது அங்கு வந்த அவள் அத்தை, "விஜி! சின்ன மோகனைப் பார்க்கிறாயா!" என்று அவளைத் தூக்கிக் கொண்டு ஹாலிலிருந்து ஓர் அறைக்குச் சென்றாள். அங்கே அவள் அம்மாவின் பக்கத்தில் அவள் கனவில் கண்ட தாமரை மலரைக் காட்டிலும் அழகான உருவத்துடன் சின்ன மோகன் படுத்திருந்தான். அவளுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. அத்தையை நோக்கி, "ஏன், அத்தை! சுவாமியைப் பார்க்க முடியாது என்று சொன்னாயே! நான் பார்த்தேனே! சுவாமி எவ்வளவு நல்லவராக இருக்கிறார், தெரியுமா! நான் கேட்டேன் என்பதற்காகத் தாமரைப் பூவாக ஆக்கியிருந்த மோகனை மறுபடியும் பாப்பாவாக்கித் தந்திருக்கிறார்!" என்று உற்சாகத்துடன் சொல்லி அக் குழந்தையைத் தன் மனம் கொண்ட மட்டும் கொஞ்சினாள். அச் சிறுமிக்குத் தம்பியிடம் இருந்த அன்பைக் கண்டு பெற்றோரின் கண்களில் நீர் துளித்தது. உலகமறியாத அச் சின்னஞ்சிறு குழந்தையோ தன் அருமை அக்காளைப் புரிந்து கொண்டாற் போல் தூக்கத்திலே தன் முகத்தைத் 'தாமரைமலர்' போல் மலர்த்தியது.

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor: Mi. Pa. Somasundaram

"எவ்வளவு கவர்ச்சியான புது மணம்!"

என்கிறார் *லலிதா*

"லக்ஸ் டாய்லெட்டின் புது மணம் அவ்வளவு மனதுக்கு இனியது. மலரைப் போன்றது — அதுவும் அதன் நறுமணம் பல மணி நேரம் தங்கி நிற்கிறது . . ."

இந்த சுத்தமான, வெண்மையான சோப்பின் நறுமணமுள்ள, மிருதுவான நுரை சருமத்தை அழகாகவும், மென்மையாகவும், தெளிவாகவும் வைத்திருக்கின்றது என்பதை, சினிமா நட்சத்திரங்கள் மட்டுமல்லாது, இந்தியாவிலுள்ள எல்லா அழகிய ஸ்திரீகளும் அறிந்து கொண்டிருக்கிறார்கள்.

பெரிய சைஸிலும் கிடைக்கும்



லக்ஸ்
டாய்லெட் சோப்


இந்தியாவில் தயாரித்தது

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 443-50 TM

REGISTERED No. M. 4392

Registered as newspaper in Ceylon



வாரம் ஒரு அணா செலவிற்கு பற்களுக்கு முழுப் பாதுகாப்பளிக்கிறது!

சாம்பல், கரிபோன்ற கரகரப்பான பொருள்கள் பற்களில் கீறல் விழச் செய்கின்றன. இந்த கீறல் வழியாக பாக்டீரியா புகுந்து கெடுதல் விளைவிக்கிறது. பற்கள் பூரண ஆரோக்கியத்தோடு இருக்க விஞ்ஞான முறையில் தயாரித்த ஒரு பல் துலக்கும் வஸ்து உங்களுக்குத் தேவை. ஆகையால் கிப்ஸ் டென்டிபிரிஸ் வாங்குங்கள். பற்களுக்கு பூரண ஆரோக்கியத்தைத்தரும் எல்லா பொருள்களையும் ஒன்று சேர்த்து கெட்டியாகச் செய்தது தான் கிப்ஸ். அன்றியும் ஒரு டூத்பேஸ்ட் செய்யும் எல்லா வேலைகளையும் அதன் பாதி விலைக்குச் செய்கிறது. இதை உபயோகிப்பது மிகவும் சுலபம். விரலையோ அல்லது புரஷையோ தண்ணீரில் நனைத்துக் கொண்டு கட்டியின்மேல் தேய்க்கவும். அதன் சுவையை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள். அன்றியும் அதன் மிருதுவான ஊடுருவிப் பாயும் நுரை உங்கள் பற்களை பளிச்சென்று வெண்மையாக இருக்கச் செய்யும்!



உங்களுக்குப் பிரியமான கிப்ஸின் கிளோசரோமில் சேர்ந்திருக்க விரும்பினால் கிப்ஸ் கிளோசரோமில் டென்டிபிரிஸ் கேளுங்கள். எல்லா இடங்களிலும் விற்கப்படும் வெள்ளை டப்பாவின் பெயரைக் கவனித்து வாங்குங்கள்.



நீலம், சிவப்பு, பச்சை டப்பிகளில்

கிப்ஸ் டென்டிபிரிஸ்